

கல்கி
30
காசு
KALKI 20-12-1959



நம்பிக்கை
யென்னும்
நல்லொளி

உள்ளக் கோவிலிலே நம்பிக்கை விளக்குண்டு நல்விளக்கு!
ஊக்கத்திற் கோய்வில்லை, நோக்கத்திற் கழிவில்லை; வெற்றியுண்டு!
துள்ளித் துயிலெழவே விடிவெள்ளி வேளையிலே தூண்டுகோலாய்த்
தென்றலெனப் பூபாளம் பாடிடுமே நம்பிக்கை! நல்லசகுனம்!
காடா யிருந்தநிலம் பொன்விளையச் செய்யாதோ வைரநெஞ்சு;
கருங்கல்லைக் கோபுரமாய்,காட்டாற்றை மின்னொளியாய் மாற்றிடாதோ!
வாடா மலரைப்போல் நம்பிக்கைப் பயிருண்டு, வாழ்க்கையுண்டு!
வருங்காலப் பயனுண்டு! களிநகையே கலகலக்கும் வீடுதோறும்!
உள்ளக் கோவிலிலே நம்பிக்கை அருளுண்டு, பாக்கியமுண்டு!
உலகத்து வாழ்வுக்கே மணியான பொருளுண்டு, மகிமையுண்டு!

இன்று,—சென்ற பல காலம்போலவே எமது தயாரிப்புக்கள் வீடுதோறும் ஒளிதுலங்க, உடல்நலமோங்க, இன்பமிலங்கத் துணைபுரிகின்றன; இதே சமயம் எமது ஊழியத்தின் இலட்சியமாக முன்னிற்பது...

நாளை,—நாளொரு மேனியாக வளரும் நல்வாழ்வு வேட்கை மேலும் மேலும் புதுப்புது முயற்சிகளை ஊக்குவிக்கப்போகும் காலம்; அதன்வழியே வளரும் புதுப்புது எண்ணங்கள், புதுப்புதுப் பண்டங்களோடு பரந்த முறையில் சிறந்த பணி புரிந்திடச் சித்தமாயிருக்கிறோம்...



ஜெமினியின்
மகத்தான
சமூகச் சித்திரம்
இரும்புத்
திரை
சிவாஜி கணேசன் • வைஜயந்திமாலா
பி.சரோஜா தேவி • பண்டரிபாய்
வசுந்தரா தேவி • எஸ்.வி.சுப்பய்யா
எஸ்.வி.ரங்காராவ் • டி.பாலசுப்ரமணியம்
ஜாவர் சீதாராமன் • எஸ்.ஆர்.ஜானகி
கே.ஏ.தங்கவேலு • டி.எஸ்.துரைராஜ்
வனஜா நடித்தது
கூடிய சீக்கிரம் வெளிவருகிறது

கல்கி பொருளடக்கம்

டிசம்பர் 20, 1959

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL WOOD
TOILET POWDER
T.S.R's
B. Saroja Devi



மலர் 19 இதழ் 21 ||| தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் ||| விகாரி ஹு மார்கழி 5உ

ஹைதராபாத் தீர்மானம்

சென்ற வாரம் ஹைதராபாத்தில் கூடிய அகில இந்திய சுதந்திரக் கட்சித் தலைவர்கள் பாரத நாட்டு மக்களின் கவனத்துக்கும் கவலைக்கும் உரியதோர் விஷயம் சம்பந்தமாக முக்கியமானதோர் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். சீன இந்திய எல்லையில் வந்திருப்பது பாரத மக்களுக்குப் பெரும் கவலையை அளித்திருக்கிறது. இதை யொட்டி, தில்லி மக்கள் சபையில் மிகத் தீவிரமான விவாதம் நடைபெற்றது. தேசபக்தி யுள்ள எல்லாக் கட்சிகளும் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பேசின. பாரத சர்க்கார் உடனடியாகத் தேச கௌரவத்தைக் காப்பாற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தியது. சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியாயினும், மக்கள் சபையில் நடந்த இவ்விவாதத்தை முழுமனத்தோடு வரவேற்று மேற்கொண்டு எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. அந்தத் தீர்மானம் முழுவதையுமே கீழே கொடுக்கிறோம்.

கம்யூனிஸ்ட் சீனு செய்துள்ள ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தேசத்தில் எழுந்துள்ள தீவிர உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் மக்கள் சபையின் விவாதங்கள் அமைந்திருப்பதை இந்தக் கட்சி வரவேற்கிறது. அத்துடன் கம்யூனிஸ்ட் சீனு ஆக்கிரமிப்புக்கு எதிராக ஜாக்கிரதையாக இருந்து உறுதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தியதைச் சுதந்திரக் கட்சியின் பொதுக் கமிட்டி வரவேற்கிறது.

தேசத்தின் பாதுகாப்பைக் கருதிச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுடன் கீழ்க்கண்டவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

1. பாகிஸ்தானுடன் நமக்குள்ள முக்கியமான பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். பாகிஸ்தானும் இந்தியாவும் இத் துணைக் கண்டத்துக்காக ஒரு பொது ராணுவக் காப்பு ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று பாகிஸ்தான் அதிபர் சொன்ன யோசனையைத் தீவிர ஆலோசனை நடத்தி ஏற்கப் பார்க்க வேண்டும்.

2. இந்தியாவுக்குத் தெற்கிலும், தென்கிழக்கிலும் உள்ள நாடுகளுடன் ஆலோசனை நடத்தி இப்பகுதியைப் பாதுகாப்பதற்கான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

3. அந்நிய உளவாளிகள் இந்தியாவுக்குள் நுழைவதையும், ஐந்தாம் படை நடவடிக்கைகள் எடுப்பதையும் உஷாராயிருந்து தடுக்க வேண்டும்.

4. உள்நாட்டில், நடக்கமுடியாத கொள்கைகளைப் பற்றிக் கொண்டு எடுத்துக் கொள்ளும் பரீட்சார்த்தமான காரியங்களை விட்டுவிட வேண்டும்.

பாகிஸ்தான் ஏற்பட்ட நாளிலிருந்து அதனுடன் நமக்கு எத்தனையோ தகராறுகள் உண்டு. ஆனால் அந்நியன் நம் தலைவாசலில் ஆக்கிரமிப்புச் சன்னத்தனாக நிற்கும்போது, அண்டை நாடான பாகிஸ்தானுடன் நட்பை வளர்த்துக் கொள்வதுதான் அறிவுடைமை; ராஜதந்திரம். ஒருநாடு வடக்கிலும் மேற்கிலும் பகை நாடுகளை வைத்துக்கொண்டு போராடிக் கொண்டே இருக்க முடியாது. இந்தியா பாகிஸ்தான் இரண்டுக்குமே விரோதியான அந்நிய பொது எதிரியைத் தாக்குவதில், இரண்டு அண்டை நாடுகள் ஒன்று சேர வேண்டும். ஒன்று சேர்ந்து நடவடிக்கை நடத்துவதிலேயே சிநேகம் வளரும். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சேர்ந்த ஒரு பொது ராணுவப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று வலுவில் வந்து சொல்லி யிருக்கிறார். இதைத் தீர யோசியாமல் பிரதமர் நேருஜி அவசரப்பட்டு ஒதுக்கித் தள்ளிவிட்டார். இது உசிதமல்ல.

காஷ்மீரில் ஒரு பகுதியில் சீன தேசத்தார் பிரவேசித்திருப்பதாகவும் காஷ்மீரைப் பற்றிப் பாகிஸ்தான் உரிமை கோரி வருவதனுல் பாகிஸ்தானுடன் இந்தியா கூட்டுப்பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாதெனவும் தில்லி மக்கள் சபையில் நேருஜி சொன்னுர். இந்த வாதம் ஆராய்ந்து பார்த்தால் சரியல்ல வென்று தெரியவரும். பெரிய ஆக்கிரமிப்புக்கு முன் சிறிய விவாதம் ஒரு தடையாகாது. மகாபாரதத்தில் ஒரு கதையுண்டு. துரியோதனனேக் கந்தர்வ ராஜன் சிறைப்படுத்திய பொழுது யுதிஷ்டிரர் பீமனுக்கு "கௌரவருக்கு நம்மேல் விரோதம் இருந்தாலும் மாற்றுனைப் பொறுத்தவரையில் நாம் நூற்றைந்து பேரும் ஒன்று அல்லவா?" என்று சொன்னுர். இதை பீமன் ஒப்புக்கொண்டான். இரு தேசத்தாரும் கலந்து சீனுவின் ஆக்கிரமிப்பை ஒழித்துக் கட்டிய பிறகு நம்முடைய விவாதத்தைத் தீர்த்துக் கொள்ள முடியும். கூட்டுப் பாதுகாப்பு நிர்வாகத்தின் பயனுக நட்பும் ஏற்படும்; விவாதங்களே எளிதாகத் தீர்த்துக் கொள்ளவும் முடியும்.

இந்தியாவுக்குச் சீனு இழைத்த நம்பிக்கைத் துரோகம் காரணமாக, 'வல்லரசு கோஷ்டிகளுடன் சேராமல் ஒதுங்கி நிற்கும்' கொள்கை நசித்து விட்டது. இனி நாட்டுப் பாதுகாப்புக்காகத் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கும். இப்பொழுதே நாம் நமது வருஷ வருமானத்தில் கிட்டதட்ட சரிபாதி ராணுவப் பாதுகாப்புக்காகச் செலவழித்து வருகிறேம். சீனத் துருப்புக்களே எல்லையில் வைத்துக் கொண்டிருக்கும் நிலையில் ராணுவச் செலவு இயல்பாகவே பெருகும். இதனுல் மக்களின் அத்தியாவசிய நலன்களைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். பணப் பெருக்கம் ஏற்படும்; விலைவாசிகள் இன்னும் உயரலாம்.

இத்தகைய சூழ்நிலை நிலவும்போது நமது சர்க்கார் நடைமுறைக்கு ஒவ்வாத கொள்கைகளை அமுல் நடத்துவதாகச் சொல்லி, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம்வகுத்து 10,000 கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறது.

முதலிரண்டு திட்டங்களிலேயே பலபல கோடிகள் வீண் விரயமாகி யுள்ளன. இந்த நிலையில், உலகமெல்லாம் கைவிட்ட சோஷலிஸத்தை அமுலுக்குக் கொண்டு வந்துதான் தீருவோம் என்றும் மக்களின் அமைதியான சமுதாய வாழ்வைச் சின்னுபின்னப் படுத்தும் வகையில் சட்டங்கள் இயற்றித் திட்டங்கள் நிறைவேற்றத்தான் செய்வோம் என்ருல் மக்களிடையே கசப்புத்தான் வளரும். வாழ்க்கை வாழ முடியாததாகப் போகும். இதையெல்லாம் கருதித்தான் இக் கொள்கைகளே அமுல் நடத்துவதைக் கைவிடுங்கள் என்று சுதந்திரக் கட்சி கோருகிறது.

சுதந்திரக் கட்சி ஹைதராபாத்தில் நமது அன்னிய நாட்டுக் கொள்கை விஷயமாகவும், பாதுகாப்பு சம்பந்தமாகவும் செய்துள்ள தீர்மானங்கள், பாரத சர்க்காருக்கே கண் திறப்பதாக அமைந்துள்ளது என்பதை உணர வேண்டும். பதவிக்கு வந்தபின்னர் சுதந்திரக் கட்சி அமுல் நடத்துவதற்காகப் போட்ட தீர்மானமல்ல. நாட்டின் பொது எதிரி தலைவாசலில் நிற்கும்போது, தேசபக்தியினுல் உந்தப்பட்டு, கட்சிச் சண்டைகளுக்கு அப்பால் நின்று செய்த தீர்மானம் இவை என்பதை உணர்ந்து ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்நியர் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு விட்டதனுல் உள்நாட்டில் நடைபெறும் தவறுகளே மக்கள் மறந்து விட்டார்கள் என்று நம்பிக் கொண்டு எதேச்சாதிகாரம் நடத்தலாகாது. அப்படிச் செய்தால் ஐந்து வருஷங்களாக நடந்து வந்த சீன விவாதங்களே அதற்காகவே இப்போது கொண்டு வந்து, மக்கள் மூளையைக் குழப்பப் பார்க்கிருர்கள் என்று நினைக்க இடமுண்டாகும்.

ஹைதராபாத் கூட்டம்

ஹைதராபாத் நகரில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிப் பொதுக் கௌன்சில் நடவடிக்கைகளும் மத்திய நிர்வாகக் கமிட்டி நடவடிக்கைகளும் எனக்கு மிகவும் திருப்தி யளித்திருக்கின்றன. அவற்றைக் கண்டு நான் சந்தோஷப் படுகிறேன். எல்லாப் பிராந்தியங்களிலிருந்தும் முக்கியமான பிரதிநிதிகள் பலர் வந்திருந்து நடவடிக்கைகளில் கலந்து கொண்டனர். நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றன. வியாழக்கிழமை (10-12-59) மாலை நடந்த பிரும்மாண்டமான பொதுக்கூட்டத்தில் எல்லையில்லாத உற்சாகம் இருந்ததைக் கண்டேன். கட்சிக் கவுன்சிலின் அங்கத்தினர்களாகிய வட இந்திய நண்பர்கள் ஆந்திரப் பிரதேச மக்களின் உற்சாகத்தைக் கண்டு பெரிதும் பூரித்துப் போனுர்கள். போக்குவரத்தைக் கவனிக்கக்கூடப் போலீஸ்காரர்கள் அங்கே இருந்ததாகத் தெரியவில்லை. அப்படி யிருந்தும் இவ்வளவு பெரிய கூட்டத்துக்கு வந்த ஜனத்திரள் தாங்களே அமைதியை நிலைநாட்டிக்கொண்டு நடவடிக்கைகளையும் ஒழுங்காக நடைபெற உதவினுர்கள் என்பதை ஒரு அதிசயமாகவே நான் கருதுகிறேன்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

'ஐக்' விஜயத்தின் விளைவுகள்!





காரியதரிசி மஸானி

சுதந்திரக் கட்சியின் பெரிய தலைவர்கள் ஹைதராபாத்தில் கூடி, சுதந்திரக் கட்சியின் பொதுக் காரியதரிசியாக ஸ்ரீமான் எம். ஆர். மஸானியை ஏகமனதாகப் பெரும் உவகையோடு தேர்ந்தெடுத்தனர். அவரைப் பிரேரேபித்தவரும் ராஜாஜிதான். மஸானி அவர்கள் நீண்ட நாட்களாக அரசியல் துறையில் இருந்து வருபவர். அவருக்கு இந்நாட்டில் அரசியல் உலகில் தனியான செல்வாக்குண்டு. வெளிநாடுகளிலுள்ள அரசியல் தலைவர்களிடையே சிறந்த செல்வாக்குப் பெற்றவர். காரியங்கள் செய்வதில் மிகவும் சுறுசுறுப்பானவர். ராஜாஜி சொல்வதைப் புரிந்து கொள்ளச் சிலருக்கு ஐந்து மணி நேரமானால் மஸானி அவர்களுக்குச் சொன்ன மாத்திரத்திலேயே உடனடியாகப் புரிந்துவிடுகிறது. ஆகவே, இப்பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டது பொருத்தமேயாகும்.

காரியதரிசி வசிக்கும் ஊரில்தான் கட்சியின் தலைமைக் காரியாலயமும் இருக்க வேண்டும் என்பது சகஜம். மேலும், சுதந்திரக் கட்சி ஆரம்பித்த நாளிலிருந்தே தலைமைக் காரியாலயம் சென்னையில் இருக்கக் கூடாது என்று ராஜாஜி சொல்லி வந்தார். அதனாலேயே பெங்களூரில் வைக்கப்பட்டிருந்தது.

சுதந்திரக் கட்சியின் காரியாலயம் இந்தியாவின் நடு மையமானதோர் இடத்தில், ரயில் மோட்டார், விமானம் முதலிய போக்குவரத்து வசதியுள்ள இடத்தில் இருந்தால் இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்வது சௌகரியமாக இருக்கும்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வட இந்தியத் தலைவர்கள் ராஜாஜியினிடம் கொண்டுள்ள பக்தியும், மதிப்பும் சமீபத்தில் பன்மடங்கு வளர்ந்திருக்கிறது. அகில இந்திய மகாநாடு கூடிய விரைவில் வடநாட்டில் கூடும்.

ஏல் துரை

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்குப் பாரத நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் ஏராளமான பரிசுகள் அனுப்பியிருக்கிறார்கள். இவற்றில் இந்தியப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு கொடுத்த பரிசைக் குறிப்பிட வேண்டும். பதினேழாவது நூற்றாண்டில் சென்னையில் கவர்னராக இருந்த எலிஹு ஏல் என்பவரின் படத்தைச் சென்னைக் கோட்டையிலிருந்து வரவழைத்துக் கொடுத்திருக்கிறார். ஏல் என்பவர் அமெரிக்காவிலிருந்து சாதாரண கம்பெனி குமாஸ்தாவாகச் சென்னைக்கு வந்து கவர்னராக உயர்ந்தவர். அவர் மணந்து கொண்டது சென்னையில். சென்னை கார்ப்பரேஷனை ஆரம்பிக்கத் திட்டமிட்டவர் அவர். பின்னர் அவர் தமது தாய்நாட்டுக்குத் திரும்பிச் சென்றார். அவர் பெயரில் அமெரிக்காவில் ஒரு சர்வகலாசாலை—ஏல் யூனிவர்ஸிடி விளங்குகிறது என்றால் அவர் எவ்வளவு பெரிய அறிஞராக இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம். இப்படி இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தொடர்பு இன்று நேற்றல்ல, 17 ம் நூற்றாண்டிலிருந்தே இருந்து வந்தது என்பதை நினைவுபடுத்தும் வகையில் பிரதமர் பரிசளித்தது மிகவும் பொருத்த முடையது. அதிலும் சென்னை நகருடன் தொடர்பு கொண்ட ஒருவரை நினைவு கூர்ந்தது தென்னாட்டவருக்குத் தனியானதோர் மகிழ்ச்சியளிக்கும். சென்னையிலிருந்த கிடைத்தற்கரிய ஒரு பழைய படத்தை சென்னை மக்கள் இழந்ததற்கு ஒரு பக்கம் வருத்தப்பட வேண்டும்.

சென்னைக்குப் புதிய ஷெரீப்

அடுத்த ஆண்டுக்குச் சென்னை நகர 'ஷெரீப்'பாக நியமிக்கப்பட்டிருக்கும் தொழிலதிபர் திரு வி. எஸ். லோகநாத முதலியார் திருவிதாங்கூர் சிமெண்ட், தாரப்போர் அண்டு கம்பெனி, கலிங்காடியூப்ஸ் இந்தியா சிமெண்ட்ஸ் முதலிய வர்த்தக ஸ்தாபனங்களை நடத்துபவர். தொழில் பிரமுகர்களிலிருந்து வருடந்தோறும் நியமிக்கப்படும் இப்பதவிக்கு திரு லோகநாத முதலியாரைத் தேர்ந்தெடுத்திருப்பது பற்றி வர்த்தக சமூகத்தினரிடையே திருப்தி ஏற்பட்டிருக்கிறது.



ஜெயந்தி விழா

பாரத தேசத்தில் பல பகுதிகளிலிருந்தும் சுதந்திரக் கட்சிப் பிரதிநிதிகள் ஹைதராபாத்தில் கூடி ராஜாஜியின் ஜெயந்தி விழாவைச் சிறப்புறக் கொண்டாடினார்கள். வைத்திய ரத்னஹக்கீம் நாராயணதாஸ் இல்லத்தில் 8-ம் தேதி இரவு ராஜாஜி நுழைந்தபோது, வேத மந்திர கோஷங்கள் முழங்க வரவேற்கப்பட்டார். பின்னர், ஸ்ரீ எச். எம். மோடி, பேராசிரியர் ரத்னசுவாமி, பஞ்சாப் தலைவர் ஸ்ரீ உத்தம்சிங் நாகோகி, ஸ்ரீ ஒபுல் ரெட்டி, பேராசிரியர் ரங்கா ஆகியோர் ராஜாஜியின் தொண்டுகளை நினைவுகூர்ந்து வாழ்த்துக்கள் கூறினர்.

'' இச் சுதந்திரக்கட்சிப் பணி வெற்றியடைவதற்கு, நீண்ட ஆயுளையும் தேக ஆரோக்கியத்தையும் ராஜாஜிக்கு ஆண்டவன் அருளுவான் என்ற நம்பிக்கை இருக்கிறது'' என்று உள்ளம் உருகும் வண்ணம் நாகோகி கூறினார். பிறகு ராஜாஜி சபையோருக்கு அன்புரையும் ஆசியும் நல்கினார். இந்த இனிய வைபவத்துக்குப் பிறகு, விருந்துபசாரம் நடைபெற்றது. இவ்வாறு ஹைதராபாத்தில் பாரத நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த தலைவர்கள் ராஜாஜிக்குத் தங்கள் மதிப்பையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்ட காட்சியைப் பார்த்த போது, உள்ளம் பூரித்தது!

மியூஸிக் அகாடமி, சென்னை

33-வது சங்கீத மகாநாடும், கச்சேரிகளும்

மத்திய மந்திரி புரொபஸர் ஹுமாயூன் கபீர் அவர்கள் விழாவைத் துவக்கி வைப்பார்கள்; ஸ்ரீ மதுரை மணி அய்யர் அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்கள்; அகில இந்திய ரேடியோ டைரக்டர் ஜெனரல் ஸ்ரீ ஜே.சி. மாதுர் I.C.S. அவர்கள் ஜனவரி 3ந் தேதி சதஸுக்குத் தலைமை தாங்குவார்கள்

மயிலை பி. எஸ். ஹைஸ்கூலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விசேஷப் பந்தலில் - *தினசரி நிகழ்ச்சி விவரங்கள்* (D. V.)

டிசம்பர் 24-12-59 மாலை 5 மணிக்கு திறப்பு விழா ... மாலை 6-30 மணிக்கு ஆரம்ப தினக் கச்சேரி ... காருகுறிச்சி அருணாசலம் —நாகஸ்வரம்; நாச்சியார்கோயில் ராகவ பிள்ளை, நீடாமங்கலம் ஷண்முக வடிவேல் —தவுல்

பிற்பகல் 2-30 to 3-30	பிற்பகல் 3-30 to 5	மாலை 5 - மணி	இரவு 9 மணி
25-12-59 வெள்ளிக்கிழமை			
சரோஜா, லலிதா -பாட்டு கமலா சர்மா -வயலின் எம். ஜி. மோஹன் ராமன் -மிருதங்கம்	கே. வி. நடராஜன் -பாட்டு பி. கிருஷ்ணசாமி -வயலின் எஸ்.எஸ்.தக்ஷிணாமூர்த்தி-மிருதங்கம் ஆங்கரை கிருஷ்ணமூர்த்தி - கடம்	பாலசரஸ்வதி -பரதநாட்டியம்	சேர்மாதேவி சுப்ரமணிய சாஸ்திரி & எஸ். வெங்கடராமன் -வீணை திருச்சி ராகவன் -மிருதங்கம்
26-12-59 சனிக்கிழமை			
எஸ். சேதுராமன் -பாட்டு சிக்கில் பாஸ்கரன் -வயலின் மாஸ்டர் ஏ. ஈஸ்வரன் -மிருதங்கம்	பார்வதி மகாதேவன் -பாட்டு கோமளவல்லி ஸ்ரீனிவாசன் -வயலின் வெங்கடேசம் பிள்ளை -மிருதங்கம்	செம்மங்குடி சீனிவாச அய்யர்-பாட்டு டி. என். கிருஷ்ணன் -வயலின் கே. சிவராமன் -மிருதங்கம் கோதண்டராம அய்யர்-கடம்	பிருந்தா & முக்தா -பாட்டு அபிராமசுந்தரி -வயலின் குருவாயூர் துரை -மிருதங்கம்
27-12-59 ஞாயிற்றுக்கிழமை			
எஸ். கிருஷ்ணமூர்த்தி -பாட்டு எல். வைத்தியநாதன் -வயலின் நாகூர் அம்பி அய்யர் -மிருதங்கம்	வி. ரங்கநாயகி -பாட்டு டி. ருக்மணி -வயலின் கனகாம்புஜம் -மிருதங்கம்	எம். எல். வசந்தகுமாரி -பாட்டு சுப்பிரமணியம் -வயலின் கிருஷ்ணமூர்த்தி ராவ் -மிருதங்கம் வில்வாத்ரி அய்யர் -கடம்	கல்யாணகிருஷ்ண பாகவதர் -பாட்டு வி.கோவிந்தசாமிநாய்க்கர்-வயலின் டி. கே. மூர்த்தி -மிருதங்கம் ஆலங்குடி ராமச்சந்திரன் -கடம்
28-12-59 திங்கட்கிழமை			
ஆர். வேதவல்லி -பாட்டு பாபநாசம் பாலசரஸ்வதி -வயலின் ஏ. ஜெயலக்ஷ்மி -மிருதங்கம்	தஞ்சாவூர் சகோதரர்கள்-வீணை டி. வி. கோபாலகிருஷ்ணன் -மிருதங்கம்	முசிரி சுப்பிரமணிய அய்யர்-பாட்டு டி. சௌடய்யா -வயலின் சுப்பிரமணிய பிள்ளை -மிருதங்கம் விஸ்வநாத அய்யர் -கடம்	தமயந்தி ஜோஷி -கதக் நடனம்
29-12-59 செவ்வாய்க்கிழமை			
சி. பி. ஞானசுந்தரம் -பாட்டு ஆலந்தூர் நடராஜன் -வயலின் கோவிலூர் சதாசிவம் -மிருதங்கம்	கே. ஆர். கணபதி -புல்லாங்குழல் திருபாப்புலியூர் ராஜம் -வயலின் டி. ரங்கநாதன் -மிருதங்கம்	டி. கே. பட்டம்மாள் -பாட்டு பி. தக்ஷிணாமூர்த்தி -வயலின் குஞ்சுமணி -மிருதங்கம் கிருஷ்ணமூர்த்தி ராவ் -கடம்	நந்திகேஸ்வர நாட்டியாலயா, யாழ்ப்பாணம் -பரதநாட்டியம்

30 - 12 - 59 புதன்கிழமை

டி. ஏ. ஜெயராமன் -பாட்டு கும்பகோணம் தங்கவேல் -வயலின் பி. எஸ். ராகவன் -மிருதங்கம்	வள்ளியூர் சகோதரர்கள்-பாட்டு டி. என். மணி -வயலின் எஸ். சங்கரன் -மிருதங்கம் விஜயக ராம் -கடம்	மதுரை மணி அய்யர் -பாட்டு லால்குடி ஜெயராமன் -வயலின் பழனி சுப்பிரமணிய பிள்ளை -மிருதங்கம் பெங்களூர் மஞ்ஜுநாத்-கடம்	எம்பார் விஜயராகவாச்சாரியார் -ஹரிகதை

31 - 12 - 59 வியாழக்கிழமை

வி. வெங்கடசப்பா ராவ் & வி. அனந்தராமன் -வீணை மேலக்காவேரி கிருஷ்ணமூர்த்தி -மிருதங்கம்	அய்யலூர் கிருஷ்ணன் -பாட்டு வி.வி. சுப்பிரமணியம் -வயலின் தின்னியம் கிருஷ்ணன் -மிருதங்கம் ஆர். குருமூர்த்தி -கடம்	கமலா லக்ஷ்மன் -பரதநாட்டியம்	மணக்கால் ரங்கராஜன் -பாட்டு எம். சந்திரசேகரன் -வயலின் நாகர்கோயில் கணேசன்-மிருதங்கம் பெங்களூர் மஞ்ஜுநாத் -கடம்

1 - 1 - 60 வெள்ளிக்கிழமை

பத்மா நரசிம்மன் -பாட்டு ராஜலக்ஷ்மி -வயலின் பழநி சி. குமார் -மிருதங்கம்	செம்பனூர்கோவில் எஸ்.ஆர்.டி. சுப்பிரமணியம் -நாகஸ்வரம்	எம். எஸ். சுப்புலக்ஷ்மி -பாட்டு வெங்கட்ராம சாஸ்திரி-வயலின் வி. நாகராஜன் -மிருதங்கம் கோதண்டராமய்யர் -கடம்	பீம்சென் ஜோஷி -ஹிந்துஸ்தான் பாட்டு குலாம் ரசூல் -தபேலா

2 - 1 - 60 சனிக்கிழமை

சிக்கில் குஞ்சுமணி & நீலா -புல்லாங்குழல் காரைக்குடி கமலா -வயலின் பாலக்காடு ராமநாதன்-மிருதங்கம்	பி. எஸ். நாராயணசாமி -பாட்டு சாலகுடி நாராயணசாமி-வயலின் கிருஷ்ணன் குட்டி -மிருதங்கம் அண்டகுடி செல்லப்பா-கடம்	வைஜயந்திமாலா -பரதநாட்டியம்	த்வாரம் வெங்கடசாமி நாயுடு & த்வாரம் சத்யநாராயணா -வயலின் கிருஷ்ண அய்யங்கார் -மிருதங்கம் கிருஷ்ணமூர்த்தி ராவ் -கடம்

3 - 1 - 60 ஞாயிற்றுக்கிழமை

	சதஸ்	மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர் சுந்தரேச அய்யர் -வயலின் வேலூர் ராமபத்ரன் -மிருதங்கம் ஆலங்குடி ராமச்சந்திரன்-கடம்	உஸ்தாத் விலாயத்கான் & இம்ரட் ஹுஸைன் கான் -சித்தார் முஹம்மது அஹமத் -தபேலா

4 - 1 - 60 திங்கட்கிழமை

கௌரி குப்புசாமி -பாட்டு திருவனந்தபுரம் ஹரிஹரன் -வயலின் ஆர். கண்ணன் -மிருதங்கம்	பாலக்காடு சுப்பிரமணிய அய்யர் -பாட்டு வைத்தியநாதன் -வயலின் என். கணேசன் -மிருதங்கம் ராமநாதன் -கடம்	ராமநாதபுரம் கிருஷ்ணன்-பாட்டு கோவிந்தராஜ பிள்ளை -வயலின் சி. எஸ். முருகபூபதி -மிருதங்கம் வில்வாத்திரி அய்யர் -கடம்	பாலமுரளி கிருஷ்ணா -பாட்டு கோபாலகிருஷ்ணன் -வயலின் பாலக்காடு ரகு -மிருதங்கம் பாலக்காடு சுந்தரம் -கடம்

5 - 1 - 60 செவ்வாய்க்கிழமை

விஸ்வநாத சாஸ்திரி -பாட்டு கிருஷ்ணமூர்த்தி -வயலின் திருச்சி ராகவன் -மிருதங்கம்	மன்னார்குடி சாம்பசிவ அய்யர் -ஹரிகதை	ஸ்ரீ & ஸ்ரீமதி போட்ரைட், யு.எஸ்.ஏ. ஸ்ரீ & ஸ்ரீமதி ஹோவனஸ், யு.எஸ்.ஏ. -மேல்நாட்டு சங்கீதம்	ஏ. கே. சி. நடராஜன் -கிளாரினட்

சீசன் டிக்கெட்டுகள்: ஸ்பெஷல் ரிசர்வ்டு ரூ. 85; முதல் வகுப்பு: ரூ. 30; இரண்டாவது வகுப்பு : ரூ. 20; முதல் வகுப்பு மட்டும் ரிசர்வேஷன் ரூ. 5

சீஸன் டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்: மியூசிக் அகாடமி ஆபீஸ், 115-E, மௌப்ரேஸ் ரோடு, சென்னை-14; ரசிக ரஞ்சனி சபை, மயிலாப்பூர், சென்னை-4; சாமகான சபா, சென்னை-4

மைக் & ஒலிபெருக்கி ஏற்பாடுகள்: அசோக் வெல்ட் ரேடியோ ஏஜன்ஸீஸ், 20, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-4



அப்பு: என்னடா குப்பு! தலையைச் சொறிந்து கொண்டு நிற்கிறே?

குப்பு: ஒரு சின்ன சந்தேகம்...நாம்பபோன வாரம் ஐதராபாத்து. செக்கிந்தராபாத்து இது இரண்டுக்கும் போனோம் இல்லையா? ராஜாஜி சென்னையிலிருந்து வந்த விமானம் இறங்கியது எங்கே?

அப்பு: ஐதராபாத் விமானக் கூடத்திலே தான்.

குப்பு: இல்லை. அந்த ஊருக்குப் பெயர் ஜிந்தாபாத்து.

அப்பு: ஜிந்தாபாத்தா...?அப்படி ஒருஊரும் கிடையாது ஐதராபாத் பக்கத்திலே...

குப்பு: உங்களுக்குத் தெரியாது. நான் கண்டு பிடிச்சு விட்டேன். ராஜாஜி விமானத்திலே வந்து இறங்கியதும் கூடியிருந்த அவ்வளவு பேரும் 'ஐதராபாத்' என்று சொல்லாமே, பின்னே ஏன் 'ஜிந்தாபாத்! ஜிந்தாபாத்' என்று சொன்னாங்க?

அப்பு: அட புத்திசாலி! ஜிந்தாபாத் என்றால் 'வாழ்க' என்று அர்த்தமடா! அது ஒரு ஊர்ப் பெயர் அல்ல. அதோ கோவிந்தசாமியும் வந்து விட்டார்.

கோவி: என்ன அப்பு சார்! ஐதராபாத்திலிருந்து எப்போ வந்தீங்க? சுதந்திரக் கட்சியின் மாகாணத் தலைவர்கள் மகாநாடு அங்கே கூடினதாகக் கேள்விப் பட்டேன். நீங்களும் குப்புவும் எந்த மாகாணத்துக் தலைவர்கள் என்ற முறையில் போனீர்களோ?


உத்தம்சிங் நாகோகி

அப்பு: அக்கப்போர் மண்டலத்துத் தலைவர்கள் என்ற முறையில் போனோம்.

கோவி: ஆந்திர ஜனங்கள் என்ன இருந்தாலும் கொடுத்து வைத்தவங்க, ராஜாஜியின் பிறந்த தினத்தன்று ராஜாஜியைத் தங்களிடம் அழைத்துக் கொண்டு விட்டார்கள், பாருங்கள்!

அப்பு: ஐதராபாத்திலேயும் தமிழ் மக்கள் நிறைய இருக்கிறார்கள், நம்ப சென்னையில் ஆந்திரர்கள் இருப்பதுபோல்....

குப்பு: நானும் பார்த்தேன் ஐதராபாத் தெருப்பக்கம், தமிழர்கள் தட்டுச் சுற்று வேட்டியுடன் போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்பு: குறுக்கே பேசாதே, குப்பு! ராஜாஜி அவர்கள் விமானத்திலேயிருந்து இறங்கியதும், ஐதராபாத் நைஜாம் அவர்களுடன் தேநீர் அருந்தினார்கள்.

கோவி: நைஜாம் அவர்கள் அரண்மனைக்கு நீரும் போனீரா?

அப்பு: போகவில்லை.

கோவி: போகாமலே, போஸ்ட்டர் செய்தியைப் பார்த்து விட்டுத்தானே கூறுகிறீர்?

அப்பு: ஆமாம் என்றே வைத்துக் கொள்ளும். குப்புவும் நானும் படுக்கை பெட்டிகளை எடுத்துக் கொண்டு, அங்கங்கே பஸ் ஏறிப் போவதற்குள் நைஜாம் ராஜாஜி சந்திப்பை எப்படி ஐயா கண்டிருக்க முடியும்?

கோவி: நம்ப ஊர்களைப் போலத்தான் அங்கே பஸ்களும் தாமதித்து வருமோ?

அப்பு: பஸ்கள் என்ன? அன்று ஐதராபாத்துக்கு விமானம் கூட ஒரு மணி தாமதித்துத்தான் வந்தது.

கோவி: ரயில் வண்டிகள் தாமதித்து வருவதுதான் வழக்கம். விமானங்களும் இப்படித் தாமதித்து வந்தால் வேடிக்கைதான்.

அப்பு: விமானங்கள் புறப்பட முக்கியமாகக் கால நிலை நன்றாயிருக்க வேண்டும்.

கோவி: நாட்டுக்கே சென்ற பன்னிரண்டு ஆண்டு காலமாகக் காங்கிரஸ் ஆட்சியில் கால நிலை சரியா யில்லை.

அப்பு: "இனி நாட்டுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. அதற்கு அடையாளமாகத் தான் சுதந்திரக் கட்சி தோன்றியிருக்கிறது. ராஜ ரிஷி ஜனகரைப் போல், நமக்கு வழி காட்ட ராஜாஜி மீண்டும் முன்வந்துள்ளார்" என்று அன்று மாலை, சுதந்திரக் கட்சி மாதர்கள் சங்கத்தின் சார்பில் நடந்த வரவேற்புக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீமதி பாரதிதேவி ரங்கா அவர்கள் புகழ்ந்துரைத்தார்கள்.

குப்பு: அவர்கள் யார் என்பதையும் சொல்லி விடுங்க அவருக்கு!

அப்பு: சுதந்திரக் கட்சித் தலைவர் ஸ்ரீரங்கா அவர்களின் வாழ்க்கைத்துணைவியார் ஸ்ரீமதி பாரதிதேவி அம்மா அவர்கள்.

கோவி: அப்படியா! இன்னும் யார் யார் பேசினார்கள்?

அப்பு: சங்கத் தலைவர் ஸ்ரீமதி ராஜ்ய லட்சுமியம்மா பேசினார்கள். இவர்தான் இந்தச் சங்கத்தின் தலைவர்.

குப்பு: ஒரு சின்னப் பொண்ணுபூமாலையை ராஜாஜிக்குப் போட்


பீ .சென்னு ரெட்டி



ஸ்ரீமதி ராஜ்யலக்ஷ்மி

டதே, அந்த மாலை மட்டும் நம்ம ஊரா யிருந்தால் முப்பது ரூபாய் விலை இருக்கும்?

அப்பு: இதற்கெல்லாம் விலை பார்க்க முடியாது. மாலை போட்டுக் கொள்பவரின் மதிப்பைப் பொறுத்திருக்கிறது.

கோவி: சில காங்கிரஸ் மந்திரிகளுக்கு நூறு ரூபாய் பெறுமான மாலையைப் போடுகிறார்கள். மந்திரி போட்டுக் கொண்டதும் அதன் மதிப்பு முழும் முக்காலணுவாக விழ்ந்து விடுகிறது!

அப்பு: உண்மை, உண்மை. ராஜாஜிக்கு அவருடைய பிறந்த தின அன்பளிப்பாக 1001 ரூபாய் பணத்தைத் தட்டில் வைத்து அளித்தார்கள்.

கோவி: மாதர் சங்கத்து வரவேற்புக்குப் பின்......

அப்பு: அந்த வைபவத்துக்குப் பிறகு மறு நாள்தான் ரொம்ப விசேஷமான மாகாணத் தலைவர்களின் அந்தரங்க மகாநாடு நடந்தது.

குப்பு: பெரிதாகத் தாடி வைத்துக்கொண்டு வந்திருந்தாரே; என்னைக்கூட அடிக்கடி பார்த்தாரே அவர் யாரு?

அப்பு: அவர்தானடா, சர்தார் உத்தம் சிங்ஜி. 'பாஞ்சாலப் பெரியார்' என்று சொல்லுவாங்க அவரை. பம்பாய்த் தலைவர் திரு முன்ஷி வந்திருந்தார். திரு எம். ஆர். மசானி, ராம்கார் ராஜா, திரு மோடி, தமிழ் நாட்டிலிருந்து திரு வெங்கடகிருஷ்ண ரெட்டியார், திரு டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி, காரியதரிசி ஸ்ரீ எஸ். எஸ். மாரிசாமி ஆகியவர்களும் வந்திருந்தார்கள்.

கோவி: மகாநாட்டிலே என்னென்ன பேசினார்கள்?

அப்பு: மகாநாட்டிலே தலைவர்கள் பலப் பல விஷயங்களை யெல்லாம் பேசினார்கள். இந்தியப் பாதுகாப்புக்கு ஏற்றதல்ல இப்போதைய நடுநிலைமைக் கொள்கை என்று தீர்மானம் செய்தார்கள். ஒவ்வொரு மாகாணத்திலேயும் கட்சி வளர்ச்சி வேலைகளை எடுத்துச் சொல்லிக் கணக்கு வழக்குகளை ஒப்படைத்தார்கள். ராஜாஜி, திரு ரங்கா இவர்களிடம் விவாதங்கள் செய்து ஆலோசனை பெற்றார்கள். நிர்வாக ஊழல்கள், அக்கிரமங்களை யெல்லாம் விசாரிக்க ஒரு கமிட்டி நியமிப்பதென்று முடிவு செய்தார்கள்.



ஸ்ரீமதி பாரதிதேவி

கோவி: அந்தரங்க மகாநாட்டுக்குப் பிறகு......

அப்பு: ஐதராபாத்-செக்கிந்திராபாத் சுதந்திரக் கட்சிஊழியர்கள் மகாநாடு மாலையில் ரங்க பவனத்தில் நடந்தது. எல்லாத் தலைவர்களும் வந்திருந்தார்கள். சட்டசபையிலுள்ள சுதந்திரக்கட்சி அங்கத்தினர்கள் நாற்பது பேரும், திரு சென்னாரெட்டி அவர்கள் தலைமையில் வந்திருந்தார்கள். சர்தார் திரு லச்சண்ணாவும் வந்திருந்தார்.



கே. எம். முன்ஷி

கோவி: ஆந்திரத்தின் 'சர்தார்' என்று சொல்லுவார்களே, அவரேதான்!

அப்பு: ஊழியர் மகாநாட்டிலே ராஜாஜி பேசும்போது, சுதந்திரக் கட்சி என்பது உடல். அதன் கொள்கைதான் ஆன்மா. உடல் வலுப் பெற அதிக அங்கத்தினர்கள் சேரவேண்டும். ஆனால் உடல் பருத்தால் மட்டும் போதாது. ஆன்மாவும் நன்கு வேலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பிரேதம்போலாகி விடும் — என்றார்.

கோவி: ஆன்ம சக்தி அழிந்த காங்கிரஸைப் போல் ஆகக்கூடா தென்பது உண்மைதான். காங்கிரஸ் கட்சியில் இப்போது நடக்கும் தலைவர்கள் தேர்தல்களைப் பார்த்தாலே ஈமக்கிரியைகள் நடப்பது போலத்தான் அழுது வடிகின்றன. ஒரு போட்டியோ, ஒரு கலகலப்போ இல்லாமல் அக்கிராசனத் தேர்தல் முதல் அளகேசன் தேர்தல் வரை, தேர்தல்கள் எல்லாம் ஒரே சடங்குதான் போங்க!

அப்பு: அதைப்பற்றி நாம் ஏன் துக்கப்பட வேண்டும்?

குப்பு: 'அட்ல பலுகுது. இட்ல பலுகுது' என்று ஒருவர் நன்றாகப் பாடினாரே......

அப்பு: பிரார்த்தனை கீதம் பாடினாரே, ஒரு பெரியவர் அவரா? அவர்தான் ஆந்திர இசைக் கவி திரு பி. வீரய்யாகாரு. ஜனாதிபதி பரிசு பெற்றவர்.

கோவி: பொதுக்கூட்டம் உண்டா?

அப்பு: பேஷாக உண்டு. மழை பெய்யும் போலிருந்தும், அதைப் பொருட்படுத்தாமல் ராஜா பிரதாப் கிர்ஜி அரண்மனை வெளியில் ஏறத்தாழ ஐம்பதினாயிரம் பேர்கள் கொண்ட கூட்டத்தில் தலைவர்கள் பேசினார்கள்.

குப்பு: வந்திருந்த சைக்கிள் மட்டும் இரண்டாயிரம் இருக்கும்; நான் முடிந்தவரையில் எண்ணிப் பார்த்தேன்......

கோவி: பொதுக்கூட்டம் முடிந்ததும், மறு நாள் ஊரெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு வந்தீர்களாக்கும்....?

அப்பு: ஊர் சுற்றிப் பார்க்க எங்களுக்கு நேரமில்லை. ஆகையால் ஒரு சுருக்கு வழியில் ஐதராபாத்தையும், செகிந்தராபாத்தையும் குப்புவுக்குக் காட்டி விட்டேன்.

கோவி: எப்படி?

அப்பு: நேரே சார்மினார் கோபுரத்தின் மீது ஏறி, ஐதராபாத்தையும் செகிந்தராபாத்தையும் பார்த்து விட்டு இறங்கினோம்.

குப்பு: ஐதராபாத்! செகந்திராபாத்ஜிந்தாபாத்! —''கொக்கி''



டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி



அமெரிக்க ஜனாதிபதியின் விஜயம்

விருந்தோம்பலுக்குப் பாரதத்தை மிஞ்சியவர்கள் கிடையாது. அது நமது பண்பாட்டிலேயே ஊறி விட்டது. அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவுக்கு வருகிறார் என்ற செய்தி தெரிந்த நாளிலிருந்து ஏற்பாடுகள் விமரிசையாக நடந்து வந்தன. டிஸம்பர் ஒன்பதாம் தேதி அவர் மாலை ஐந்து மணிக்குப் பாலம் ஆகாய விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது, ஒரு ஜன சமுத்திரமே அங்கு பொங்கி எழுந்து விட்டது. உப ஜனாதிபதி, அமெரிக்கத் தூதுவர் திரு பங்கர், மத்திய சர்க்கார் மந்திரிகள் பலர் பாதி வழியிலேயே நெருக்கடியில் மாட்டிக் கொண்டு திக்குத் தெரியாத காட்டில் தவித்தார்கள். திரு பங்கரின் கால் நடை யாத்திரையைக் கண்ட ஒரு இந்திய மாது அவருக்குத் தம் காரில் சாரத்யம் செய்வித்து, பாலம் கொண்டு சேர்த்தார். நன்றி தெரிவித்த பங்கருக்கு அம்மாதுவின் பதில் சுவாரஸ்யமாக அமைந்தது: ''உங்கள் பிரஸிடெண்டாவது விமான நிலையத்திலிருந்து கூட்டத்தில் சுழற்காமல் ராஷ்டிரபதி பவன் போவார் என்று எதிர்பார்க்கிறேன்.''

விமானம் அரை மணி நேரம் தாமதித்து வந்தது. நேரத்தில் வந்திருந்தால் முக்கியமான பலர் வந்தே இருக்க முடியாது!

18 இந்திய ஜெட் விமானங்கள் புடைசூழ, 'ஐக்'கின் விமானம் வந்திறங்கிய காட்சி பிரமாதமாயிருந்தது. உபசார வார்த்தைகள் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளி வந்து விட்டன. நெருக்கடியில் நடந்த ருசிகரமான சம்பவங்களைச் சுருக்கமாய்ச் சொல்கிறேன்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்பதை வெறும் பாட்டளவில் நிறுத்தாமல் பெரிய கோஆபரேடிவ் அல்லாத பண்ணையை நடத்தி வரும் ஐஸன்ஹோவரை, விவசாயிகள் ''அப்ரிகி ராஜா'' என்றே அன்புடன் அழைத்து கூவினர்.

மாலைகள் ஒவ்வொன்றும் மணங்கு நிறுவையில் போடப்பட்டன. திணறிப் போன 'ஐக்' இந்தியர்களின் பண்பாட்டைக் கண்டு உளம் நெகிழ்ந்து போய் விட்டார்.


பழைய டில்லியில் குப்பை கூளங்களில குடி வாழும் எளியோர்கள், ''ஐக்'' தங்களுடைய வட்டாரத்தையும் சுற்றிப் பார்க்க வரவேண்டும் என்று பிரார்த்திக்கிறார்களாம்; காரணம் அந்தச் சாக்கிலாவது அவர்கள் வாழும் இடம் சுத்தமாகும் அல்லவா?

ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாயக்குக் கதர்க் கொடிகள் விற்பனையாயின. அடிக்கடி பெரியோர்கள் வந்தால் எளியோர்களாகிய கதர் நூற்பவர்களுக்கு யோகம்தானே!

காருட்பிளேஸில் நெருக்கிய பெரும் கூட்டத்தைச் சமாளிக்க நேருஜி தாமே வண்டியை விட்டு இறங்கி விலக்கினார்.

வந்த சமயம் நல்ல சமயம்! நல்ல சமயமும் தர்மமும், நசித்துப் போயிருக்கும் தற்போதைய நிலையில் பழையபடி சமயம் தழைக்க வேண்டும்! தர்மம் ஓங்க வேண்டும்! இமயம் முதல் குமரி வரையில் சமயம் நிலவ வேண்டும்! ததாஸ்து!

—கப்புடு



1949-ம் ஆண்டு நேருஜி அமெரிக்கா சென்ற போது அவருக்குக் கொலம்பியா சர்வகலாசாலையில் கௌரவ டாக்டர் பட்டத்தை அளித்த ஐஸன்ஹோவருக்கு டில்லி சர்வகலாசாலை இம்மாதம் 11-ந் தேதி டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்தது.

தேர்தலும் தமிழ் மக்களும்

கொழும்பு, டிசம்பர் 11உ

இலங்கையிலுள்ள சுமார் இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அடுத்த பொதுத் தேர்தல் அவர்களது வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கப் போகும் ஒரு அதி முக்கியமான கட்டமாக இருக்கிறது. இலங்கைத் தமிழ் மக்கள் கட்டுப்பாடான ஓரினமாக இருந்த காலத்தில் அவர்களது உரிமைகளையோ, உடைமைகளையோ ஆக்கிரமிக்கும் துணிவு எவருக்கும் இருந்ததில்லை. சில தமிழர்களின் உதவியைக் கொண்டே சிங்கள மந்திரிகள் பிரஜாவுரிமைச் சட்டத்தையும் குடியேற்றச் சட்டத்தையும் கொண்டு வந்து தமிழ் இனத்தை இந்தியத் தமிழரென்றும் ஈழத் தமிழரென்றும் கூறு போட்டார்கள். அடுத்தடுத்து, தமிழ் மக்களை யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், திருகோணமலைத் தமிழர், பெரும்பான்மைத் தமிழர், சிறுபான்மைத் தமிழர் என்று சிறு சிறு கூறுகளாகப் பிரித்தார்கள். தெரிந்தோ தெரியாமலோ, இதன் விபரீதப் பலன்களைத் தமிழ்ச் சமுதாயம் போதும் போதும் என்ற அளவுக்கு அனுபவித்து விட்டது. இப்பிரிவினைகளெல்லாம் நீங்கி அடுத்து வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களிடையில் ஒரு ஐக்கிய முன்னணி ஏற்பட வேண்டுமென்ற ஆர்வம் சிலரிடையே இப்பொழுது தோன்றி யிருக்கிறது. இந்த இலட்சியத்துடன் சிலர் தீவிர முயற்சி செய்து வருவதாகவும் தெரிகிறது. அவர்களுடைய முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதே தமிழ் இனத்தின் வருங்காலத்தில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரது உண்மையான பிரார்த்தனையும் விருப்பமுமாகும்.

காங்கிரஸ் போட்டியிடும்

சென்ற இரண்டு பார்லிமெண்டு சபைகளிலும் பிரதிநிதித்துவமில்லாதிருந்த இந்திய வம்சாவளியினர்களுக்குப் புதிய பார்லிமெண்டிலாவது நிச்சயம் பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்வதற்காகப் பெரும்பாலான தமிழ்த் தொகுதிகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது அபேட்சகர்களை நிறுத்தி வைத்துப் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறது. இந்த இலட்சியத்துடன் இதர தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவையும் தொழிலாளர் யூனியன்களின் ஆதரவையும் பெற அவைகளுடன் நேரடியான பேச்சுக்கள் நடத்த உத்தேசித்திருப்பதாக ஒரு காங்கிரஸ் அதிகாரி இவ்வாரம் அங்கு அறிவித்திருக்கிறார். இந்திய வம்சாவளியினர்களுக்குப் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் இல்லாது போனது பெரிய அநியாயம் என்பதைப் பல தமிழ்த் தலைவர்களும் அடிக்கடி இடித்துக் காட்டிப் பேசி வந்திருப்பதனால் அடுத்த பார்லிமெண்டில் அவர்களுக்கு இடம் கிடைக்க உதவுவார்களென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

—ரஜனி

ஆகாச வெடி

"ஒரே சமயத்தில் நூறு பேர்களுக்கு மேல் விருந்துகளில் கலந்து கொள்வதை ராஜஸ்தான் சர்க்கார் தடை செய்திருக்கிறது."

—செய்தி

"நூறு விருந்துகளுக்கும் அதிகமாகக் கலந்து கொள்ளத் தடை இல்லையே ?" என்று கேட்கிறார் ஒரு மந்திரி !

★

"விமானத்தில் அமெரிக்கா புறப்பட்ட மைசூர் யானைக் குட்டி 'தட்டா'வைப் பம்பாய்க் குழந்தைகள் வழி அனுப்பின."

— செய்தி

தட்டாவுக்கு 'டாட்டா' கூறினவா ?

"சாவுக்கு அஞ்சாத, இடுப்புக்கு மேல் மனித உருவம் கொண்ட மீன் ஒன்று ராமேசுவரம் கடலருகே பிடிபட்டிருக்கிறது."

—தினசரி

சாவுக்கஞ்சாத இந்த மீனுக்குச் சமுத்திரம் இடுப்பளவுதான் இருந்திருக்க வேண்டும் !

★

"பாக்கு விலை உயர்வுக்கு வெட்டு அவசியம்."

—வெற்றிலை வியாபாரிகள் கோரிக்கை

பாக்குவெட்டி வியாபாரிகளின் ஆதரவும் இந்த வெட்டுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

கல்கி

மாவட்டச் சிறுகதைப்போட்டி

முதற் பரிசு ரூ. 200 **இரண்டாவது பரிசு ரூ. 100**

★

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வடஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும், எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

ஆறாவது போட்டி

மதுரை மாவட்டம்

விதிகள்

1. கதைகள் மதுரை மாவட்டத்தின் சூழ்நிலை எல்லாவகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், தொழில், வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப்போட்டியில் இடம்பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டு கதைகள் அனுப்பலாம்.
4. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் "கல்கி" ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துப் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற, கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. மதுரை மாவட்டப் போட்டிக்கான கதைகள் ஜனவரி 31 ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்துசேர வேண்டும்.

9. போட்டி முடிவு பிப்ரவரி மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், தலைப்புக்களிலும் "கல்கி மதுரை மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு :—மதுரை மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

15

ஆசிரியர், கல்கி

மாணவர்களுக்குப் பரிசு

ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் மடம் மானேஜர் எழுதுகிறார் :

திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி இவைகளில் 30 பாட்டுக்களை நம் நாட்டுச் சிறுவர்கள் பயின்று, அவர்கள் ஆயுள் காலத்தில் இறைவனை நினைத்துத் துதி செய்ய வேண்டிய தொண்டை நம் நாட்டு மக்கள் எல்லோரும் இன்றே துவக்க வேண்டும். ஒவ்வொரு சிற்றூரிலும், கிராமத்திலும், பட்டணத்திலும், நகரத்திலும் இந்தத் தொண்டை ஆற்றுவதற்கு ஒரு குழுவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தக் குழுவினர் ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையிலும் 5-வது வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகளை அணுகி அவர்களில், மார்கழி மாதம் திருப்பாவை 30 பாட்டுக்களையாவது, திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி 30 பாட்டுக்களையாவது, பாடம் செய்ய இஷ்டப்பட்டுப் பெயர் கொடுக்கிறவர்களைக் குறித்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பெயர் கொடுத்தவர்களுக்கு ஒரு பாவை நூல் கொடுக்க வேண்டும். அக் குழுவினர் எத்தனை பிள்ளைகளுக்குப் பாவை நூல் வழங்கி இருக்கின்றனரோ, அவ்வளவு பிள்ளைகளுக்கும் பொங்கல் கழித்த ஐந்து நாட்களுக்குள் ஒரு நாள் போட்டிப் பரிக்ஷை ஏற்படுத்தி அதில் முதலாகத் தேறியவர்களுக்கு, அவர்களுக்கு அடுத்த வருஷம் வகுப்புக்கு வேண்டிய பாட புஸ்தகங்கள் எல்லாவற்றையும் வாங்கிக் கொடுப்பதுடன் ஒரு சிறு மெடலையும் கொடுக்க வேண்டும். அதைத் தவிர 30 பாட்டுக்களையும் ஒப்புவிப்பவர்களுக்கெல்லாம் அவர்கள் அடுத்த வகுப்பில் படிப்பதற்கு வேண்டிய புஸ்தகங்களில் ஏதாவது ஒன்றை வாங்கிக் கொடுக்க வேண்டும். ஒருகால் அடுத்த வகுப்பு புஸ்தகங்கள் அரசாங்கத்தாரால் தை மாதத்தில் நிர்ணயிக்கப் படாமல் இருந்தால் அந்தப் பிள்ளைகளின் பெயரை எழுதி வைத்துக்கொண்டு அடுத்த வருஷ ஆரம்பத்தில் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தாலும் கொடுக்கலாம். அந்தக் குழுவினர் இதற்கு வேண்டிய பொருளை ஆங்காங்கு திரட்டி வரவு செலவுக் கணக்கை வைத்துக் கொள்ள வேண்டும்.



இதே மாதிரி ஒவ்வொரு ஆண்டும் அக்குழுவினர் நடத்திவர வேண்டும். படிக்கும் ஒவ்வொரு பிள்ளையும் 5-வது வகுப்பு வழியாகவே மேலே செல்ல வேண்டுமாகையால் அந்த ஒரு வகுப்பை மாத்திரம் கவனித்துக் கொண்டு வந்தால் சில வருஷங்களில் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் எல்லோரும் இறைவனை நினைக்க ஒரு 30 அருள் பாட்டுக்களையாவது துணையாகக் கொண்டவர்கள் ஆவார்கள். வெளிநாடுகளிலிருந்து புதிதாக வந்த மதத்தினர் நம் நாட்டு மக்கள் பலரை அம்மதங்களில் சேர்த்து, அவர்களுடைய மத நூல்களில் ஒரு பகுதியையாவது அவர்கள் ஒவ்வொருவர் மனத்திலும் நிலைநிற்கும்படி கட்டுப்பாடாகப் பயிற்சி தருகிறார்கள். அனாதியான நமது மதத்தில் எல்லையற்ற அருள்வாக்குகள் தமிழில் மனத்தை உருக்கும் நிலையில் இருந்தும் அவற்றில் ஒரு சிறு பகுதியையாவது படித்த மக்களாவது அறியும்படி செய்யாமலிருப்பது, நமக்கு ஒரு பெரிய குறை. அந்தக் குறையை நிவர்த்திக்க நாட்டோர் எல்லோருமே துணை புரிய வேண்டுமென்று ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அபிப்பிராயப் படுகிறார்கள்.


மற்றும் ஒவ்வொரு குழுவினர் ஏற்படுத்திக் கொள்ளும் எல்லையிலும் எவ்வளவு பிள்ளைகள் ஒவ்வொரு வருஷமும் இப்போட்டிப் பரீட்சைக்கு வரக் கூடுமென்று ஒரு உத்தேசமாகக் கணக்கு செய்து அவர்களுக்குப் பரீட்சைப் பரிசுகள், புஸ்தகங்கள் இவைகளுக்கு வருடம் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகுமென்று கணக்கு செய்துகொண்டு, அதற்கு வேண்டிய மூலதனத்தைப் பூமியாகவோ பங்கு (ஷேர்) களாகவோ, மனமுள்ளவர்களைக் கேட்டுச் சேகரித்து அதை ஒரு டிரஸ்டாகப் பதிவு (ரிஜிஸ்தர்) செய்வித்து, அதிலிருந்து வரும் வருட வருவாயைக் கொண்டு ஒவ்வொரு வருஷமும் இந்தத் தொண்டை நிறைவேற்ற முயற்சி எடுக்குமாறு தெரிவிக்கும்படியும் எனக்கு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆணையிட்டிருக்கிறார்கள்.



இவ்வருஷம் செலவாகும் தொகையை வசூல் செய்து நடத்தி விட்டு அடுத்த கார்த்திகைக்குள் டிரஸ்ட் பதிவு முடியும்படி முயற்சி செய்யுமாறு ஸ்ரீ ஆசார்யாள் அபிப்பிராயத்தை அனுசரித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

குழுவை ஏற்படுத்தி ஒவ்வொரு குழுவின் எல்லையிலும் எத்தனை பிள்ளைகள் போட்டிப் பரீட்சைக்குப் படிக்க ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், ஒவ்வொன்றிலும் எவ்வளவு புஸ்தகம் வேண்டியிருக்கும் என்பதை ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் மடம், காஞ்சிபுரம் என்னும் விலாசத்துக்குத் தெரிவித்தால் வேண்டிய பாவைப் புஸ்தகங்களை அனுப்பச் சௌகரியமாயிருக்கும்.

டிரஸ்ட் பத்திரம் எழுத வேண்டிய விஷயங்களைக் குறித்து, சிதம்பரம், நடராஜா ஜ்வெல்லரி, ஸ்ரீமான் எஸ். ரத்தினசாமி செட்டியார் அவர்களுக்கு எழுதி விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.



பாண்ட்ஸ்

கோல்டு க்ரீம்

* சுத்தம் செய்கிறது
* அழகுபடுத்துகிறது
* பாதுகாப்பளிக்கிறது



தினமும் இரவில் உங்கள் முகத்தில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை அழுத்தித் தடவுங்கள். அது சருமத்தில் ஊடுருவிச்சென்று அழுக்கை அகற்றி சருமத்தை சுத்தமாகவும் மென்மையாகவும் வைக்கும். சருமத்திற்கு போஷாக்களிக்கும் இந்த கோல்டு க்ரீமை பிரதினமும் உபயோகித்து வந்தால் உங்கள் முகம் பொலிவுடனும் அழகுடனும் விளங்கும்.

வானிஷிங் க்ரீம்

பவுடர் கலையாமலிருப்பதற்கு பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை தடவி பவுடர் போட்டுக் கொள்ளுங்கள். எண்ணெய் பசையற்ற இந்த க்ரீம், பவுடரை மணிக்கணக்காக படிந்திருக்கச் செய்யும். உங்கள் அழகையும் பாதுகாக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)



யானை வளர்த்த வானம்பாடி

சமீபத்தில் வெளி வந்த 'ஜிம்போ'வைப் போலவே விமான விபத்துதான் இந்தப் படத்தின் கதைக்கு அஸ்திவாரம். ஆனல் அஸ்திவாரம் பழையதாயிருந்தாலும் கட்டடத்தில் கொஞ்சம் புதுமை காண்கிறது. படத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரையில் செழிப்பான அடர்ந்த திருவனந்தபுரத்து வனப் பிரதேசங்களும், மலைகளும், நதிகளும் நிறைய இடம் பெற்றிருக்கின்ற இந்தப் படத்தில் 'செட்டிங்'குகளுக்காகச்செலவேயில்லை.

ஜனசஞ்சாரமற்ற காட்டில் நிகழ்ந்தவிமான விபத்தில் பெற்ற தாயை விட்டு அநாதையாகி விட்ட பெண் சிசுவை வனத்தில் வாழ்ந்து வந்த நல்ல மனிதர் தர்மராஜர் கண்டெடுத்துத் தாம் அன்போடு வளர்க்கும் பீமன் என்னும் யானையிடம் ஒப்படைக்கிறார். அவள்தான் மல்லி—யானை வளர்த்த வானம்பாடி. கொள்ளைக்காரர்களைப் பிடிக்க வந்த சேகர் மல்லியின் அன்புக்கு உரியவனுகிறான். கொள்ளைக்காரர்களின் தலைவன் இந்தக் காதலர்களின் வில்லனுகிறான்.

யானை வளர்த்த வானம்பாடி மல்லியாக வரும் குமாரி கவர்ச்சியைத் தரும் உடையில் தோன்றி, கானகம் முழுதும் யானை மேல் பவனி வந்து, சேகரைக் கவர்ந்து படம் முழுதும் கண்ணுக்கு விருந்தாயிருக்கிறார். வனவிலங்குகளுடன் அன்போடு பழகும் போதும், சேகருடன் குழந்தை மாதிரி பழகிய போதும், அவனிடம் அளவு கடந்த அன்பு கொண்டு தாத்தாவின் கட்டளையை மீற முடியாமல் தவித்த போதும், அவரது ஆதரவை இழந்து அவதிப்பட்டபோதும் குமாரியின் நடிப்பு நன்ரு யிருந்தது.

ஸ்ரீராம் சேகராக வருகிறார். பல சந்தர்ப்பங்களில் குமாரி அவர் உயிரைக் காப்பாற்றுகிறார். படத்திலும் குமாரிதான் ஸ்ரீராமைக் காப்பாற்றி யிருக்கிறார்!

பீமன் என்ற யானையும், ஆதியப்பன்' என்ற பாத்திரத்தை ஏற்கும் மனிதக் குரங்கு பெட்ரோவும் தங்கள் சிறந்த நடிப்பினல் நட்சத்திர நடிகர்களாகிவிட்டன!

இவைகளைத் தவிர, இன்னும் சிறுத்தை, கரடி, புலி, மலைப் பாம்பு எல்லாம் படத்தில் தோன்றித் தங்கள் பாகத்தைச் சிறப்பாகச் செய்கின்றன!

கதாநாயகன், கதாநாயகி பாகங்களுக்குப் புது முகம் கிடைப்பதில் உள்ள சிரமம் யாவரும் அறிந்ததே. ஆனல் அதே போலத் தாய் தந்தையர் பாகங்களுக்குக்கூடப் பொருத்தமான நடிகர்கள் கிடைப்பது சிரமமாகத்தான் இருக்கிறது. அந்தச் சிரமத்தைப் போக்க வேண்டுமானல், பல்லாண்டுகளாகக் கதாநாயக, கதாநாயகி பாகங்களில் நடித்து ஓய்வு பெற வேண்டிய நிலைமையில் உள்ள வயதான நடிக, நடிகையர்கள் மேற்படி பாத்திரங்களில் தோன்ற முன்வர வேண்டும். தாய் தந்தையர் பாத்திரங்களைப் பழைய நடிக, நடிகையர்கள் ஏற்பதில் யாருக்கும் அலுப்புத் தோன்ருது. கௌரவமான ஒரு குடும்பத்தின் பெற்றோர்களாக வருவதற்கு எல்லா விதத்திலும் தகுதியுடையவர்களைப்



பழைய நடிகர்களிடையே கலப்பமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

உதாரணமாக, இந்தப் படத்தில், சேகரின் தாயாராக எஸ். டி. சுப்புலக்ஷ்மி தோன்றுகிறார். மிக மிக இயல்பாக நடிக்கிறார். இவர் எத்தனையோ தமிழ்ப் படங்களில் பிரதம பாகங்களில் நடித்துப் புகழ் பெற்றிருக்கிறார். இப்பொழுது அவர் மேற்படி பிரதம பாகங்களில் தோன்றுவதற்கில்லை யென்றாலும், அவருக்குப் பொருத்தமான தாயார், அத்தை முதலிய பாகங்களில் தோன்றி நன்றாய் நடிக்கலாமல்லவா? எஸ். டி. சுப்புலக்ஷ்மி சிறிது நேரமே படத்தில் வந்தாலும் அவரது நடிப்பின் அனுபவம் நன்கு தெரிகிறது.

டி. பாலசுப்பிரமணியம் யானை வளர்த்த வானம்பாடியின் வளர்ப்புத் தந்தை தர்மராஜனாக வந்து மனித இனத்தைச் சட்டை செய்யாமல் வாழ்ந்து சட்டையில்லாமலே நடிக்கிறார். நாமும் அவரை அதிகமாகச் சட்டை பண்ண வேண்டியதில்லை!

வன விலங்குகள் சம்பந்தப்பட்ட மேல் நாட்டுப் படங்களைப் பார்க்கும் போது நமக்கு ஏற்படும் உற்சாகம் நம் நாட்டு வன விலங்குப் படங்களைப் பார்க்கும்போது ஏற்படுவதில்லை. காரணம் மேல்நாட்டுப் படங்களின் துரித ஓட்டம் நம் படங்களில் இல்லாமல் இருப்பதுதான்.

பல இடங்களில் துணிந்து கத்திரிக்கோல் பிரயோகம் செய்திருக்க வேண்டும். அப்பொழுது படத்தின் விறுவிறுப்பு பிரமாதமாயிருந்திருக்கும். வனவிலங்குகளும், கொள்ளைக்காரர்களும் ஓடும் ஓட்டம்போல் இந்தப் படமும் ஓடியிருக்குமானால் அனுப்பே தோன்றாது!

இப் படத்தில் சில கொடிய காட்சிகள் வருகின்றன. அவை கொடிய வன விலங்குகளை விட அச்சமூட்டுகின்றன. கொள்ளைக்காரர் குகையில் நடக்கும் பெருங்குழு நடனங்களையே குறிப்பிடுகிறேன். பாவமும் இல்லாமல் பொருளும் இல்லாமல் அருவருக்கத்தக்க முறையில் கத்திக் கொண்டு பல பெண்கள் குதிப்பதுதான் நடனமா? அந்த நடனக் காட்சிகளைக் கண்ணை மூடிக் கொண்டு வெட்டி யெறிந்திருக்கலாம்.

சேகரும், கள்வர் தலைவனும் சண்டை போடும் கட்டங்கள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. படம் முடியும் தறுவாயில் கதையின் சுவாரஸ்யத்தைக் குறைக்கும் விதத்தில் அந்தச் சண்டையை அவ்வளவு நீண்ட நேரம் நீட்டியிருக்க வேண்டியதில்லை.

மல்லி கொள்ளைக்காரர்கள் கூட்டம் இருக்கும் இடத்துக்குச் சேகரை அழைத்துக் கொண்டு போகும் கட்டம் அலுப்பு உண்டாகும் விதத்தில் நீளமாக இருக்கிறது. இந்தக் கட்டத்தைக் கொஞ்சம் வேகமாக்கிப் படம் பார்ப்பவர்களுக்கு உதவி புரிந்திருந்தால் நலமா யிருந்திருக்கும்.


மோகனனின் தந்தையாக வரும் பிரண்ட் ராமசாமி தமது இயற்கையான ஹாஸ்ய வெடிகளை இடைவிடாமல் அநாயாசமாக வெடித்துத் தீர்க்கிறார்!

கே. வி. சாந்திக்கு அடக்கமில்லாத கதாபாத்திரமான மோகனனின் பாகம் பொருத்தமாக இருக்கிறது.

கொள்ளைக் கூட்டத் தலைவனாக வரும் எம். என். நம்பியார் உருட்டி விழித்தும், உருமிப் பேசியும், சேகருடன் கட்டிப் பிணைந்து கடும்போர் புரிந்தும் சிறப்பாக நடிக்கிறார்.

ஆரம்பத்திலிருந்தே அளவைக் குறைத்துக் கொண்டு வந்திருந்தால், இந்தப் படம் வனப் படங்களின் வரிசையில் முன்னணியில் நின்றிருக்கும்.

இதில் பாட்டு, வசனம், கதை எதையுமே அதிகமாகப் பொருட்படுத்த வேண்டியதில்லை. கனத்தகாரமான வனுந்திரங்களையும், 'சோ'வென்று கொட்டும் அருவியையும், காட்டானையின் பிளிற்றோசையையும், புலியின் உறுமலையும், குரங்கின் 'கிறீச்'சென்னும் ஒலியையும் கேட்டுவிட்டுப் படத்தின் வசனத்தை யார் கவனிக்கப் போகிறார்கள்!







ஒரு புது மாதிரியான சோப்

வாடையற்ற, ஆரோக்கியமான சருமத்தை நீங்களும் அடையமுடியும்; மனோகர நறுமணமும் மிருதுத்தன்மையும் உள்ள புதுமாதிரி சோப்பாகிய சிந்தால் உபயோகித்துக் குளித்தீர்களானால், களங்கமற்ற, பரிசுத்தமான மேனியழகை அடையமுடியும்.

இந்தியாவில் கிடைக்கப்படும் சோப்புக்களில் சிந்தாலில் மாத்திரம்தான் ஜி-11 (அதிகாரபூர்வமான, தனி உரிமை பெற்றுள்ள ஹெக்ஸாக்ளோரோபின்) சேர்க்கப்பட்டுள்ளது. சருமத்தின்மீது மாசு பரப்பி, சாதாரணமாக சருமங்களிலே வளரும், துர்நாற்றமெழச் செய்யும் கிருமிகளில், 95 சத விகிதம், இதைத் தவறாமல் உபயோகித்த ஐந்தாவது நாளிலிருந்தே அழிக்கப்படுகிறது. இச்செயல் சாதாரண சோப்புக்களால் நடக்கக்கூடியதல்ல. மேலும் ஜி-11 சேர்க்கப்பட்டுள்ள சிந்தால் வேர்குரு, கருநிறப்படை, சினப்பு, பரு, கரப்பான் முதலிய பல்வேறு சருமநோய்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.

சிந்தால் சாதாரணமாகக் கிடைக்கும் அருமையான சோப்புக்களைவிட மிருதுவாக இருப்பதால், கண்களில் எரிச்சல் உண்டாக்குவதில்லை. குழந்தைகளுக்கு மிகவும் சிறந்தது.

வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச் செய்யும் சோப். லட்சக்கணக்கானவர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஜி-11 சேர்க்கப்பட்டுள்ள சிந்தால்

பூரணப் பாதுகாப்பிற்கு, சிந்தால் சோப்பினால் குளித்த பிறகு, இனிய மணங்கமழும், இதமான ஜி-11 அடங்கியுள்ள கோத்ரெஜ் டாய்லெட் பவுடர் உபயோகியுங்கள்.

கோத்ரெஜ் ஹேர் டானிக் மற்றும் ஷேவிங் ஸ்டிக் இரண்டிலும் ஜி-11 அடங்கியுள்ளது.

Godrej **கோத்ரெஜ்** சோப்புக்களில் முதன்மையான பெயர்




வரையாது வழங்கும் வள்ளலைப் போல், வந்தவர்க்கெல்லாம்வற்றாத புன்னகைகாட்டிக் கடைக்கண் அருளைப் பொழிந்துகொண்டிருந்தான் அரங்கன்—அழகிய மணவாளன்.

அன்று ஜீயபுரம் திருநாள். உறையூர் நாச்சியாருக்கும் அவனுக்கும் உள்ள உறவை அறிந்து பிணங்கி நிற்கும் ரங்கநாயகியின் ஊடல் தவிர்க்க விரையும் அந்த அவசரத்திலும் அவன் ஜீயபுரம் வந்து திவ்ய தரிசனம் தரும் புனித தினம். அவனுக்காகவே அமைக்கப்பட்டது தான் காவேரிக்கரையிலுள்ள 'அம்மையார் தண்ணீர்ப் பந்தல்' என்ற அந்த அலங்கார மண்டபம். அதன் முகப்பிலே தாரோடு வாழை மரங்கள் தழைத்து நின்றன. கம்பங்கள் தோறும் கமுகும், இளநீரும், ஈச்சையும், பனை நுங்கும் குலையோடு குலுங்கின. குருத்தோலையும் மாவிலையும் கொண்ட தோரணங்கள் பூங்காற்றிலே ஆடி அசைந்தன. அங்கே தூய வெண்பட்டு விதானத்தின் கீழே எழுந்தருளியிருந்தான் ரங்கேசன்.

கண் குளிர, மனங் குளிர ரங்கனைத் தரிசித்து விட்டு வெளியே வந்தான் தங்கராசு. அப்பப்பா, ஆணும் பெண்ணுமாக அந்தப் பிரதேசம் முழுவதும் என்ன கூட்டம்!

வழியின் இரு புறமும் விழிகளை ஓட்டியவாறு மெதுவாக நடை போட்டுக் கொண்டிருந்தான் தங்கராசு. திடீரென்று உருச்சிதைந்த பல குரல்களின் ஒன்று சேர்ந்த ஓலம் அவன் செவிகளைத் தாக்கியது. அவன் கால்கள் தாமாகவே சத்தம் நேர்ந்த திசை நோக்கித் திரும்பின. குடை ராட்டினமும், தொட்டில் ராட்டினமும் போடப்பட்டிருந்த இடம் அது. அருகில் செல்லும்போதே, ''யாரோ தொட்டில் ராட்டினத்திலே ஏறி, அது சுத்தறப்போ பயந்துபோய், மூர்ச்சை போட்டுக் கிடக்காங்களாம்!'' என்று கூவியது ஒரு குரல். சிந்தனை பனிச்சிட்ட தங்கராசு மேலே செல்லாமல்,

திருச்சி மாவட்டச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை



சட்டென்று ஆற்றுப் பக்கம் விரைந்து, சட்டைக்கு மேலே போட்டுக் கொண்டிருந்த துண்டைத் தண்ணீரில் நனைத்து எடுத்துக் கொண்டு திரும்பினான். கையிலிருந்து ஈரம் சொட்டச் சொட்ட அவன் ஓடி வருவதைக் கண்ட கூட்டம் தானே விலகி வழி விட்டது.

நடுவே, பிடுங்கி எறியப்பட்ட பூங்கொடியென மங்கை ஒருத்தி மயங்கிக் கிடந்தாள். தங்கராசு அவளை உற்று நோக்கினான். மூச்சு மெல்லியதாக இழையோடிக்கொண்டிருந்தது. கையிலிருந்த துண்டைப் பிழிந்து, அந் நீரை அவள் முகத்தில் தெளித்தான். சமயத்தில் செய்த உதவி உடனே பலனளித்தது. மூர்ச்சை தெளிந்து மெதுவாகக் கண்களைத் திறந்தாள் அந்தப் பெண். சூழ்ந்து நிற்கும் ஜனத்திரளையும் அதன் முன்னிலையில் ஆதுரத்தோடு தன் முகம் நோக்கியிருக்கும் தங்கராசுவையும் பார்த்ததும் வெட்கம் மேலிட, அவள் பரபரப்போடு எழுந்திருக்க முயன்றாள்.

"இப்ப ஒண்ணும் அவசரப்பட்டுக்கிட்டு எளுந்திரிக்க வேண்டாம்" என்று தங்கராசு அவளைத் தடுத்து நிறுத்தினான். அதோடு அருகில் கட்டை வண்டியில் கடை போட்டுப் பெட்டி பெட்டியாகச் சோடாவும், கலரும் விற்றுக்கொண்டிருந்தவனிடம் சென்று, ஒரு சோடா வாங்கி அவளிடம் கொடுத்தான். தயங்கியவாறே அதை வாங்கிப் பருகினாள் அவள். "அம்மாடி, என்ன இன்பம், என்ன குளுமை !" நன்றிப் பெருக்கு அவளுடைய கண்களிலே பளிச்சிட்டது !

வேடிக்கை பார்க்க வந்த கூட்டம் கலைந்து போய்க் கொண்டிருந்தது. "இனிமேல் பயம் ஒண்ணுமில்லே, கூட்டத்திலே சாக்கிரதையாகப் போங்க !" என்று கூறித் தங்கராசு கும்பலிலே மறைந்து போய் விட்டான்.

வீட்டுக்கு வந்து சட்டையைக் கழற்றிய போதுதான் தங்கராசுக்கு ஈரத்துண்டை அங்கேயே விட்டு விட்டது நினைவுக்கு வந்தது. ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

மறுநாள் தங்கராசு தன் வீட்டின் கொல்லைத் தாழ்வாரத்திலே, கன்றுக்குட்டிக்காகக் கயிறு ஒன்று போட்டுக் கொண்டிருந்தான். தம் போக்கில் கயிறு பின்னும் கரங்களைப் போலவே அவன் மனமும் முதல் நாள் மூர்ச்சை தெளிவித்த அந்தப் பெண்ணைச் சுற்றி என்னவலை பின்னிக் கொண்டிருந்தது.

"என்ன தங்கராசு, கயிறு எதுக்கு, செவலைக் கன்றுக்குட்டிக்கா?" என்று எதிரேயிருந்து வந்தது ஒரு குரல்.

அவனிடமிருந்து பதிலைக் காணோம்; அவன் இந்த உலகத்தில் இருந்தால்தானே?

"என்னடாது, நான் கேக்குறது உன் காதிலே விழலை?"

அவன் அப்போதுதான் விழித்துக்கொண்டான். "அடடே, நீங்களா மாமா, வாங்க! நான் எதையோ நெனச்சுக்கிட்டு..." என்று இழுத்தான் அசட்டுச் சிரிப்புடன்.

"எதையோவா, இல்லே யாரையோவா?"

தங்கராசு திடுக்கிட்டுப் போய்விட்டான். 'கப்பையா மாமாவுக்கு ஞானதிருஷ்டிகூட உண்டா என்ன?'

"என்னடா ஒண்ணும் பதிலைக் காணோம். அங்கே என்னடான்னா அது இவன் தண்ணியைக் கொண்டாந்து தெளிச்சதையும், சோடா வாங்கிக் கொடுத்ததையும் சொல்லிச் சொல்லி மாஞ்சு போகுது: இங்கே இந்தப் பயல் முன்னாலே மலை மாதிரி ஆள் வந்து நிக்கிறதுகூடத் தெரியாம, பேச்சையே மறந்த



வன் மாதிரி முழிச்சுக்கிட்டு நிக்கிறான்.... ஊம்'' என்று கேலி செய்தார் கப்பையா.

விஷயம் அவருக்குத் தெரியுமென்பது தங்கராசுவுக்கு விளங்கிவிட்டது. ''அட போங்க மாமா நீங்க ஒண்ணு!'' என்று சிணுங்கியவன் ''அப்படீன்னா அந்தப் பொண்ணு இந்த ஊரிலேயேவா இருக்கு?'' என்று வினவினான்.

''ஏன், அதைத் தெரிஞ்சு என்ன ஆகணும்?''

''அதுக்கில்லே மாமா! ஒரே ஊரிலே இருந்துக்கிட்டா இதுவரை அதைப் பார்க்காம இருந்திருக்கோம்னுதான் கேட்டேன்; யார் மாமா அது?''

'' ஏது, சொல்லாமப் போனா விடமாட்டான் போலிருக்கே பய; வையாபுரி மக தாண்டா அகிலம்!''

''ஆங்...!''

''என்னடா தம்பி அசந்துட்டே? நீ பார்த்திருக்க மாட்டே, வையாபுரியின் மூத்த தாரத்தோட பொண்ணுதான் இது. அந்த மகராசி போறப்போ இது இம்புட்டுக் குழந்தையா இருந்தது. அப்புறம் அவன் இரண்டாந்தாரமாகக் கட்டிக் கிட்டிருக்கானில்லே ஒரு பிசாசு, அது வீட்டுக்கு வந்து, கொண்ட புருசனைக் கைக்குள்ளே போட்டுக்கிட்டு, இந்தப் பொண்ணையும் பாடாய்ப்படுத்திப் பம்பரமா ஆட்டி வைச்சுக்கிட்டிருந்தது. ஒரு சமயம் அகிலத்தோட அத்தைக்காரி ஏதோ பொங்கல் பெருநாளின்னு ஊரிலிருந்து இங்கே வந்திருந்தா. பரட்டைத் தலையும், கிழிஞ்ச சட்டையுமா இது அனாதைமாதிரி நிக்கிறதைப் பார்த்து வயிறெரிஞ்சு, நல்லதனமாகத் தம்பி கிட்டப் பேசி, போகும்போது கூடவே அழைச்சுக்கிட்டுப் போயிட்டா. இத்தனை வருஷம் வைச்சிருந்து ஆளாக்கி விட்டிருக்கா. இப்ப அதுகூடப் பொறுக்கலை போல இருக்கு. பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு, 'கண்ணாலம் கட்டற வயசு ஆயிடிச்சு, கொண்டு வந்து விடு'ன்னு கடுதாசு போட்டிருக்கான் இந்தக் கேணப் பய. அதுதான் இங்கே புறப்பட்டு வந்திருக்கு. இன்னிக்குக் காலமே காவேரியிலே குளிச்சுப்பிட்டு வரப் போத்தான் அதைப் பார்த்தேன். எனக்கு அடையாளமே புரியல்லே. அப்புறம் அது வாத்தான் என்னைக் கூப்பிட்டுப் பேசிக்கிட்டிருந்தது...சரி, நான் வரேன், தம்பி!'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

தங்கராசுவின் மனம் அகிலத்தின் நினைவினின்றும் மீளவே இல்லை. 'வையாபுரியின் மகளா அகிலம்? நாறும் நத்தையின் வயிற்றில் பிறந்ததா இந்தச் சட்டாணி முத்து!'

வையாபுரிப் பிள்ளை அந்த ஊரிலேயே ஒரு பெரிய புள்ளி. காவேரியின் பார்வைக்கு இலக்கான பல ஏக்கர் நஞ்சை நிலம்; ஐயன் வாய்க்கால் கரையிலே பகலைக்கூட இரவாக்கிக் கொண்டு பெரிய தோப்பு! தெருவிலே தெற்கே பார்த்த மச்சு வீடு. இவை தவிர வேறு என்ன வேண்டும்?

ஆனாலும் வையாபுரிக்கு வேண்டித்தான் இருந்தது—ஊர் விவகாரம். எந்த விஷயங்களிலும் பிள்ளையின் போக்கே தனி. உருட்டலும், மிரட்டலும், அதிகாரஆணவமும், அக்கிரமமும், அடாவடித்தனமும்தான் அவருடைய நியாயத் தராசின் எடைக் கற்கள்!

இப்படிப்பட்ட 'நல்ல' மனிதரின் கையில் தான் ஊரின் பரிசல் குத்தகை வேறு முடங்கிக் கிடந்தது.

ஆரம்பத்திலிருந்தே அவருடைய போக்கு தங்கராசுவுக்கு அடியோடு பிடிக்கவில்லை. முக்கியமாக, பரிசல் குத்தகையை அவரிடமிருந்து பிடுங்கிவிட அவன் விரும்பினான்.

அந்த வருஷம், வழக்கம்போலப் பரிசல் குத்தகை ஏலத்துக்கு வந்தபோது, தங்கராசு வையாபுரிக்குப் போட்டியாக எதிர்க் குரல் கொடுத்துத் தொகையை உயர்த்தி எடுத்து விட்டான். விரும்பி இருந்தால் வையாபுரி, தங்கராசு நெருங்க இயலாத அளவுக்குக் குத்தகைத் தொகையை உயர்த்தி யிருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. 'எனக்கு எதிராக இந்த ஊரிலே இவன் பரிசல் தள்ளுவதை நான் பார்த்துப்புடறேன்!' என்று மீண்டும், மீண்டும் கறுவியவாறு இருந்தார்.

தங்கராசுவை வேரோடு அழித்துவிட விரதம் பூண்ட வையாபுரி என்னென்ன சதித் திட்டங்களை வகுத்திருந்தாரோ, அது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். ஆனால், முதற் காரியமாகத் தம் கீழ் பரிசல் தள்ளிக் கொண்டிருந்தவர்களிடம் சென்று, அவர்கள் தங்கராசுவிடம் வேலை செய்யக் கூடாதென்று தடை விதித்து விட்டார்.


காவேரியில் தண்ணீர் விட இன்னும் ஒரு வாரந்தான் இருந்தது. அதற்குள் பரிசலோட்டுவதற்கு வேண்டிய ஆற்றலும், அனுபவமும் உள்ள ஆட்களை எங்கிருந்து கொண்டு வருவது? இந்த நிலையில்தான் கப்பையா பிள்ளை அவனிடம் வந்தார். அவர் கொடுத்த தைரியம் தங்கராசுவுக்குத் தெம்பை அளித்தது. தங்கராசு அப்படியே நெடுஞ்சாண்கிடையாக அவர் கால்களிலே விழுந்தான்.

கை மாறி வந்த குத்தகையை நல்ல நாளிலே துவக்கி, நல்ல முறையிலே நடத்தி வந்தான் தங்கராசு. வையாபுரி மட்டும் அவ்வப்போது 'நான் இருக்கிறேன்' என்று காட்டிக் கொண்டுதான் இருந்தார். அவரை அவன் விஷம் போல் வெறுத்தான்.

சேற்றை வெறுத்தாலும், அதிலே விளைந்த செந்தாமரையை விரும்புகிறோமல்லவா? இன்னதென்று அறியாத நிலையிலே மூர்ச்சை தெளிவிக்கப்பட்டுத் தன் இதயத்திலே அழியாத இடம் பெற்று விட்ட அகிலத்தை உண்மை தெரிந்த பிறகும் நாடவே செய்தது அவனுடைய வெள்ளை உள்ளம். ஆனால் அவள் அவனை விரும்ப வேண்டுமே? விரும்புவது கிடக்கட்டும்; முதலில், தந்தையின் வைரியென்று அவனை வெறுக்காமலாவது இருக்க வேண்டுமே! அதற்குரிய விடையை அவன் அறியும் சந்தர்ப்பம் விரைவிலேயே கிட்டியது.

அந்தி நேரம். பரிசல் துறையிலே என்றுமில்லாதபடி, அபூர்வமான அமைதி குடிகொண்டிருந்தது. அங்கிருந்த கீற்றுக் கொட்டகையில், என்னவோ கூட்டிக் கழித்துக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான் தங்கராசு. வாயிற்படியில் ஏதோ நிழல் தட்டியது; அவன் தலை நிமிர்ந்தான்: எதிரே சிலைபோல் நின்று கொண்டிருந்தாள் அகிலம்!

அவள் கறுப்புமல்ல, சிவப்புமல்ல; மாநிறம். அழகு கொஞ்சும் வாளிப்பான உடற்கட்டு.


பி.ஓ.ஏ.ஸி.யாரிடமிருந்து
மணமார்ந்த வாழ்த்துகள்
B·O·A·C
பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேய்ஸ் கார்ப்பரேஷன், குவான்டாஸ்,
இ.எ.ஏ., எம்.இ.ஏ மற்றும் டி.இ.ஏ.எல் இவர்களின் கூட்டுறவால்
நடத்தப்படுகிறது


மாட்டில், ஜடபில்லை, ஜடருக்க இவ்வளவையும தாங்கக்
கூந்தல் வேண்டாமா? கேசவர்த்தினி இருக்கும்போது கவலை
ஏன்? கேசவர்த்தினியினுல் அபரிமிதமான கூந்தலழகைப்
பெறுங்கள். கேசவர்த்தினி ஷாம்புவைக்கொண்டு கேசத்தை
மணமாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்
கேசவர்த்தினி
பிராடக்ட்ஸ், கோயமுத்தூர்

போனசு ஆண்டு 1959

இன்றே

'இலாபத்துடன்கூடிய'

பாலிசியினைப் பெறுவீர்

விரைவில் இரண்டாம் மதிப்பீடு

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் இரண்டாவது மதிப்பீடு 31 டிசம்பர் 1959ல் செய்யப்படும். மதிப்பீட்டு நாளில் உள்ள 'இலாபத்துடன் கூடிய' நடைமுறையில் இயங்கும், தகுதியான பாலிசிகள் அனைத்தும், அந்த மதிப்பீட்டின் விளைவாக வெளியாகின்ற இலாபத்தில் பங்குபெற உரிமை உள்ளவை ஆகும்.

31 டிசம்பர் 1957 அன்று வரை செய்யப்பட்ட கார்ப்பொரேஷனின் முதல் மதிப்பீடு காட்டிய மிகுதித்தொகை, கீழ்க்காணும் வீதப்படி கார்ப்பொரேஷன் வழங்கிய 'இலாபத்துடன் கூடிய' பாலிசிகளுக்கு போனசாக உதவப் போதுமானதாக இருந்தது.

என்டௌமென்ட் காப்புறுதிகள் : (Endowment Assurances)	காப்புத்தொகை (Sum Assured) ஆயிரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 14
முழு ஆயுள் காப்புறுதிகள் : (Whole Life Assurances)	காப்புத்தொகை ஆயிரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 17½

முக்கியமானது : 31 டிசம்பர் 1959 க்குள், குறைந்த தொகைக்குக் 'கட்டி முடிப்பு'ச் செய்த பாலிசிகள் (Paid-up Policies), அல்லது காலாவதி யான பாலிசிகள் போனசு பெறத்தகுதி உடையனவாகா.

பாலிசியைப் பாதுகாப்பாக வைத்துப் பேணுங்கள். அப்போதைக்கு அப்போது செலுத்தவேண்டிய பிரீமியங்களைத் தப்பாது ஒழுங்காகச் செலுத்துங்கள். இரண்டாவது மதிப்பீட்டின் விளைவாகக் கிடைக்க இருக்கும் போனசுக்கு உங்கள் பாலிசியைத் தகுதியுள்ளதாக்க உறுதிகொண்டு வழிகாணுங்கள்.

நினைவிலிருத்துங்கள் 1959 போனசு ஆண்டு

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ASP-LIC-AS-12 A Tam

அதிலே அங்கச் செருக்கற்ற ஓர் அடக்கம். சதா புன்முறுவல் பூத்த முகம்; அதிலே குறு குறுவென்று அலையும் கரிய பெரிய விழிகள். இடையிலே வளைக்கரம் அணைத்த நீர்க்குடம்; அதிலிருந்து தண்ணீர் தளும்பி, அவளுடைய பூப்போட்ட வாயில் சேலையை ஒரு பக்கமாக நனைத்திருந்தது.

தங்கராசுவின் கண்கொட்டாத பார்வையைச் சந்திக்க முடியாமல் முகத்தைச் சற்றே திரும்பியவண்ணம் அகிலம் மெல்ல அவன் அருகில் வந்து, "இந்தாங்க உங்க துண்டு; உங்களைத் தனியாகக்கண்டு இதைக் கொடுக்கணும் கொடுக்கணும்னுதான் இத்தனை நாள் காத்துக்கிட்டிருந்தேன். ஆனா அதுக்கு நல்ல வேளை இன்னைக்குத்தான் வந்திச்சு!" என்று, கறுப்புக் கரைபோட்ட அந்தக் குளித்தலைத் துண்டை அவன் அருகே வைத்தாள்.

அன்றையச் சந்திப்பின் பொழுது தன்னுடைய காதல் ஒருதலைப்பட்டதல்ல என்பது தங்கராசுவுக்குப் புரிந்து விட்டது!

அன்று விடிந்ததும், வழக்கத்தை விட முன்னதாகவே துறைக்குக் கிளம்பி விட்டான். வழியிலே பரிசல் தள்ளும் சின்னையனும் வந்து சேர்ந்து கொண்டான். சாலையின் ஓரிடத்தில் வையாபுரியின் 'டயர்' போட்ட வில் வண்டி அவர்களைத் தாண்டி வேகமாகச் சென்றது.

"பார்த்தீங்களா, அண்ணே! நானைக்குக் குணசேகரம் தேருல்ல; நம்ம பரிசல்லே ஏறி அக்கரைக்குப் போகக் கூடாதுன்னு, இன்னைக்கே வண்டியைக் கட்டிக்கிட்டுக் கிளம்பிட்டாரு வையாபுரி. கோட்டைக்குப் போயி அங்கேயிருந்து முசிறி போற ரோட்டிலே சுத்திக்கிட்டு, நேரே வண்டியிலேயே போயிடப் போறாரு!" என்றான் சின்னையன் கேலியாக.

தங்கராசுவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "இந்தக் குறும்புதானே கூடாதுங்கறேன்!"

"நெசந்தான், வையாபுரி சாமி கும்பிடவா புறப்படுவாரு, காலங் கார்த்தாலே? சம்பந்தியைப் பார்க்கத்தான் போய்க்கிட்டிருப்பாரு!"


"அது யாரு சம்பந்தி?"

"உங்களுக்குத் தெரியாதா சேதி? மேக்குடியாரு மகனுக்குத்தானே தன் பொண்ணைக் கட்டிக் கொடுக்கப் போறாரு; பேச்சு வார்த்தையெல்லாம் தீர்ந்து, ஆச்சு, இந்தப் புரட்டாசி முடிஞ்சதும் கல்யாணமாமே!"

"யாரு, மேக்குடியாரு மகனுக்கா, சிங்காரத்துக்கா?"

"ஆமாங்கறேன், அதிலென்ன ஆச்சரியம், வையாபுரி செய்யற காரியமே அப்படித்தானே? அங்கேயும் சொத்திருக்கு, நெலமிருக்கு; அவருக்கு வேறு என்ன வேணும்?"

தங்கராசுவுக்கு நெஞ்சு தாங்க முடியாமல் வலித்தது. அவன் பதிலொன்றும் பேசவில்லை. பரிசல் குத்தகை எடுத்த புதிதிலேதான் தங்கராசு முதல் தடவையாகச் சிங்காரத்தைச் சந்தித்தான். கையெழுத்து மறையும் நேரம். சிங்காரம் ஒரு வண்டியிலே வந்து, துறையில் இறங்கினான். மண்ணில் புரளும் வேட்டி, முண்டா பனியனைக் காட்டிக் கொண்டு மெல்லிய மல் ஜிப்பா, கையிலே அழகான தங்கக் கடிகாரம், கழுத்திலே மைனர் 'செயின்', கிருதா கிராப்பு அவனைப் பார்க்கவே பிடிக்கவில்லை தங்கராசுவுக்கு.



"நீங்கதானே இங்கே பரிசல் குத்தகை வைச்சிருக்கிறது?"

"ஆமாம், என்ன வேணும்?"

"ஒண்ணுமில்லே, தண்ணி கரையை ரொம்ப அறுக்குதுன்னு ரிப்பேர் செய்யறதுக்காகக் 'கோணக்கரை பரிசல்துறை'யை மூடிப்பிட்டாங்க இல்லே, அதான் இங்கே வந்தேன்; இந்தச் சரக்கையெல்லாம் எதிரே, அணைக்கரைக் காட்டுக்குக் கொண்டு போகணும்!"

தங்கராசுவின் பார்வை வண்டிக்குள்ளிருந்த சாமான்களின் மேல் விழுந்தது. நவசாரத்தின் நெடி ஆளைத் தூக்கியடித்தது! அவனுக்கு உண்மை விளங்கி விட்டது. "பரிசல் வராதுங்க!" என்றான்.

"நீங்க ஒண்ணும் யோசனை செய்யாதீங்க. இது இன்னையோட போற விஷயமில்லே. வாரத்துக்கு இரண்டு தடவையாவது இப்படிப் போய் வர வேண்டிய அவசியம் இருக்கும். நீங்க ஒருவாரம் முழுக்க உழைச்சுச் சம்பாரிக்கிறதுக்கு மேலே, இதுலே ஒரே தடவையிலே சம்பாரிச்சுடலாம்!" என்று ஆசை காட்டினான் சிங்காரம்.

"இங்கே பணத்துக்காக மட்டும் நான் தொழில் நடத்தல்லே; தெரியுமில்லே! பேரும்

தான் வேணும் எனக்கு. நீங்க போங்க!'' அத்தகைய பையனா ஒரு குலமாணிக்கத்தின் கையைப் பற்றிக் கல்யாண மாப்பிள்ளையாகக் காத்திருக்கிறான்? அதுவும் யாரைத் தன் இஷ்டதேவதையாக அவன் தன் இதய பீடத்திலே ஏற்றி வைத்துப் பூஜித்து வருகிறானே, அந்த அகிலத்தையா? தங்கராசவுக்கு உடல் துடித்தது; உள்ளம் கொதித்தது.

யோசித்து யோசித்துக் கடைசியில், தனக்கு அகிலத்தின் மேலுள்ள குற்றமற்ற காதலைத் தெரிவித்து அதைக் கல்யாணத்திலே முடித்து வைக்குமாறு சுப்பையா பிள்ளையின் உதவியைக் கோர அவன் முடிவு செய்திருந்தான். ஆனால் அவர் ஊரில் இல்லை. இப்போதோ காரியம் மிஞ்சிவிடும் போலிருக்கிறது. ஒரு துளி ரத்தம் இருக்கும்வரை இந்தப் பொருத்தமற்ற விவாகத்தை நடத்தவிடக் கூடாதென்று உறுதி செய்து கொண்டான். விடிந்தால் குணசேகரம் தேர். அதற்கு வெள்ளி முளைக்கும் போதே வந்து சாயத் தொடங்கும் கூட்டத்தைச் சமாளிப்பது பற்றிக்கூட அவன் அந்தச் சமயம் கவலைப்படவில்லை.

யாருடைய நல்வாழ்வுக்காக அன்று அவன் நாள் முழுதும் மனத்தை அலட்டிக் கொண்டு கிடந்தானோ, அந்த அகிலத்தின் தந்தை, அவனை அவல வாழ்விலே வீழ்த்திவிட அதே தினத்தில்தான் ஒரு திட்டம் தயாரித்திருந்தார்! பரிசல் குத்தகைக்காரனுக்கு ஆண்டிலேயே அதிக வருமானத்தை அள்ளித் தருவது குணசேகரம் தேர்தான் என்பது ருசிகண்ட பூனையான அவர் அறிந்த செய்திதானே? ஆகவே, மறுநாள் தங்கராசவின் பரிசல்கள் அவனுக்கு உதவாமல் உபயோகமற்றுப் போகும்படி செய்யத் தம் ஆட்களை ஏவி விட்டிருந்தார்!

அந்தப் பணியாட்கள் பேயும் உறங்கும் நள்ளிரவிலே, பூனைபோல் பரிசல் துறைக்குச் சென்று, பரிசல்களின் மெழுகுச் சீலையைக் கிழித்து, மூங்கிலாலான அடித்தலங்களை முறித்து, எஜமானரின் கட்டளையை அப்படியே நிறைவேற்றி விட்டனர்.

நாசவேலை முடிவடைந்த சமயம். அவர்களை நோக்கி எதிரே ஓர் உருவம் ஓடி வந்தது. அதைக் கைத்தடியால் தீவிரமாகத் தாக்கினான் ஒருவன்: அவ்வளவுதான்; 'அம்மா!' என்று அலறியவாறு சுருண்டு விழுந்தது அது. குரலிலிருந்த வேறுபாட்டைக்கண்டு திகைத்த ஆட்களில் ஒருவன் சட்டென்று புகை பிடிப்பதற்காக மடியிலிருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியைப் பற்ற வைத்தான். ஒளியிலே தெரிந்த உண்மை அவர்களைக் கதிகலங்க அடித்துவிட்டது. அவர்களுடைய எஜமானரின் மகளல்லவா அங்கே அலங்கோலமாகக் கீழே கிடந்தாள்!

அவளை அப்படியே அலுங்காமல் எடுத்துக் கொண்டு வந்து வையாபுரியின் முன்னே கிடத்தினர் அவ்வாட்கள். அல்லித்தண்டு போலத் துவண்டு உணர்வற்றுக் கிடக்கிறதைப் பார்த்ததும் வையாபுரியின் வைர நெஞ்சமும் கலங்கியது. டாக்டர் வந்து அகிலத்தைப் பரிசோதித்தது எதிலும் வையாபுரியின் சிந்தனை செல்லவில்லை. அகிலம் பரிசல் துறைக்கு ஏன் போனாள் என்ற புதிரை விடுவிப்பதில்தான் மூழ்ந்தது.

வையாபுரி தன் வீட்டு மாடியிலே தம் ஆட்களோடு அந்தரங்கமாகச் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தபோது ஏதோ காரியமாக அங்கே வந்தாள் அகிலம். படி ஏறி வரும் போதே அவர்களுடைய பேச்சுக்கிடையில் தங்கராசவின் பெயர் அடிபடுவது கேட்டு அப்படியே நின்று கவனித்தாள். திட்டம் தெரிந்தது.

ஏற்கனவே தன் திருமண விஷயமாகத் தந்தையின் முடிவையறிந்து அவரிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வழியறியாமல், உள்ளமுடைந்து உருகிக் கொண்டிருந்த அவளுக்கு இந்தச் சூழ்ச்சி பேரதிர்ச்சியைத் தந்தது. தங்கராசவைப் படுகுழியில் வீழ்த்தும் பாழும் திட்டத்தைத் தகர்த்தெறிய விரும்பினாள். பரிசல்துறைக் கொட்டகையில்தான் இரவில் அவன் படுப்பது வழக்கம் என்பதை ஏற்கனவே அவள் அறிவாள். எனவே அன்றிரவு, யாரும் அறியாமல் கிளம்பிப் பரிசல்துறைக்கு வந்தாள். தங்கராசவைக் காணோம். அவனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லாமல் திரும்பவும் மனமில்லை. நிசி வேளையிலே, ஊருக்கு வெளியே ஓடும் காவேரிக் கரையிலே, பயத்தால் படபடக்கும் இதயத்தைக் கையிலே பிடித்துக்கொண்டு தங்கராசவுக்காகத் தன்னந்தனியாகக் காத்துக் கிடந்தாள். அப்படியே தன்னையறியாமல் தூங்கியும் விட்டாள். எவ்வளவு நேரம் அவ்வாறு சென்றதோ, தெரியாது. திடீரென்று விழிப்புக் கொடுத்தது அவளுக்கு. துறையிலே தண்ணீர் அலைபடும் ஒலி அவள் செவிகளிலே விழுந்தது. அவ்வளவுதான்; அலறியடித்துக் கொண்டு எழுந்திருந்த அவள், என்ன செய்கிறோமென்று தெரியாமல், நீர் அருகே ஓடினாள். பாய்ந்து வந்தவளை வரவேற்றது ஒரு பாணத்தடி!

பொழுது புலரும் சமயம். பூரண நினைவு மீண்ட அகிலம் '' அம்மா!'' என்று மெல்லிய குரலில் முனகியவாறு இலேசாகப் புரண்டாள். அருகிலே அமர்ந்திருந்த தந்தையின்மேல் அவள் பார்வை விழுந்தது. ஒரு கணம் அவர் முகத்தையே உற்று நோக்கியவள் திடீரென்று ஏதோ தீர்மானித்தவள் போல் தீனமான குரலில் பேச ஆரம்பித்தாள்: '' அப்பா! எனக்கு நினைவு தெரிஞ்சதிலிருந்து ஒரு நாள் கூட நீங்க அருமை மகளாச்சேன்னு என்னை அரவணைச்சு அன்பு காட்டினதில்லே. நேற்று வரைக்கும் அத்தைகிட்டே வளர்ந்தேன். இங்கே வந்ததிலிருந்து ஓர் அடிமை மாதிரிதான் இருந்துக்கிட்டிருக்கேன். என்னைக் கட்டிக் கொடுக்கணும்னு நீங்க மாப்பிள்ளை தேடி இருக்கீங்க; அதைப் பத்தி ஒரு வார்த்தை எங்கிட்ட நீங்க கேக்கல்லே; என் மனசிலேயும் ஆசைன்னு ஒண்ணு இருக்குமேன்னு நீங்க நினைக்கல்லே. அதெல்லாம் எப்படியோ போகட்டும். என் ஆயுசிலேயே முதல் தடவையா இப்ப நான் உங்களை ஒண்ணு கெஞ்சிக் கேட்டுக்கறேன்: நீங்க தயவுசெஞ்சு இனிமேல் அந்தப் பரிசல்காரர் வழிக்குப் போகாதீங்க. அவர் உங்களுக்கு என்ன கெடுதல் செஞ்சாரு? குத்தகையை நியாயமா ஏலத்திலே எடுத்து, நல்ல முறையிலே நடத்திக்



ஸ்ரீ M. R. நரஸிம்ம அய்யங்கார் தமது 97வது வயதில் திருவல்லிக்கேணியில் அவரது இல்லத்தில் 9-12-59 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவருக்கு மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பல பேரன் பேத்திகளும் இருக்கிறார்கள். பிள்ளைகளில் மூத்தவர் ஸ்ரீ N. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஜில்லா ஜட்ஜாக இருந்து ரிடையர் ஆனவர்.

கிட்டு வராரு. அவரைத் தீத்துக்கட்டணும்னு நீங்க ஏன் இப்படிக் கொடி கட்டிக்கிட்டு இருக்கீங்க? இப்ப நீங்க முதல்லே இங்கிருந்து போயி, நம்ம தோட்டத்திலே போட்டுவைச்சிருக்கிற பழைய பரிசலே அவருக்குக் கொடுத்து உதவி பண்ணுங்க.. அதுக்காக நீங்க என்னைப் பாழுங் கிணற்றிலே பிடிச்சுத் தள்ளினாலும், நான் சந்தோஷமா குதிக்கிறேன்!''

அகிலத்தின் வார்த்தைகளிலே பொதிந்திருந்த உண்மை விசுவரூபம் எடுத்து வையாபுரியின் கண்களைத் திறந்தது. திறந்த அவ் விழிகள் ஆயுளிலேயே முதற் தடவையாகக் கண்ணீர் உகுத்தன. அவருடைய கல் நெஞ்சம் நெகிழ்ந்தது! இளையாள் மோகமும், கண்மூடித்தனமான அலட்சிய மனோபாவமும் அடக்கி வைத்திருந்த பெற்ற பாசமும் அவருடைய இதயத்தின் அடிவாரத்திலிருந்து பீறிட்டு எழுந்தது. தமது அருமை மகள் முதன் முதலாகத் தம்மிடம் வாய் திறந்து வெளியிட்ட விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அவர் வெளியே ஓடினார்.

அங்கே பரிசல்துறை ரகளைப் பட்டுக்கொண்டிருந்தது. பரிசல் போக்குவரவு இல்லாததால், துறையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த திருவிழாக் கூட்டம் ஒரு புறம். பாழடைந்த பரிசல்களைப் பார்த்து அங்கலாய்க்கும் ஜனங்கள் ஒரு பக்கம். இவை தவிர கொட்டகையைச் சுற்றி வேறு ஒரே கூட்டமாக இருந்தது.

உள்ளே, ஆ. என்ன கோரக் காட்சி! அடிபட்டுப் புழுதி படிந்த உடம்பிலே, நெற்றி, விலா, முழங்கால் ஆகிய இடங்களிலே ரத்தக் கறை படிந்த பெரிய கட்டுக்கள் போடப்பட்டு, ஒரு கயிற்றுக் கட்டிலில் பரிதாபமாகக் கிடந்தான் தங்கராசு. அவன் கண்கள் மூடியிருந்தன. பக்கத்திலே, சென்ற இடத்திலே இருப்புக் கொள்ளாமல் தேரை முன்னிட்டு முதல்நாள் இரவு ஊர் திரும்பியிருந்த கப்பையா அவனுடைய கைகளைப் பற்றியவாறு அமர்ந்திருந்தார்.

'' ஐயோ, தம்பி! உன்னைப் பார்க்கிறபோது வயத்தைப் பத்திக்கிட்டு எரியுதடா! எந்தப் பாவிடா உன்னை இப்படிச் செஞ்சது?'' என்று அடிவயிற்றிலிருந்து அலறினார் அவர்.

தங்கராசு மெல்லக் கண் திறந்து, ஈனஸ்வரத்திலே ஆரம்பித்தான். '' நேத்து நம்ம சின்னையன் ஒரு சமாசாரம் சொன்னான். கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்கறாப் போலே, வையாபுரி தன் பெண்ணைச் சிங்காரத்துக்குக் கொடுக்கப் போறாருன்னு! அதைக் கேட்டதிலிருந்து என் மனசு சரியா இல்லே. அந்தச் சிங்காரத்தை எனக்கு நல்லாத் தெரியும். அவன் செய்யற அக்கிரமங்களிலே, அணைக்கரைக் காட்டிலே, கூட்டுச் சேர்த்துக்கிட்டுக் கள்ளச் சாராயம் காய்ச்சறதும் ஒண்ணு! அந்தக் கொடிய குற்றத்தைக் கையும் களவுமாப் பிடிக்கணும்னு முடிவு செஞ்சேன். நல்லா இருட்டினப்புறம் சின்னப் பரிசல் எடுத்துக்கிட்டு அக்கரைக்குப் போயி காட்டிலே அவங்க இடத்தைத் தேடி அலைஞ்சு ரொம்ப நேரமானப்புறம் ஒரு வழியா அதைக் கண்டுபிடிச்சேன். அந்தச் சமயம் என்னைக் கண்டதும் கூச்சல் போட்டு எல்லாரையும் வரவழைச்சுட்டான். அவ்வளவு தான்; அத்தனை பேருமா என்னைச் சுத்தி வளைச்சுக்கிட்டு அடிச்சு நொறுக்கிட்டானுக. அப்புறம் இதோ இந்த 'லஸ்கர்'தான் என்னைக் காப்பாத்தினாரு!'' ஆயாச மிகுதியால் கண்களை மூடிக்கொண்டான் தங்கராசு.

உடனே ஆகவாசம் பெற்ற தங்கராசு கப்பையா பிள்ளையின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, '' மாமா! நீங்க சமயத்திலே திரும்பி வந்துட்டீங்க! இத்தனை நாள் என் மனசிலே வைச்சிருந்ததை உங்களுக்குச் சொல்றேன்: அகிலத்தும் மேலே நான் என் உயிரையே வைச்சிருந்தேன். அதுக்கு வேற இடத்திலே கல்யாணம்னு கேட்டதும், என் உயிர் அப்பவே போயிடிச்சு. இப்ப இருக்கிறது வெறும் உடம்புதான். இதுகூட இந்தப் பூட்டுக்குப் பிழைக்கப் போவுதோ, இல்லையோ தெரியாது. நீங்க எப்படியாவது வையாபுரி கிட்ட அவர் மகளைச் சிங்காரத்துக்குக் கொடுக்க வேண்டாம்னு சொல்லுங்க; அதுதான் நான் உங்களை வேண்டறது!'' என்றான் கெஞ்சும் குரலில்.

'' தங்கராசு! உன் பேரைப் போலவே, உன் மனசும் தங்கம்! அது தெரியாமெ, ஊருக்கே கண்ணாயிருக்கிற உன்னைப் பகைச்சுப் படாத பாடுபடுத்தி வச்சுப்பிட்டேன் இந்தப் பாவி. பெத்த அப்பன், நான் என் பொண்ணைப் படுகுழியிலே தள்ள இருந்தேன். நீ அவளோட நன்மைக்காக உன் பொன்னான உடம்புலே வெட்டுப்பட்டு, இப்ப உயிருக்கே ஆபத்தா படுத்துக் கிடக்கே. சத்தியமா, உனக்கு முன்னாலே நான் ஒரு தூசிக்குச் சமானம்!'' என்று வையாபுரி தழுதழுத்த குரலில், கண்ணீருக்கிடையில் கூறினார்; ஆற்றங்கரைக் கூட்டம் ஆச்சரியத்தினால் அதிர்ந்தது.

அன்று ஜீயபுரம் திருநாள். ரங்கனைத் தரிசிப்பதற்காக மண்டபத்துக்குள் நுழைந்தான் தங்கராசு, பக்கத்திலே அகிலம் வர. மாசில் வீணையும் மாலை மதியமும் போல இணைந்த அவ்விளஞ் ஜோடியின் அஞ்சலியை ஏற்று எதிரே வரையாது வழங்கும் வள்ளலைப் போல், வந்தவர்க் கெல்லாம் வற்றாத புன்னகை காட்டிக் கடைக்கண் அருளைப் பொழிந்து கொண்டிருந்தான் அரங்கன் — அழகிய மணவாளன்.

★ திருமணமா ?
★ பொங்கற் பண்டிகையா ?
★ பிறந்த நாளா ?
★ அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவா ?
★ புதுமனை புகுதலா?
★ பாராட்டுதலா ?



எல்லா நன்னாட்களிலும் முதியோர்க்கும் இளையோர்க்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பரிசளிப்பதற்கேற்ற உயரிய புத்தகங்கள்

1. விப்கோ "நன்னாள் அன்பளிப்பு"

(உடல் நலன், குடும்பம், வரவும் செலவும், நல்வாழ்வுக்குரிய வழிகள்)

"...பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். அழகான அட்டைப் படம் ; கைக்கு அடங்கும் புத்தகம். தொகுத்திருக்கும் விஷயங்கள், மனம் நிறைந்திருக்கும் கருத்துக்கள்."-"கல்கி", 25-10-1959.

ஏராளமான படங்களுடன் : விலை ரூ. 2.00 ; தபால் மூலம் ரூ. 2.80

2. விப்கோவின் "செல்வம் செழிக்க"

(சிறிய முறையில் பணம் சேர்ப்பதற்கும் சேமிப்பதற்கும் உற்ற வழிகள்)

ஏராளமான படங்களுடன் : விலை ரூ. 2.50 ; தபால் மூலம் ரூ. 3.30

விப்கோ, சென்னை-17; தாமோதரம் கம்பனி, அப்பா பில்டிங், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ், சென்னை-2, ரயில்வே ஸ்டால்கள்; கிருஷ்ணஸ்வாமி கம்பனி, தெப்பக்குளம், திருச்சி-2; C. R. நடராஜன், கோயமுத்தூர்; கவிகுயில் பதிப்பகம், ராஜ வீதி, கோயமுத்தூர்; சந்திரையா செட்டியார், கோட்டை, சேலம்-1; நடனசுந்தரம், புதுமண்டபம், மதுரை; S. M. ஜேசுதாசும், நாகர்கோயில்; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.

தேனாம்பேட்டை பொருட் காட்சி : விப்கோ ஸ்டால் நெ. 156

பாங்க் ஆப் இந்தியா லிட்.

ஸ்தாபிதம் : 1906

செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ. 3,00,00,000
ரிஸர்வ் நிதி	...	ரூ. 3,10,00,000

தலைமைக் காரியாலயம் : மகாத்மா காந்தி ரோடு, கோட்டை, பம்பாய் -1

இந்தியாவின் பிரதான நகரங்களில் கிளைகள் உள்ளன

அயல்நாட்டுக் கிளைகள் :

ஏடன் ★ தாரேஸ்-ஸலாம் ★ ஜின்ஜா ★ கம்பாலா ★ கராச்சி ★ லண்டன்
மொம்பாஸா ★ நைரோபி ★ ஒஸாகா ★ சிங்கப்பூர் ★ டோக்கியோ

சேர்மன் : சர் கவாஸ்ஜி ஜஹாங்கிர், Bart., G. B. E., K. C. I. E.

வைஸ் சேர்மன் : ஏ. டி. ஷராப்

- ஸேவிங்ஸ் பாங்க் கணக்கு : ரூ. 50,000 வரையில் 2½ சத விகிதம் வட்டி தரப்படுகிறது. எவ்வித முன் அறிவிப்பும் இன்றி செக்குகள் மூலம் பணம் திரும்பப் பெறலாம். (விதிகளுக்குட்பட்டு)
- 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு காஷ் சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்படும்.
- அயல்நாட்டு பரிவர்த்தனை ஏற்று நடத்தப்படும்.
- சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்று நடத்தப்படும்.
- உயில், வாரிசுரிமை சம்பந்தப்பட்ட சாசனங்களுக்குப் போஷகர்களாகவும் தர்மகர்த்தாக்களாகவும் பாங்கி பணியாற்றுகிறது.
- சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்று நடத்தப்படும்

எஸ். எம். மஸானி
ஏஜெண்ட், மதராஸ்

டி. ஆர். லால்வானி
ஜெனரல் மானேஜர்

ஐந்து லட்சம் கோவிந்தா!

எல். கிருஷ்ணசுவாமி பாரதி

ஐந்து ஆண்டுத் திட்டங்களில், விவசாயத்துக்கு மட்டும் 900 கோடி ரூபாய் செலவு செய்தோமே! அதற்கேற்ற பலன் ஒன்றையும் காணோமே! இந்தப் பணம் எல்லாம் எப்படி எங்கே போயிற்றோ? இப்படி ஒரு செய்தி சமீபத்தில் புதுதில்லியிலிருந்து பிரசுரிக்கப்பட்டிருந்தது. யார் இப்படி அங்கலாய்த்துக் கொண்டது?

ஆளும் கட்சியின் எதிர்க் கட்சிக்காரர்களல்ல; ஆளும் கட்சியின் தனித் தலைவர், இந்தியாவின் தலைமை அமைச்சர், மக்களின் அன்புக்குரிய திருமகனார் நேரு பெருமகனார் அவர்களே இவ்வாறு பேசினார்!

செலவு செய்யப்பட்ட இனங்களும், விரயமான விவரங்களும் அவருக்கும் அவருடைய நிர்வாக இலாக்காவுக்கும் தெரியும். நமக்கு முற்றிலும் தெரியாது. ஆனால் ஐந்து லட்சம் ரூபாய் ஆற்றோடு போன சோக நிகழ்ச்சியை மட்டும் ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் தொகை கூட்டுப் பண்ணை விஷயத்தில் ஈடுபடுத்தப்பட்டதாகும். மத்தியப் பிரதேச ராஜ்யத்தில் விகாத் (Vihad) என்ற இடத்தில் 3,171 ஏக்கர் நிலத்தை, கூட்டுப்பண்ணை முறையில் பயிரிடுவதற்கு நூறு நபர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. எல்லாம் இனமாக வழங்கப்பட்ட நிலம். சலுகை மிகுதியினால் தீர்வை, வரி யாவும் மிகக் குறைவு. பயிர் செய்வதற்கு நபர் ஒன்றுக்கு ரூபாய் 1500 இனமாகவும், ரூபாய் 3500 கடனாகவும் ஆக ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இப்படி நூறு பேருக்குக் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் ஐந்து லட்சம்.

திட்டக் கமிஷனைச் சேர்ந்த மதிப்பீடு அதிகாரி (Evaluation Officer) விகாத் கூட்டுப் பண்ணையைப் பற்றி "ஐயாயிரம் ரூபாய் பெற்ற நூறு நபர்களில், நாற்பத்து நான்கு பேர்கள் தலைமறைவாகச் சென்று விட்டார்கள்! (Disappeared) அவர்களுக்குக் கொடுத்த பணம் செலவேட்டில்தான் எழுத வேண்டும். எல்லா அங்கத்தினர்களுமே அயோக்கியர்களாக (Dishonest) நடந்து கொண்டனர். திருடுவதில் எல்லா அங்கத்தினர்களும் ஒத்துழைத்தனர். அதனால் பண்ணைக்கு நஷ்டம். இவ்வாறு சட்ட விரோதமான களவினால் ஏற்பட்ட ஊதியத்தில் எல்லா அங்கத்தினர்களுமே பங்கு பிரித்துக் கொண்டனர்!" என்று அவருடைய அறிக்கையில் ஒளிவு மறைவின்றிச் சொல்லுகிறார்.

கூட்டுப் பண்ணையில் ஐந்து லட்சம் அலங்கோலமானதற்கு இது போதும். ஆனால் மேற்கொண்டு இதைப் பற்றி யாராவது அக்கறை எடுத்து விசாரித்துள்ளார்களா? ஐயாயிரம் ரூபாய் பெற்றவர்களில் நாற்பத்து நான்கு பேர்கள் மறைந்து விட்டார்கள் என்றால் என்ன பொருள்? உண்மையில் அப்படிப் பேர்வழிகள் ஆரம்பத்திலேயே இருந்தார்களா? இது ஆராய்தற்குரியது.

ஆராயாமல் அவசரத்தில் அள்ளித் தெளிக்கும் கோலம் எல்லாம் இப்படித்தான் அலங்கோலமாய் முடியும்! எனவேதான் அறிவும் அனுபவமும் பெற்ற அரசியல் ஞானியான ராஜாஜி அவர்கள், கூட்டுப் பண்ணை விளைவைக் குறைக்கும், நாட்டைக் கெடுக்கும் என்று எச்சரிக்கை செய்கிறார்கள்! மேலும், 'சர்க்கார் பணம் என்றால் இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தமான பணம் என்பதை ஆளும் மந்திரிகளும், அதிகாரிகளும், ஒரு சிறிதும் கவனத்தில் வைத்துச் செலவு செய்வதாகவே தெரியவில்லை. 'அடுத்த வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே!' என்ற முறையிலேயே அரசாங்கத்தால் பணம் வாரி இறைக்கப்படுகிறது! முறைதவறிச் செயலாற்றி விட்டுப் பின் பலன் கிட்டவில்லையே என்று நொந்து கொள்வதால் பயன் என்ன?

நிலச் சீர்திருத்தக் குழு அறிக்கை (Report of the committee of Panel of Land Reforms) யில் மேலே கண்ட ஐந்து லட்சம் கோவிந்தாக் கதை குறிக்கப் பெற்றுள்ளது. மேலும் இதே அறிக்கையிலே, சேவா நகர் கூட்டுப் பண்ணை, சித்தயா கூட்டுப் பண்ணை ஆகிய பல பண்ணைகள் நஷ்டத்தில் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் பரிதாப நிலைகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றன. விருப்பமுள்ளவர்கள் படித்து அறிந்து கொள்ளலாம்.

நமது ராஜ்யத்திலும் கூட்டுப் பண்ணைகள் பல இடங்களில் படுதோல்வியடைந்துள்ளன. மதுரை மாவட்ட வாலாந்தூர் பண்ணையின் படுதோல்வி நாடறிந்தது; பரிதாபகரமானது. சேலம் மாவட்டம் மணிவனந்தான் கூட்டுப் பண்ணையின் அதோகதியினை அம்மாவட்டத்தினர் நன்கு அறிவர்.

இப்பொழுது நமது மாநிலத்தில் கோயில் நிலங்களில் கூட்டுப் பண்ணை முறையைத் திணிக்க ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்!

ஆனால் இது வரை கிட்டி உள்ள செய்திகள் ஊக்கம் அளிப்பதாக இல்லை. திருச்செந்தூர் முருகப் பெருமானின் நிலங்களில் ஒரு பகுதி கூட்டுப் பண்ணை முறையில் துவங்கப் பெற்றது. கடந்த வருடம் சுமார் அறுபது ஏக்கரா (விஸ்தீரணம் சிறிது ஏறக்குறைய இருக்கலாம்) நஞ்சை நிலம் யாதொரு பயிரும் ஏறாமல் கட்டாந் தரையாகத் தரிசாகக் காட்சி தந்தது. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் என்பது தில்லி மாநகரில் உள்ள அரசாங்கத்தைச் சேர்ந்த நிறுவனம். அக் கழகத்தின் அறிக்கை, "கூட்டுறவுப் பண்ணைகளின் விளைவும் வருமானமும் மிகக் குறைவு" (Income and yield under Cooperative management was the lowest) என்று கூறுகிறது. கூட்டுப்பண்ணைகளின் சாதனைக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இந்தக் குறிப்பும், மேலே குறிப்பிட்ட திட்டக் கமிஷன் நிலச் சீர்திருத்த அறிக்கையிலே காணப்படுகிறது!

ஆளும் நிலையில் உள்ள அரசியல் அறிஞர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது அவசியம். தயவு, தாட்சண்யம் என்பதற்காக விளைவைக் குறைக்கும் விஷப் பரீட்சையான கூட்டுப் பண்ணை முறையைக் கையாள வேண்டாம் என்பது அறிவின் எச்சரிக்கை!



கூடைப்பந்தாட்டம்

குன்றுமணி

"இவர்தான் சரப் ஜித்சிங். இந்தியாவில் கூடைப் பந்து விளையாட்டில்முதல்தரமாக விளங்குகிறவர்!" என்றார் விளையாட்டுக் கலைஞர் ஒருவர்.

உடனே வேகமாக ஓடினேன். விளையாட்டுக் கலைஞர் திகைத்தார். ஒரு நாற்காலியை எடுத்து வந்து போட்டு அதில் ஏறி நின்று அவர் கையைக் குலுக்கியதும் அந்த விளையாட்டுக் கலைஞர் கலகலவென்று நகைத்துவிட்டார். ராணுவ கோஷ்டியைச் சேர்ந்த சரப்ஜித்சிங் அவ்வளவு உயரமானவர். நின்றுகொண்டே கூடைப்பந்து வளையத்துக்குள் பந்தை அநாயாசமாகத் தள்ளக் கூடியவர் என்றாலே அவர் உயரத்தைக் கணக்கிட்டு விடலாம். அவர் 'ஙிர்'ரென்று சாரைப் பாம்புபோல் வாயுவேக மனோ வேகமாகப் பாய்ந்து பந்தை வளையத்துக்குள் போடும் காட்சி கண்கொள்ளாக் காட்சிதான்!


"அப்பா! என்ன வேகம்! என்ன வேகம்! இவர் போகும் வேகத்தில் பந்துக்குப் பதில் அகத்தியர் போலிருக்கும் 'ரிபரி' அமர்ஜித்சிங் கைக்கூட வளையத்துக்குள் தூக்கிப் போட்டு விடுவார் போலிருக்கே!" என்றார் அருகிலிருந்த ஒருவர்.

"ஐயா! அந்த 'ரிபரி' எமகாதகர். ஒரு சிறு தப்பாட்டம் கூட அவர் கழுகுக் கண் பார்வைக்கு எட்டி விடுகிறது. விசில் ஊதித் தள்ளி விடுகிறார்! அவரிடம் இவர் ஜம்பம் பலிக்காது!" என்றார் கூடைப் பந்தாட்டக்காரர் ஒருவர்.

"ஸார்! இந்த மைதானத்தில் பாருங்கள்! ஆறடி சரப்ஜித்சிங் விளையாட்டைப் பிரமாதப் படுத்துகிறீர்களே! மேற்கு வங்காளக் கோஷ்டியைச் சேர்ந்த முர்ரே என்ற குள்ளமான சிறுமி என்ன பாடு படுத்துகிறாள், பாருங்கள்! அவள் கையில் பந்து கிடைத்து விட்டால் நிச்சயம் அதற்கு எண்ணிக்கை கிடைத்து விடும்!" என்று பார்வையைத் திருப்பினார் மற்றொருவர்.

பெண்களும் ஆண்களும் போட்டி போட்டுக் கொண்டு கூடைப் பந்தாட்டம் விளையாடும் காட்சியை டிசம்பர் 1ந் தேதியிலிருந்து 6ந் தேதி வரை சென்னை எழும்பூர் ஸ்டேடியம் மைதானத்தில் ஒளி விளக்கில் காண முடிந்தது. இந்தியாவிலுள்ள பதினான்கு ராஜ்யங்களிலிருந்து விளையாட்டுக் கலைஞர்கள் பத்தாவது தேசிய கூடைப் பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டார்கள். இந்தப் பந்தயத்துக்காகச் சென்னை கூடைப் பந்தாட்டக் கழகத்தினர் ஒரு பிரும்மாண்டமான ஸ்டேடியத்தையே உருவாக்கி விட்டார்கள்.

சென்னைக் கோஷ்டிக்கும் ராணுவக் குழுவினருக்கும் 'செமி பைனல்' ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. சென்னை ஆந்திரப் பிரதேசத்தை அபாரமாகத் தோற்கடித்து விட்டு விளையாடிக்கொண்டிருந்தது. ராணுவக் கோஷ்டி முந்தின எதிரிகளையெல்லாம் நூறு, நூற்று இருபது எண்ணிக்கைகள் எடுத்து, எதிரிகளைத் தலை தூக்க விடாமல் அடித்துக் கொண்டிருந்தது. சென்னைக்கும் அந்தக் கதிதான் ஏற்படப் போகிறது என்று அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சென்னை கோஷ்டியின் 'டிபென்ஸ்' ஆட்டம் அன்று உச்ச நிலையில் இருந்தது. ஆனால் அவர்கள் எறிந்த பந்தெல்லாம் குறி தவறி, அது ராணுவக் கோஷ்







டியினருக்குப் பெரும் சாதகமாக அமைந்து விட்டது. அதனால் ஒன்பது எண்ணிக்கை வித்தியாசத்தில் சென்னை தோற்றது. இன்னும் முயன்றிருந்தால் சென்னைக் குழுவினர் வெற்றி யடைந்திருக்கலாம். ஆனால் அதிர்ஷ்டமில்லையே! சென்னைக் கோஷ்டியைச் சேர்ந்த திரு சிவசுப்பிரமணியம் சென்னைக் கோஷ்டிக்கு எண்ணிக்கை ஏறக் காரணமாக அமைந்தார். திரு பால் ஜோசப் எதிரியை முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தினார். இருந்தாலும் சரப்ஜித்சிங் முன்னால் அவர்கள் விளையாட்டு எடுக்கவில்லை. பொது ஜனங்களின் ஆரவார சத்தமும், கூச்சலும் கண்டு அஞ்சாது எண்ணிக்கை போட்டவர் அவர்தான். ராணுவக் கோஷ்டிக்கு நல்ல எதிர்ப்டைக் கொடுத்த மற்றொரு கட்சியினர் மைசூர் ஆட்டக்காரர்களாகும். அவர்கள் ராணுவக் கோஷ்டியினரைக் கடைசி வரையில் திணற அடித்தார்கள். நரசிம்ம ராஜுவும், திரு ராஜகோபாலும் மைசூர்க் குழுவில் அபாரமாகப் பந்தை வளையத்துக்குள் எறிந்து 'சபாஷ்' பட்டம் பெற்றார்கள்.

"பம்பாய் இளைஞர் கோஷ்டியினர் ரொம்பக் கெட்டிக்காரர்கள்!"

"ஏன்? இளைஞர் இறுதி விளையாட்டில் பம்பாய் கோஷ்டியினர் ஒவ்வொருவரும் விளையாட்டுக்கு முன்னால் சென்னைக் குழுவினர் ஒவ்வொருவருக்கும் மாலையணிவித்ததைச் சொல்கிறீரா?"



"சென்னைக் கோஷ்டிக்கு அவர்கள் பூமாலையைப் போட்டு விட்டு வெற்றி மாலையைத் தாங்கள் சூடிக் கொண்டு விட்டார்களே! கெட்டிக்காரர்கள்தானே!"

'ஆண்களுக்கு மட்டும் தான் விளையாட்டுக் கலை ஏகபோக உரிமையா? எங்களுக்கும் சம பங்குண்டு' என்பதை ஒவ்வொரு ராஜ்யத்திலிருந்தும் வந்த பெண்மணி ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை நிரூபித்தது. மைசூருக்கும் மேற்கு வங்காளத்துக்கும் நடந்த இறுதி விளையாட்டில் 'முர்ரே'யின் அபார விளையாட்டுத் திறமையினால் வெற்றி மேற்கு வங்காளம் பக்கம் சாய்ந்தது.

டிசம்பர் கடும் பனியையும் பாராது சென்னை மக்கள் ஆயிரக்கணக்கில் கூடினார்களென்றால், கலைஞர்கள் சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன் போன்றோர் ஆயிரக் கணக்கில் நன்கொடை வழங்கினார்களென்றால் அந்த விளையாட்டுக்கு நிறைய மவுசு இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். இந்த நிதி கூடைப் பந்தாட்டக் கலைஞர்களைப் பயிற்றுவிக்கப் பயன்படப் போகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

பல ராஜ்யங்களின் கூடைப்பந்தாட்டக்காரர்களின் அருமையான விளையாட்டைக் காணும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த சென்னை கூடைப்பந்தாட்டக் கழகத்தினரும், அதன் காரியதரிசி திரு பத்மநாபனும் பாராட்டுக்குரியவர்கள்.

கூடைப்பந்து விளையாட்டுக்காரர்கள் வளையத்துக்குள் பந்தைப் போடத் திணறினாலும் நமது சித்திரக்காரர் சாமா தமது சித்திர வலைக்குள் பல விளையாட்டுக் கலைஞர்களைப் போட்டுத் தள்ளிவிட்டார். அவர் சித்திர வலைக்குள் சிக்கிய கூடைப் பந்தாட்டக்காரர்களில் சிலரை இரு பக்கங்களிலும் காணலாம்.

1. சரப்ஜித் சிங் 2. வெங்கடராமன் 3. சிவசுப்பிரமணியன் 4. ரத்னாகர் ஆல்வா 5. டி. ஆர். நந்தா 6. கேரளா காப்டன் 7. சர்ஜன் சிங் 8. நரசிம்மராஜு 9. அனு உசரனி 10. முர்ரே 11. சங்கர் 12. சாமிநாதன் 13. பால்ஜோசப் 14. பாபு பிரசாத 15. அமர்ஜித் சிங் 16. மைசூர் காப்டன். 17. எஸ். வி. ராஜகோபால் 18. ஆர். நடராஜன் 19. மேற்கு வங்காள காப்டன் 20. கோவர்த்தன்.






ஒவ்வொருவருக்கும்
ஒரு தனி ரக விருந்து
நண்பர்கள் உங்கள் வீட்டுக்கு வரும்போது, பார்லேயின் மொனகோ பிஸ்கெட்டுகளாலான அறுசுவைச் சிற்றுண்டியை அளித்து, அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துங்கள். மொறமொறப்பான மொனகோ பிஸ்கெட்டுகளின்மேல் வீட்டில் தயாரான பாலாடைக்கட்டி, பச்சடி, கறிப்பொடி, மற்றும் தக்காளிப் பரப்பி, பிரதி விருந்தாளிக்கும் பிரத்தியேகமான விருந்தைப் படைக்கவும். அவை ஒவ்வொன்றையும் தூய, புதிய அனுபவமாக உங்கள் நண்பர்கள் காண்பார்கள்...
பார்லேயின்
மொனகோ
உப்புசுவையுள்ள பிஸ்கெட்டுகள்
பார்லே ப்ராடக்ட்ஸ் மான்யுபாக்சரிங் கம்.
பிரைவேட் லிமிடெட், பம்பாய்-24.
PM 59.5A TM
EVEREST

பன்னிரண்டாம் அத்தியாயம்

போர் மேகம் சூழுமா?

ரோகிணி அனைவரும் புறப்படும் சமயத்தில் அவர்களுடன் இருந்து அனுப்பி வைத்தாள். அவளுடைய முகத்தில் களை இல்லை; நடையில் உற்சாகம் இல்லை. தன்னை விரும்புவதாக அவள் கூறுததால் இளங்கோவும் ஓரளவு அலட்சிய பாவத்துடன் அவளிடம் நடந்து கொண்டான். தான் அவளை அலட்சியப்படுத்தி வருவது அவளுக்கு நன்றாகப் புலப்பட வேண்டும் என்பதும் அவனுடைய எண்ணம்.

இளங்கோ மட்டிலும் தனியாகப் பழையாறைக்குக் கிளம்பியிருந்தால் ரோகிணி அதை எப்படி எடுத்துக் கொண்டிருப்பாளோ, தெரியாது. பெரியவர்களும் தனியே செல்லாமல் குடும்பத்தோடு புறப்பட்டார்கள். இளங்கோ செல்லும் அதே இடத்துக்கு அருள்மொழி நங்கையும் அம்மங்கைதேவியும் உடன் செல்லுகிறார்கள்.

வீரமல்லன் தன்னிடம் கூறிய செய்திகளையும் இந்தப் பிரயாணத்தையும் இணைத்து வைத்துப் பார்த்தாள் ரோகிணி. அவளை அறியாமலே அவள் மனம் கலக்க முற்றது. என்றாலும் அதை மறைத்துக் கொண்டு அம்மங்கையோடு சிரித்துச் சிரித்துப் பேசினாள். அருள்மொழிக்கு ஆடை அணிகள் எடுத்துக் கொடுத்து அவள் அலங்கரித்துக் கொள்வதற்குச் சிறு உதவிகள் செய்தாள்.

அவளுடைய முக வாட்டத்தைக்கண்டவுடன் தனக்குள் சிரித்துக் கொண்டான் இளங்கோ. கிளம்புகிற அவசரத்தில் அங்குமிங்கும் செல்வது போல் அவன் அலைந்து கொண்டிருந்தானே தவிர ரோகிணியுடன்பேசவில்லை.


கடைசியில் அவளாக அவனை நெருங்கி வந்து, "எப்போது திரும்பி வருவீர்கள்?" என்று மெல்லக் கேட்டாள்.


"தெரியாது."

"சொல்லக் கூடாதா? என்னிடம் சொல்லக் கூடாத ரகசியமா அது?" அழாக் குறையாக அவனிடம் வினவினாள் ரோகிணி.

"எனக்கு மிகவும் விருப்பமான இடம் பழையாறை. சக்கரவர்த்திகளும் என்னை விரும்பி அழைக்கிறார். அதனால் அங்கு போகிறேன். அங்கிருந்து நேரே போர்க்களத்துக்குச் சென்றாலும் செல்வேன்."

"போர்க்களத்துக்கா? நீங்களா?"





"ஆமாம்."

எந்தப் போர்க்களத்துக்கு என்று அவளும் கேட்கவில்லை; அவனும் கூறவில்லை.

"இந்தக்கையுடனா போர்க்களத்துக்குச் செல்வீர்கள்?"

"ஏன், இந்தக் கை இருக்கிறதே!" என்று இடது கரத்தை உயர்த்திக்காட்டினான் இளங்கோ.

நீண்ட பெருமூச்சு ரோகிணியிடமிருந்து வெளி வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டே, "விரைவில் திரும்பி வாருங்கள்" என்றாள்.

"நான் விரைந்து வந்தால் உனக்கு என்ன? வராவிட்டால் என்ன?" என்றான் இளங்கோ.

"அப்படிச் சொல்லாதீர்கள்; வந்து விடுங்கள்" என்றாள் மீண்டும்.

இதற்குள் யாரோ அந்தப் பக்கம் வரவே, அவர்கள் பேச்சு பாதியில் நின்று விட்டது. ஓடிப் போய் ரதத்தில் ஏறிக்கொண்டான். அவன் மனத்தையே ஊடுருவித் துளைப்பது போல் ஒரு கணம் நோக்கி விட்டு, இளவரசிகள் ஏறியிருந்த ரதத்துக்குச் சென்று அவர்களை வழியனுப்பத் தொடங்கினாள் ரோகிணி.

"விரைவில் திரும்பி வாருங்கள்!" என்று அவர்கள் அருகில் நின்று அவள் எழுப்பிய குரல் யாருக்காக என்பது அவனுக்கு விளங்காமல் இல்லை. 'விரும்புகிறேன்' என்று அவள் வாய் மொழியால் கூறவில்லைதான். என்றாலும் விருப்பமில்லாத பெண்ணின் சொற்களா அவள் சற்று முன்பு கூறிய சொற்கள்?

வழி நெடுகிலும் தென்பட்ட காட்சிகள் இன்பமயமாக இளங்கோவுக்குத் தோன்றியதற்கு இதுவே காரணம்.

பழையாறைச் சிவன் கோயில் கோபுரம் வானுற ஓங்கி நின்று அவர்களுக்கு வரவேற்புக் கூறியது.

* * *

பழையாறை மாநகரின் சரித்திரம் பழம் பெருமை வாய்ந்த சரித்திரம். வாழையடி வாழையாகத் தழைத்தோங்கி வளர்ந்து வந்த பிற்காலச் சோழ மரபினருக்கு நெஞ்சில் உரமூட்டி, சாம்ராஜ்யக் கனவுகளை அவர்களிடம் மலர்வித்த பொன்னகரம் அது.

பிற்காலச் சோழ சாம்ராஜ்யத்தின் முதல் மன்னரான விஜயாலய சோழர் தஞ்சை நகரில் ஆட்சி செலுத்து முன், இடைக்காலத்துச் சோழ மன்னர்கள் பழையாறையையே தங்கள் கோநகராகக் கொண்டிருந்தார்கள். பல்லவப் பேரரசின்கீழ் சோழர்கள் சிற்றரசர்களாக ஒன்றியிருந்த காலம் அது. அவர்களைப் போலவே, சந்திரலேகை (செந்



தலை) முத்தரையர்களும், கொடும்பாளூர் இருக்குவேளிரும் பல்லவர்களிடம் சிற்றரசாகக் கட்டுப்பட்டிருந்தார்கள்.

முத்தரையர்களும் இருக்குவேளிரும் என்றுமே சிற்றரசர்களாக வாழ்ந்தவர்கள். பேரரசர்களாக மலர வேண்டும் என்ற விருப்பம் அவர்களிடம் எழாததில் வியப்பொன்றுமில்லை. ஆனால் வேங்கைக்கொடி தாங்கியவர்களின் வீர வரலாறு அப்படிப்பட்டதல்லவே !

உறையூரில் உறைந்து உலகம் வியக்க ஆட்சி செய்தவர்கள் சோழர்கள்; காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கப்பல் கப்பலாக வீரர்களை அனுப்பி, கடல் கடந்த நாடுகளில் புலிக்கொடி நாட்டியவர்கள் அவர்கள். தங்களது பழைமையை அவர்கள் மறக்கவுமில்லை; பழையாறை மண் அவர்களை மறக்க விடவும் இல்லை.

சிற்றரசர் என்ற சிறு பழியைத் துடைத்துக் கொள்வதற்காக அவர்கள் சீறி எழுந்தார்கள். விஜயாலய சோழர் காலத்திலிருந்து தஞ்சை மாநகர் தலைநகரமாயிற்று. பழையாறைப் பெருநகர் இரண்டாவது தலைநகரமாகி ஒதுங்கிக் கொண்டது, இளைஞர்களுக்குவழிவிட்டு முதியோர் ஒதுங்கிக் கொள்வது போல். மாமன்னர் இராஜேந்



திரர் காலத்தில்கூட அது இரண்டாவது தலைநகரந்தான். சோழப் பெருங்குடியின் வழி வந்த பலர் அங்கு உற்றார் உறவினர்களாகச் சோழ மாளிகைகளில் வாழ்ந்து வந்தார்கள். சாம்ராஜ்யத்தின் முதுகெலும்புத் தொடரான பெரும் படைவீடுகள் பல அந்த நகரத்தைச் சூழ்ந்து கொண்டிருந்தன.

ஆரியப்படை வீடு, பம்பைப் படை வீடு, புதுப்படை வீடு, மணப்படை வீடு ஆகிய நான்கு வீடுகள் மிக மிகப் பழைமையானவை. மாமன்னர் இராஜேந்திரரோ நான்கு படை வீடுகள் போதாவென்று நாற்பது படை வீடுகளைப் புதிதாக எழுப்பியிருந்தார். பழையாறைக்கு வடக்கே காத தூரத்திலிருந்து வட வெள்ளாற்றின் தென்கரை வரையிலும் அந்த வீரர்களின் குடியிருப்புக்கள் பரவிக் கிடந்தன.

தஞ்சையிலிருந்து புறப்பட்ட ரதங்கள் அனைத்தும் பழையாறைப் பெரிய மாளிகைக்கு வந்து சேர்ந்தவுடன் இராஜேந்திரர் சிறுபொழுதுகூட ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. வல்லவரையரை உடன் அழைத்துக் கொண்டு அண்மையிலிருந்த நான்கு படை வீடுகளையும் ரதத்தில் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தார். கூட்டத்தினரின் அன்புப் பிரவாகத்திலிருந்து மீண்டு மாளிகைக்குத் திரும்பி வருவதற்குள் பொழுது நன்றாக இருட்டிவிட்டது.

மறு நாளைக்கு மறுநாள்தான் வெற்றித் திருவிழா. அதற்குள் மற்றப் படை வீடுகளையும் நேரில் சென்று பார்வையிட வேண்டுமென்று வல்லவரையரிடம் கூறியிருந்தார் மாமன்னர். ஈழ நாட்டிலிருந்து திரும்பிய வீரர்களில் சரிபாதிப் படையினருக்கு மேல் அங்குதான் குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து வந்தனர்.

உணவு முடிந்தது. மாளிகையின் அறையொன்றில் தனியே அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்த மாமன்னர், வல்லவரையரை அழைத்து வரச் சொல்லிவிட்டு, காஞ்சியிலிருந்து மாதண்ட நாயகர் அரையன் இராஜராஜன் அனுப்பியிருந்த ஓலையைக் கையிலெடுத்தார். பத்தாவது முறையாக விளக்கொளியில் படித்துப் பார்த்தார்.

இளவரசன் இராஜாதி ராஜன் தஞ்சைக்குத் திரும்பியவுடன் அவரிடம் கொண்டு வந்து கொடுத்த ரகசிய ஓலை அது. அதில் இருந்த செய்திகள் அவனுக்கே இதுவரையில் தெரியாதவை. கொடும்பாளூர்ப் பெரிய வேளாரிடம் கூடச் சக்கரவர்த்திகள் அது பற்றிக் கலந்தாலோசிக்கவில்லை.

வல்லவரையர் வந்தவுடன் அறைக் கதவுகளைச் சாத்தி விட்டுக் காவலர்களை வெளியே நிற்குமாறு பணித்தார் சக்கரவர்த்தி. ஓலையைச் சோழ சாம்ராஜ்யத்தின் சாமந்த நாயகரிடம் நீட்டினார்.

படித்துப் பார்த்த வல்லவரையரின் முகம் இரும்புச் சிலையின் முகமென மாறியது.

"நாம் எதிர்பார்த்த செய்திதான்; ஆனால் இவ்வளவு விரைவில் எதிர்பார்க்கவில்லை. அரையன் ராஜராஜன் மிகவும் ராஜதந்திரத்துடன் நடந்து கொண்டிருக்கிறார்."

நீண்ட பெருமூச்சு விட்டார் இராஜேந்திரர். வேதனை கலந்த புன்னகை ஒன்று அவர் இதழ்க்கோணத்தில் நிழலாடியது.

வடக்கு எல்லையில் மேலைச் சளுக்கர்கள் கடந்த சில மாதங்களாகச் செய்து வந்த அட்டூழியங்களைப் பற்றி அதில் எழுதியிருந்தது. ஈழ நாட்டின் தென்பகுதிக்கு மாமன்னர் சென்றிருந்த வேளையில், வடக்கு எல்லையைத் துளைத்துக் கொண்டு அவர்கள் முன்னேறச் செய்த முயற்சிகளை வெளியிட்டிருந்தார் அரையன் இராஜராஜன்.

நாட்டு மக்களின் மனத்தில் பீதியை எழுப்பக் கூடாதென்பதற்காகவும், ஒரே சமயத்தில் இருமுனைப் போர் வேண்டாமென்பதற்காகவும் அவர் இந்தச் செய்திகளைப் பெரிய வேளாருக்குக் கூடத் தெளிவாக அறிவிக்கவில்லையாம். ஓரளவுக்கு அவருக்கு எச்சரிக்கைமட்டும் செய்திருந்தாராம்.

எல்லையைக் காத்து நின்ற காவற்படை வீரர்களில் சிலர் கொல்லப்பட்டார்களென்றும், இன்னும் சிலர் சிறைப் பிடித்துச் செல்லப்பட்டார்களென்றும் தெரிய வந்தன.

கண்டோர் நடுங்கும் காலனும் பகைவர்களைப் பதற வைக்கும் பலபீமனுமான அரையர் இராஜராஜன், மாமன்னர் ஈழத்துக்குச் சென்றிருந்ததால் தம்முடைய கைகள் கட்டுப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டு விட்டு, மேலே எழுதியிருந்தார் :

"நமது படைகளை எல்லையில் பெருக்கியிருப்பதால் இப்போதைக்குப் பகைவர்கள் பதுங்கத் தொடங்கி யிருக்கிறார்கள். இந்தப் பதுக்கலையெல்லாம் நாம் நம்புவதற்கில்லை. நம்முடைய வளர்ச்சியில் பொறாமைகொண்டுள்ள அவர்களை, அதே பொறாமை உணர்ச்சியால் பாண்டியர்கள் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"மக்களின் எண்ணிக்கை பெருகிவிட்டது அவர்களுக்கு. மக்களை அரைப் பட்டினி போட்டு அடிமைகளாக உழைக்

கச் செய்கிறார்கள் அங்கு. அந்த அடிமைகளின் ஆத்திரம் தங்கள் மீதே திரும்பி விடக் கூடாதென்பதற்காக, நமக்கு எதிராகப் போர் வெறியைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடல் கடந்த நாடுகளில் நமக்குள்ள செல்வாக்கு அவர்களைப் புழுங்கச் செய்கிறது. நமது பரந்த மனப்பான்மையை அவர்கள் பலவீனமென்று நினைக்கிறார்கள். பகை நாட்டு ஒற்றர்கள் பலர் நமது நாட்டில் நடமாடி வருகிறார்கள். ஒற்றர்களை ஒழிக்க வேண்டும்; பாண்டியர்களை முதலில் அழிக்க வேண்டும். அப்போதுதான் மேலைச் சளுக்கர்கள் அடங்குவார்கள்.''

ஓலையைத் திரும்பப் பெற்றுக்கொண்ட சக்கரவர்த்தி, ''சாமந்த நாயகர் அவர்களே! மாதண்ட நாயகரின் ஓலையைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?'' என்றார்.


''காலந் தாழ்த்தாது பெரிய வேளாருக்குச் செய்தி அனுப்பியிருந்தால் இதற்குள் சளுக்க நாட்டுக்குள் நமது படைகள் குவிந்திருக்கும். பெரிய வேளார் தாமே தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பார்.''

''நான்தான் இரகசியமாக இப்போதைக்குப் போர் வேண்டாமென்று அரையன் ராஜராஜனுக்குக் கட்டளை இட்டிருந்தேன். தமது கைகள் கட்டப்பட்டு விட்டதாக அவர் குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம் அதுதான்.''

''இனியும் தாமதம் கூடாது, சக்கரவர்த்திகளே!'' என்று பதறிக் கொண்டு ஆசனத்திலிருந்து எழுந்தார் வல்லவரையர். விளக்கொளி படிந்த அவரது நெடிய உருவத்தின் நிழல் பயங்கரமாக அண்டைச் சுவரில் படர்ந்தது.

''தாமதமும் கூடாது; அவசரமும் கூடாது. முப்பது லட்சம் வீரர்கள் அவர்களிடம் இருக்கிறார்கள். நாமும் அவர்களைவிட மும்மடங்கு வீரர்களைத் திரட்டி விடலாம். போதிய போர்க் கருவிகள் வேண்டும்; யுத்த சாதனங்கள் வேண்டும்; மக்களின் மனத்தில் போராட்ட உணர்ச்சியும் நம்பிக்கையும் வேண்டும். நம்முடைய வெற்றி விழாவின் நோக்கமே அதுதானே?''

''வெற்றி விழாவிலேயே போர்முரசு கொட்டிவிட வேண்டியதுதான்!'' என்றார் வல்லவரையர்.



''ஆமாம்; நாம் அமைதியை விரும்பினாலும் உலகம் நம்மை அமைதியாக வாழ விடுவதில்லை. நம்முடைய நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு சிசுவின் இதயத் துடிப்பும் போர் முரசாகப் பிறக்க வேண்டும். இப்போது துடிக்கும் கோடிக்கணக்கான நெஞ்சுகளும் போர்முரசுகளாக மாறினால் தவிர நாம் வாழ வழியில்லை.''

உறங்கச் சென்றார்கள் இருவரும். மலை போன்ற மாமன்னர் மகாராணி வீரமாதேவியின் அன்பு அணைப்பில் சிறு குழந்தை போல் உறங்கி எழுந்தார். வல்லவரையரும் பெரிய குந்தவையாரும் உறங்கவேயில்லை. வடக்கு எல்லையில் நடந்த அட்டூழியங்களைத் தமது மனைவியாரிடம் கூறிக் குமுறிக் கொண்டிருந்தார் சாமந்த நாயகர்.

இளங்கோவும் அருள்மொழியும் தனித் தனியே கனவுகள் கண்டு இன்புற்றிருந்தனர். இளங்கோவின் கனவுகளில் ஈழத்து இளவரசி நடமாடினாள். அருள்மொழியின் கனவில் அன்றைக்குப் பிற்பகலில் சாலையோரம் நடந்த சிறு நிகழ்ச்சி தோன்றியது.-ரதத்திலிருந்து ஓடி வந்த இளங்கோ அம் மங்கைத் தேவியின் பரிகாசத்துக்கு ஆளாகிக் கொண்டிருந்தான்! பாவம், அவன் முகம் வெட்கத்தால் வாட்டமுறுகிறதே!

மறுநாள் காலையில் மன்னரின் ரதம் பழையாறைக்கு வடக்கே இரண்டு காத தூரத்திலிருந்த சோழபுரம் என்ற படைவீட்டுக் குடியிருப்பை நோக்கி விரைந்தது. வல்லவரையரும் உடன் இருந்தார். எதிரில் திரள் திரளான மக்கள் பழையாறை விழாவைக் காண்பதற்கு ஆவலுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

சோழபுரம் குடியிருப்பு அரைக் காதச் சதுரத்துக்குப் பரந்து கிடந்தது. பொன்னிவள நாட்டை ஒட்டியிருந்தாலும் பொன்னி நதியின் வளம் அந்த மண்ணுக்கு எட்டவில்லை. கருவேலங் காடுகளும், புஞ்சை வயல்களும், முட்புதர்களும் சூழ்ந்த இடத்தில் இங்குமங்கும் திட்டுத் திட்டாகப் பயிற்சிக் களங்கள் காட்சியளித்தன.

தஞ்சை விளை நிலங்களைத் தனியே விட்டு விட்டு, வேண்டுமென்றே அந்த இடத்தில் வீரப் பயிர்களை ஊன்றியிருந்தார் போலும் மாமன்னர்.

ஈழத்துப் போர்க்களத்தில் தங்கள் மக்களைப் பறி கொடுத்தவர்களும், குடும்பத் தலைவர்களைப் பறி கொடுத்தவர்களும், காதலர்களைப் பறி கொடுத்தவர்களுமாகப் பெண்களின் கூட்டம் மாமன்னரைச் சூழ்ந்து கொண்டது. அவர்களுக்குப் பின்னால் உயிரோடு திரும்பியவர்களும், உயிரைத் திரும்பக் கொடுக்கச் சித்தமாக இருந்தவர்களுமான ஆண்கள் கூடி நின்றார்கள்.

பெண்கள் தங்கள் துன்பங்களை மறந்து வாழ்த்தொலி எழுப்பியபோது, அவர்களது முகமலர்ச்சியைக் கண்டு திடுக்கிட்டார் மாமன்னர். அவர்களுக்காகப் பிறந்த இரண்டு கண்ணீர்த் துளிகள் அவரது நெஞ்சில் உறைந்து விட்டன.

“என் அருமை மக்களே!” என்று பேசத் தொடங்கியவர், ஒரு கணம் பேச நா எழாமல் தடுமாறிவிட்டு, “உங்களை... உங்களை....நேரில் விழாவுக்கு அழைப்பதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன். உங்களுக்காகத்தான் விழாவைப் பழையாறையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். விழாவின்போது உங்களிடம் சொல்ல வேண்டிய செய்தியும் ஒன்றிருக்கிறது” என்று கூறினார்.

பதின்மூன்றாம் அத்தியாயம்

முடிகொண்ட சோழபுரம்

பழையாறை மாநகர் இதற்கு முன்பும் இவ்வளவு கூட்டத்தைக் கண்டதில்லை; இதற்குப் பிறகும் காணப் போவதில்லை.

வடதளியான சிவன் கோயில் கீழவாசலுக்கு முன்னால் மக்கள் கடல் பொங்கி எழுந்து அலை மோதிக் கொண்டிருந்தது. கண்கவரும் முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்த பெரியதொரு மேடையின் மீது நின்று மாமன்னர் முழங்கலானார்.

“என் அருமை மக்களே! ஈழத்துப் போரில் உயிர் துறந்த அத்தனை வீரர்களுக்கும் முதலில் நாம் அஞ்சலி செலுத்துவோமாக! அவர்களது உற்றார் உறவினரின் கண்ணீரைத் துடைக்க என்னுடைய இரு கரங்களும் போதாது. ஆனால் ஒன்று மட்டும் கூறுகிறேன்; அவர்கள் என்னுள்ளே என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இதுவரையில் கண்ணீர் சிந்திய தாய்மார்கள் என்னைத் தங்களது மகனாக ஏற்றுக் கொண்டு, பெண்மணிகள் என்னைத் தமையனாக ஏற்றுக் கொண்டு அவரவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள்.—கண்ணீர் விடுகிறவர்கள் இனிமேல் இந்த நாட்டில் வாழ முடியாது.

“அவர்களுக்குநான் வீரக்கல் நாட்டப் போவதில்லை. அவர்களின் நினைவாகத் தஞ்சைப் பெரிய கோயிலைப்போல் ஓர் மாபெரும் கோயில் சோழபுரத்தில் எழுப்பப் போகிறேன். ஒரு நூற்றாண்டு காலமாகத் திரும்பாதிருந்த முடியை அவர்கள் நமக்குத் திருப்பித் தந்து வெற்றி யளித்திருக்கிறார்கள். இந்த வெற்றியால் கிடைத்த ஊக்கத்தால் இனி நாம் தொடர்ந்து ஒவ்வொரு போரிலும் வெற்றி பெற்றுத் திருவோம்!”

கரங்களைத் தட்டி மக்கள் எழுப்பிய ஒலிக்கு ஒரு விநாடி இடைவெளி கொடுத்து விட்டு, மேலே தொடர்ந்தார் சக்கரவர்த்தி :-

“முதல் வெற்றியைத் தேடித் தந்த வீரர்களின் மத்தியில் விரைவில் நானே என் தலைநகரத்தை அமைத்துக் கொள்ளப் போகிறேன். சோழபுரம் விரைவில் நமது சாம்ராஜ்யத்தின் தலைநகரமாகும். காவேரிச் செழிப்பின் வளப்பத்தைவிட, என் வீரர்களை வளர்க்கும் கருவேலங் காட்டின் முட்புதரே எனக்குச் சிறந்த இடம்.—தயங்காதீர்கள்! நாம் நினைத்தால் செய்ய முடியாத செயல் ஒன்றும் இல்லை. மாபெரும் புதிய நகரம் ஒன்றை உருவாக்கி, அதன் மத்தியில் இமயம் போன்ற ஒரு கோயிலை எழுப்பி, எல்லையில் கங்கையைப் போன்ற ஏரி வெட்டி நீர் நிரப்புவோம். சோழபுரத்துக்குப் புத்துயிர் கொடுத்து நாமும் புத்துயிர் பெறுவோம்.”

மாமன்னரின் கண்கள் எதிரில் கூடியிருந்த பழையாறையின் நான்கு படைவீடுகளுக்குரிய வீரர்களின் முகங்களைக் கூர்ந்து நோக்கின.

“பழையாறையை என்னால் மறக்க முடியுமா?” என்று அவர் தொடங்கியவுடன், நிமிர்ந்து நின்றார்கள் வீரர்கள்.

“நாலு படை வீரர்களுக்குரிய இந்த நகரத்துக்கு இன்றிலிருந்து முடிகொண்ட சோழபுரம் என்று பெயர். இந்த நகரத்துக்குத் தெற்கே நாம் வெட்டப்போகும் ஆற்றுக்குப் பெயர் முடிகொண்ட சோழப் பேராறு!” என்றார்.

“முடிகொண்ட சோழப் பெருமகன் வாழ்க!” என்று பல்லாயிரம் குரல்கள் ஒன்றாக எழுந்து விண்ணதிரச் செய்தன.

அழகைப் பற்றி பேசுகிறார்கள்...



25 வருஷங்களாக தாய்மார்கள் தங்கள் கூந்தலின் அழகிற்குக் காரணம் டாடாவின் பரிமள கோகோனட் ஹெயர் ஆயில் என்ற ரகஸ்யத்தை தங்கள் பெண்களுக்கு போதித்து வருகிறார்கள். பூமணம் கமழும் இந்த சுத்தமான தேங்காய் எண்ணெய் லேசானது. கூந்தலுக்கு போஷாக்களிப்பது.... உங்கள் பெண்ணின் கூந்தலை ஆரோக்யமாக வைத்து அதற்கு கண்கவர் கவர்ச்சியூட்டச் சிறந்தது.



டாடாவின் பரிமள
கோகோனட் ஹெயர் ஆயில்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

“கடைசியாக ஒன்று சொல்கிறேன்; மறந்து விடாதீர்கள்! ஒரு வேளை வடக்கிலிருந்து மேலைச் சளுக்கர்கள் நம்மைத் தாக்க முற்பட்டாலும் முற்படலாம். அப்படி ஏதும் நேர்ந்தால் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆண்மகனும் ஒவ்வொரு பெண்மணியும் பகைவர்களைப் பற்றி எரிக்கும் நெருப்பாக மாற வேண்டும். பணிந்து போவதை விட அழிந்து போவது மேல்; ‘சாவுக்கு அஞ்சியவர்களுக்கு இந்நாட்டில் வாழ்வு இல்லை.’”



கோவை ரோட்டரி சங்கம் கல்லூரி மாணவ மாணவிகளுக்காகச் சமீபத்தில் நடத்திய ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் நிர்மலா மாதர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி எம். கே. பிரேமாவுக்கு முதல் பரிசாகிய மகாகனம் சீனிவாச சாஸ்திரி கோப்பை அளிக்கப்பட்டது. ஆண்டு ஆரம்பத்தில் கோவை விவசாயக் கல்லூரி நடத்திய ஒரு பேச்சுப் போட்டியிலும், செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியிலும் குமாரி பிரேமா தமது ஆங்கிலப் பேச்சுத் திறனுக்காகப் பரிசுகள் பெற்றிருக்கிறார்.

மாமன்னரது வெற்றி விழாச் செய்தி செவிக்குச் செவி தாவி அந்த நகரத்தில் கூடியிருந்த மாந்தர் அனைவரது மனங்களிலும் நிரம்பியது. புதிதாக எழுப்பவிருக்கும் நகரத்தைப் பற்றிச் சிலர் பெருமை பேசினார்கள். எதிர்க்கத் துணிந்த மேலைச் சளுக்கரை ஏசினார்கள் பலர்.

விழா முடிந்தது. மேலும் சில தினங்கள் பழையாறையில் தங்கி விட்டு, பிறகு தஞ்சைக்குத் திரும்பலாம் என்று நினைத்திருந்தார் இராஜேந்திரர். பல விஷயங்களை வல்லவரையருடன் பேசித் திட்டங்கள் வகுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. பழையாறையின் சூழ்நிலையில் பல சிக்கல்களைத் தெளிவுபடுத்திக் கொண்டு, தஞ்சைக்குச் சென்றவுடன் செயலில் இறங்க விரும்பினார்.

உள்நாட்டு ஆட்சியைப் பற்றிய அந்தரங்கச் செய்திகளைப் பெரிய வேளாரிடமும், படை எடுப்புக்கள் தற்காப்புத் தகவல்கள் பற்றிய இரகசியங்களை வல்லவரையரிடமும் மாமன்னர் கலந்தாலோசிப்பது வழக்கம். இவற்றைத் தவிர, மற்ற இருவருக்குமே தெரியாத பற்பல விஷயங்கள் அவர் மனத்துக்குள் மூடிக் கிடந்தன. தம்முடைய வாழ்நாளைக்குள் அவர் செய்து முடிக்க நினைத்த நற்செயல்கள் அவை.

விழா முடிந்த மறுநாளைக்கு மறுநாளே தஞ்சையிலிருந்து இளவரசன் இராஜாதிராஜன் அனுப்பிய தூதுவர்கள் இருவர் வந்து சேர்ந்தார்கள். மதுரையிலிருந்து கிடைத்த செய்தியை மாமன்னருக்கு அனுப்பியிருந்தான் இளவரசன்.

“விழா முடிந்த அன்று நள்ளிரவில் மதுரைப் புதிய மாளிகையின் உச்சியில் மூன்று மீன்கொடிகள் நாட்டப்பட்டு விட்டன. பாண்டியர் மூவரது இலச்சினைகளும் தனித்தனியே பொறிக்கப்பட்ட கொடிகள் அவை. விழாவின் குதூகலத்தில் வீரர்கள் பங்கு கொண்டிருந்த நேரத்தில் அது நடந்திருக்கிறது. மூன்று பாண்டியர்களுமே அப்போது மதுரையில் சுந்தரபாண்டியரின் அரண்மனையில் தங்கியிருந்திருக்கிறார்கள். அவர்களிடம் தூதுவர்களை அனுப்பி, கொடிகளை அகற்றும்படி கூறியதற்கு அவர்கள் மறுத்து விட்டார்கள். பாண்டியர்களின் அனுமதியின்றி மதுரையில் புது மாளிகை எழுப்பியது தவறாம். மதுரை மக்கள் தங்களது மனக் கொதிப்பைக் காட்டுவதற்கு அப்படிச் செய்திருக்கலாமென்றும், பொறுப்பு தங்களுடையதல்லவென்றும், எப்படியிருந்தாலும் தங்கள் கொடிகளைத் தாங்களே அகற்ற முடியாதென்றும் கூறுகிறார்கள். கொடி நாட்டிவிட்டுத் தப்ப முயன்ற இருவரைச் சிறை செய்திருக்கிறது. ஒருவன் ரோகணத்தைச் சார்ந்தவன்; மற்றொருவன் மேலைச் சளுக்கன். இருவரும் பாண்டித் தமிழர்களுமல்லர்; அவர்களிடமிருந்து எந்தத்

தகவலையும் தெரிந்துகொள்ள முடியவில்லை.''

மதுரையிலிருந்து வந்த மேற்கண்ட செய்தியை அப்படியே சக்கரவர்த்திக்கு அனுப்பி விட்டு, கட்டளையை எதிர் பார்ப்பதாகக் குறிப்பிட் டிருந்தான் இராஜாதிராஜன். கொடும்பாளூர்ப் படைகளோடு பெரிய வேளார் அப்படியே புறப்பட்டு விட்டாராம்.

மாமன்னர் மாற்றோலை எழுதலானார்:

''ஏற்கனவே மதுரையிலிருக்கும் நமது படைகளும் கொடும்பாளூரிலிருந்து சென்றிருக்கும் படைகளும் போதும். எதற்கும் தஞ்சையிலிருந்து ஆயிரம் குதிரை வீரர்களை அழைத்துக்கொண்டு உடனே செல். இனியும் பாண்டியர்களை விட்டு வைப்பது நன்மை பயக்காது.''

வல்லவரையரிடம் காண்பித்து விட்டு, ஓலையைத் தூதுவர்களில் ஒருவனிடம் கொடுத்தார் சக்கரவர்த்தி. அவர்கள் சென்றவுடன், ''நாமும் தஞ்சைக்குத் திரும்ப வேண்டியதுதான்'' என்றார்.

தூதுவர்கள் செய்தி கொண்டு வந்த சமயத்தில் இளங்கோவும் அவர்களுக்கு அருகில் இருந்தான். மேல் மாடத்திலிருந்தவாறு அருள்மொழியும் கூடத்தில் நடப்பதைக் கவனித்தான்.

''ஈழத்திலிருந்து முடியோடு திரும்பிய பிறகாவது அவர்கள் அடங்குவார்கள் என்று நினைத்தோம். நினைத்ததற்கு மாறாக நடந்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் அழிவுக்குத் தாங்களே அடிகோலிக் கொள்பவர்களை நாம் தடுத்தும் பலன் இல்லை'' என்றார் சக்கரவர்த்தி.

''தாத்தா! தாத்தா!'' என்று கெஞ்சுவதுபோல் அழைத்துக் கொண்டே வல்லவரையரிடம் நெருங்கி வந்தான் இளங்கோ. மேல் மாடத்திலிருந்த அருள்மொழிக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள்.

''என்ன இளங்கோ! என்ன செய்தி?''

சிரிக்கும் கண்களால் வல்லவரையர் மாமன்னரைப் பார்த்தார். பாண்டிய நாட்டுப் போர்ச் செய்தியை அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. மதம் பிடித்த யானையை வேலெறிந்து கொல்வதைப்போல் நினைத்தார்கள் போலும்!

''ஒன்றுமில்லை,...நானும் சக்கரவர்த்திகளோடு தஞ்சைக்கு வந்து, அங்கிருந்து மதுரைக்கு...''

''போர்க்களத்துக்கா?''

மாமன்னர் வியப்போடு அவனிடம், கேட்டவுடன் விழுந்து விழுந்து சிரித்தார் வல்லவரையர்.

''நல்லவேளை; உன்னைப் பெரிய வேளாருடன் கொடும்பாளூருக்கு அனுப்பாமற் போனது நல்லதாய்ப் போய்விட்டது.''

''ஆமாம்; கொடும்பாளூருக்குப் போய் இருந்தால் நீ இவ்வளவு தூரம் கேட்கும் படியா விட்டு வைத்திருப்பார் உன் தந்தை? தானாகவே உன்னைப் போர்க் களத்துக்கு வரச் சொல்லி யிருக்க மாட்டாரா!'' என்றார் வந்தியத்தேவர். ''தந்தையாருக்கு ஏற்ற மகன்தான் நீ!''

''சிறிதுகூடக் கையில் வலி இல்லை. நேரடியாய்க் களத்துக்குச் செல்லாமல் இளவரசருக்கு அருகிலாவது...''

''உன்னை எனக்குத்தான் தெரியும், இளங்கோ! போர்க்களத்தின் வெறி உன்னை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது என்பது எனக்கு ரோகணத்தில் புலப்பட்டு விட்டதே!''

''சக்கரவர்த்திகளே!'' — மாமன்னரின் முகத்தைப் பார்த்தான் இளங்கோ.

''நான் சொல்வதைக்கேள், இளங்கோ! அப்படியொன்றும் இது பெரிய யுத்தகளமல்ல. இரண்டு நாளைக்கு எதிர்த்து நிற்பார்கள்; மூன்றாம் நாள் புதர்களுக்குள் மறைந்து கொண்டு வேலெறிவார்கள். இந்தப் போர் முடியும் வரையில் நீ பழையாறையில் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குள் உன் விழுப்புண்ணும் ஆறி விடும். பிறகு, இருக்கவே இருக்கிறது, மேலைச் சளுக்க நாடு! வீரனுக்குத்தானா இந்த நாட்டில் வேலை இல்லை?''

சக்கரவர்த்தியின் சொற்கள் அவன் வாயை அடைத்து விட்டன.

அரச குடும்பத்தாரைப் பழையாறையில் தங்கச் செய்துவிட்டு, மாமன்னரும் வல்லவரையரும் ரதத்தில் ஏறிக் கொண்டார்கள். அவர்களை வழியனுப்ப வந்த பெண்களின் கூட்டத்தோடு தானும் ஒருவனாக நிற்பதை நினைத்து மனம் புழுங்கினான் இளங்கோ. காயம்பட்ட வீரனுக்கும் பேதைப் பெண்களுக்கும் ஒரே தகுதிதானா!


மாளிகைக்குள் ஓடிச் சென்று வைத்தியர் கட்டியிருந்த கட்டுக்களைக் கோபத்தோடு அவிழ்த்தெறியப் போனான் இளங்கோ. மென்கரமொன்று அவன் இடது கரத்தைப் பற்றித் தடுத்து நிறுத்தியது.

''இளவரசே! என்ன இது? யாரிடம் கோபம் உங்களுக்கு?''

அருள்மொழியின் கேள்விக்கு என்ன மறுமொழி கூறுவதென்று அவனுக்குத் தெரியவில்லை. ''ஒன்றுமில்லை . . . ஒன்றுமில்லை...'' என்று கூறிக்கொண்டே தன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான்.

பொங்கி வரும் கண்ணீரை அருள்மொழி கண்டு விடக் கூடாது என்ற தவிப்பு அவனுக்கு. (தொடரும்)

வளரவே, குழந்தை வளரவே,
திடமுடன் ஒழுங்காய் வளரவே...



க்ளாக்ஸோ


தாய்ப்பால் இல்லாத இளங் குழந்தைகளுக்கு
உகந்த சாலச் சிறந்த பாலுணவு



குழந்தை முதன் முதலாக உண்பதற்கான கனபதார்த்த உணவாகிய-**பாரெக்ஸ்** குழந்தை திடகாத்திரமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதற்கான புரத சத்துக்கள், வைட்டமின்கள், உலோகச் சத்துக்கள் அனைத்தும் செறிந்துள்ள தானிய உணவாகும். தாய்ப்பால் அருந்திவரும் குழந்தைகளுக்கும் சரி, புட்டிப்பால் அருந்திவரும் குழந்தைகளுக்கும் சரி, நான்காவது அல்லது ஐந்தாவது மாதமுதல் பாலைத் தவிர **பாரெக்ஸ்** உணவும் தேவைப்படும்.

'க்ளாக்ஸோ குழந்தைப் புத்தகம்' இலவசமாகப் பெற விரும்புவோர் அதன் தபால் செலவிற்காக 50 ந. பைசாக்களுக்குத் தபால் வில்லைகள் இணைத்து எழுதுக. க்ளாக்ஸோ, டேட்ஸ் ரோடு, மதராஸ்—2

க்ளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புதுடில்லி
டிப்போக்கள்; ஸ்ரீநகர் . கொஹாத்தி . விஜயவாடா


இனிய நாதம்!
MODEL 0352
மாடல் 0352
• ஏஸி & ஏஸி/டிஸி இரண்டிலும்
• ஆல்வேவ்ஸ் 3 பாண்டுகள்
• 5 வால்வ்கள் 8 வகை செயல் திறன்
• ரூ. 275.00தான் உள்ளூர் வரிகள் தனி
murphy radio
இல்லத்திற்கு இன்பமளிக்கிறது!
மர்பி ரேடியோ ஆப் இந்தியா லிட்., பம்பாய்-12

அத்தியாயம் 23

சென்னையில் முத்தையா

கூப்பன்தான் அந்தக் கேபிளைக் கொண்டுவந்து பரமசிவத்திடம் கொடுத்தான். அதைப் படித்துப் பார்த்ததும், அவர் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்தார். அடியில் காணப்பட்ட பெயரை மீண்டும் ஒருமுறை சரியாகக் கவனித்தார்.

"முத்தையா வருகிறாரடா! முத்தையாவே வருகிறார்! அம்மா எங்கே?.... சொர்ணம்! ஏ, சொர்ணம்!" என்று உரக்கக் கூவியவாறே மனைவியின் அறையை நோக்கி விரைந்து சென்றார்.

சுந்தரியின் தலையைப் பின்னிவிட்டுக் கொண்டிருந்த சொர்ணாம்பாள் கணவனுடைய உற்சாகக் குரலைக் கேட்டு ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"இதோ, பார்த்தாயா! சிங்கப்பூர் முத்தையா வருகிறாராம்! இப்பொழுதுதான் வந்தது இந்தச் செய்தி!" என்று சிறு பிள்ளையைப் போல் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

"சரியாகச் சொல்லுங்கள். இருக்கிற ஆனந்தத்திலே ஆள் பெயரையே மாற்றிச் சொல்கிறீர்களே!" என்றாள் சொர்ணாம்பாள்.

"நானா மாற்றிச் சொல்கிறேன்! ஏ, சுந்தரி! இந்தா, இதை நீயே உன்னுடைய அம்மாவுக்குப் படித்துச் சொல்! முத்தையாதான் வருகிறாராம், சொர்ணம்! முத்தையாவேதான் வருகிறாராம்!" என்றார் அழுத்தம் திருத்தமாக.

"ஆனால் கண்ணபிரான் வருவதாக முன்பு சொன்னீர்களே! அவரும் வருகிறாராமா?" என்று கேட்டாள்.


"அதைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. முன்பு வருவதாகச் சொல்லியிருந்தபடி தான் கண்ணபிரான் வரவில்லையே! இப்பொழுது இவரே வருகிறாராம். அதாவது என்ன அர்த்தம்? இந்தப் பரமசிவம் வைத்த குறி தவறாமல் நடக்கிறது என்பதுதான். இந்தப் பரமசிவம் வெறும் பாரிஸ்டர் அல்ல! புள்ளி வைத்தால் வைத்ததுதான்; சொன்னால் சொன்னதுதான்! துளிக்கூட மாறாது! தெரிந்ததா, துளிக்கூட மாறாது!" என்று தற்பெருமை ததும்பக் கூறினார் அவர்.

சில நாட்களாகவே அவர்களுக்குள் மீண்டும் சௌஜன்யம் நிலவியது. பழைய அந்நியோந்நிய பாவம் புத்துயிர் பெற்றிருந்தது. காரணம் அந்தச் சுந்தரிதான்! நேற்று வரையில் விவரம் தெரியாத குழந்தையாக இருந்த அவள் இப்பொழுது எப்படி வளர்ந்து விட்டாள்! அவளை முன்னிட்டுத்தான் அவர்களுக்குள் ஒரு சமரசம் உண்டாகியிருந்தது.

"ஊருக்காக ஆயிரம் விதமாகப் பேசுகிறோம்; நடந்து கொள்கிறோம்; வேஷமெல்லாம் போடுகிறோம். ஆனால் உண்மைப் பாசம் என்றால் என்னவென்பது எனக்குத் தெரியாதா? அது எனக்கு மட்டும் இல்லாமல் போய்விடும் என்றா நினைக்கிறாய்? சுந்தரியைப் பற்றி உன்னை விட எனக்கு ஆயிரம் மடங்கு அக்கறையுண்டு; கவலையும் உண்டு. உஷாவின் படிப்பை இத்துடன் நிறுத்திவிட்டு, இவளை நன்றாகப் படிக்க வைக்கப் போகிறேன். அவசியமானால் அமெரிக்காவுக்குக்கூட அனுப்புவதாகத்தான் எனக்கு உத்தேசம். அவளுக்கு என்று ஒரு கவர்னர் மகன் பிறந்திருக்காமலா இருக்கப் போகிறான்? அப்படி ஒருவன் அகப்படாவிட்டால் அப்புறம் வந்து கேள், என்னை!" என்று உற்சாகத்தோடு தம் மனைவியிடம் ஒரு சவால் விடுத்தார்.

போட்டால் போட்ட குறி தப்பாமல் நடத்துகிற திறமையும் கைராசியும் அவருக்கு இருந்தன என்று சொர்ணாம்பாளுக்கு நம்பிக்கைதான்! அவளுடைய முகம் இந்தப் பேச்சைக் கேட்டதும் அப்படியே மலர்ந்து போய் விட்டது. வாயெல்லாம் பல் தெரிய, "உங்களுக்கு அந்தக் கவலை இருக்காது என்றா நான் சொன்னேன்? என்ன இருந்தாலும் அது நம்முடைய வயிற்றில் வந்து பிறந்தது இல்லையா? இல்லாததை இருப்பதாக எண்ணிக் கொண்டு மெனக்கெடுகிறீர்களே என்றுதான் ஏதாவது சொல்லியிருப்பேன்! அதுவும் சொல்லாமல் எப்படி இருக்க முடியும்?" என்றாள் சொர்ணாம்பாள்.

பரமசிவம் எழுப்பி விட்ட ஆசைக் கனவைச் சுற்றியே அவள் மனம் அன்று முதல் வட்டமிட்டு வந்தது. சுந்தரி அமெரிக்காவுக்குப் போக வேண்டுமென்றால் துணைக்குத் தானும்தானே போக



வேண்டியிருக்கும்? பாரிஸ்டருடைய கருத்து இப்பொழுதுதான் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது போலிருந்தது.

அது முதல் பாரிஸ்டரிடம் கொண்டிருந்த கோபமெல்லாம் பனியென விலகிவிட்டது. இருந்தாலும் உஷாவின் விஷயத்தில் மட்டும் அவளுடைய மனத்தில் ஒரு சிறிதும் மாறுதல் உண்டாகவில்லை. அவளிடம் முன்பு சண்டையிடுகிற சாக்கிலாவது பேசவேண்டியிருக்கும். இப்பொழுது பேசுவதையே அடியோடு நிறுத்தி விட்டாள். பரமசிவத்துக்கு இது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆயினும் விட்டுத்தான் பிடிக்க வேண்டும் என்று இதைப் பற்றிப் பேசாமலே இருந்து வந்தார்.

இப்பொழுது முத்தையா வரப்போகிற செய்தி ஒரு பெரும் மாறுதலைச் செய்து விட்டது. பல வருஷங்களுக்குப் பிறகு வரப் போகும் அவருக்கு வீட்டிலுள்ள நறுநறுப்பெல்லாம் தெரியலாமா?

"சுந்தரியை இப்பொழுதுதானே அவர் முதன் முதலாகப் பார்க்கப் போகிறார்? பார்த்தால் எவ்வளவு சந்தோஷப்படுவார்?" என்று அவள் மகிழ்ச்சியும் பெருமையும் பிடிபடாமல் பேசினாள். ஒரு கணம் உஷாவைப் பற்றிய உண்மையை அறிந்திருந்தவராக அவரைப் பாவித்துக் கொண்டு விட்டாள். பிறகுதான் அவளுக்குத் தன் தவறு தெரிந்தது. பாரிஸ்டர் எடுத்துச் சொன்னபிறகுதான் அவருக்கு உஷாவும் ஒன்றுதான், சுந்தரியும் ஒன்றுதான் என்பது விளங்கியது. இரண்டு பேர்களுமே அவர்களுடைய பெண்கள் என்று எண்ணியிருக்கும் ஒருவர் எப்படி ஒருத்தியை மட்டும் பெரிதாகப் பாராட்டுவார்?

பாரிஸ்டருக்குக் கவலையாகப் போய் விட்டது. "இதோ பார், சொர்ணம்! உனக்கு இருக்கிற குழப்பத்தில் பெரியவரிடம் எதையாவது உளறித்தொலைத்து விடாதே! கொஞ்சம் வித்தியாசமாக நடந்து கொண்டாலும் அவர் சந்தேகப் பட்டுவிடுவார். எப்போதும் போல் உஷா உன்னுடைய பெண் தான் என்பதை

மறந்து ஒதுங்கிப் போய் நிற்காதே. வெண்ணெய் திரண்டு வருகிற சமயத்தில் தாழி உடைந்த கதையாகிவிடும். உனக்கு உஷா வேறு அல்ல, சுந்தரி வேறு அல்ல. இது நினைவு இருக்கட்டும் !'' என்று திரும்பத் திரும்பச் சொல்லி அவளை எச்சரித்து வைத்தார்.

சொர்ணம்பாளுக்கு இதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. உஷாவின் மேல் உயிரையே வைத்திருந்த காலம் எப்போதோ மலையேறி விட்டது. இப்போது பேச்சு வார்த்தை கூட விட்டுப் போய்விட்டது. இந்த நிலையில் அவளை முன்போல் அழைத்து, அணைத்து எப்படிச் சொந்தமாகச் சீராட்ட முடியும் ?

இது அவளுக்குப் பெரிய சோதனையாக இருந்தது. உஷா முன்போல் சிறு பெண்ணாகவே இருந்தால் இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. இப்பொழுது அவள் தலைக்குமேல்உயர்ந்த பெண்ணாயிற்றே !



"பொன்னி! குழந்தையைப் போய் அழைத்துக் கொண்டு வா!'' என்றாள் சொர்ணம்பாள்.

'குழந்தையா ? இந்த அம்மாள் எந்தக் குழந்தையைக் கூப்பிடச் சொல்கிறாள் ? உஷாவையா ?' பொன்னி விஷயம் புரியாமல் மலைத்து நின்றாள்.

"என்னடி, இப்படித் திருதிருவென்று பார்க்கிறாய்! சொல்வது புரியவில்லையா? உஷாவைத்தான் அழைத்துக் கொண்டு வரச் சொல்கிறேன்!'' என்று தெளிவுபடுத்தினாள் சொர்ணம்பாள்.

பொன்னியினால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அதிசயம் தாங்காமல் உஷா

வைப் பார்க்க ஓடினுன். மறுநாள் உஷாவுக்குப் பெரிய ஏமாற்றம் உண்டாயிற்று. அவர்களுடைய பங்களாவில் இருந்த முத்தையாவின் படத்துக்கும் விமானத்தில் வந்து இறங்கிய உருவத்துக்கும் ஒரு பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கண்களில் கண்ட ஒளியை அவருடைய முகத்தில் காண முடியவில்லை. வெறும் சூனியமான வெளியைப் பார்ப்பதுபோன்ற பார்வை. உதட்டோரத்தில் எட்டிப் பார்த்த புன்னகையில் உயிரேயில்லை. திடீரென்று அகால முதுமை அடைந்து விட்டவரைப்போல் ஒரு தளர்ச்சி!

பரமசிவத்துக்கும் அவருடைய மனைவிக்கும் இவர் முத்தையாதானு என்று கூட ஒரு நொடி சந்தேகம் வந்துவிட்டது. பீ-ஹைவ் கம்பெனியிலிருந்து யாரும் விமான நிலையத்துக்கு வராமல் இருந்தது அவர்களுடைய சந்தேகத்தை மேலும் வலுக்கச் செய்தது. பரமசிவம் போட வந்த ரோஜா மாலையை அவர் தம் கையிலே வாங்கிக் கொண்டு விட்டார். அந்த நீண்ட கைகளும் விரல்களும் விரலிலிருந்த பெரிய பச்சைக்கல் மோதிரமும்தான் அவரை முத்தையா என்று அடையாளம் காட்டின.

''திடீரென்று ஏற்பட்ட பயணமோ?'' என்று அவரை மார்புற அணைந்தார் பரமசிவம்.

''ஐயா சுகம்தானே? அம்மா சுகம் தானே! நமது குழந்தைகளோ இவர்கள்? எல்லாரும் சுகந்தானே?''

சொர்ணம்பாள் கைகூப்பியவாறு தலையசைத்தாள். தாயைப் பின்பற்றி இரு பெண்களும் கும்பிட்டு வைத்தார்கள்.

''உடம்பு முன்னைக்கு இப்போது மிகவும் இளைத்து...தளர்ந்து...போயிருக்கிறதே! அடையாளமே தெரியவில்லையே!'' என்று உண்மையான பரிவோடு கேட்டார் பரமசிவம்.

முத்தையா வெறுமனே தலையசைத்தார். அவருடைய சிந்தனையெல்லாம் வெகு தொலைவில் இருப்பதுபோல் தோன்றியது. அவசியமான உபசார வார்த்தைகள் பேசக்கூட அவரால் முடியவில்லை.

''போகலாமா? முதலில் நமது பங்களாவுக்கே போவோம்!''என்றுர் முத்தையா.

அதற்குமேல் யாரும் பேசவில்லை. அவருடைய தோற்றமும் பேச்சும் வெகு தூரம் மாறிப் போயிருப்பதாகப் பரமசிவத்துக்குத் தோன்றியது.

இத்தனை மாறுதல்களும் ஒரு வாரத்துக்குள் நிகழ்ந்தவைதான் என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

கண்ணபிரான் வருவதாக இருந்தது மாறி, திடீரென்று ஒருவருமறியாமல் இவர் புறப்பட்டு வந்திருப்பதற்கு ஏதோ பெரிய காரணம் இருக்க வேண்டும் என்று பாரிஸ்டர் எண்ணிக்கொண்டார். உஷாவின் கல்யாணத்தை முன்னிட்டு இவர் வந்திருப்பதாக ஊகிக்க இடமேயில்லை. உஷாவைக் கண்டால் அவளைச் சீண்டி விளையாடாமல் இருக்க மாட்டாரே! இன்று அந்த உற்சாகமே இல்லாமல் இருப்பது என்றுல்...,!

விருந்துபசாரமெல்லாம் தடபுடலாகத் தான் இருந்தது. ஆனல் முத்தையா தான் பச்சைக் குழந்தையைப் போல் கொரித்து விட்டு எழுந்தார்! ஒருகால் பொன்னியின் சமையல் அவருக்குப் பிடிக்கவில்லையோ?

''சொர்ணம்-இதில் ஏதோ விஷயம் இருக்கிறது. இல்லாவிட்டால் மனுஷன் இப்படி இருக்க மாட்டார்!'' என்று மனைவியைத் தனியாகப் பார்த்துக் கூறினுர் பரமசிவம்.

'உண்மையை வாங்குவது என்பது உங்களுக்கு ஒரு பெரிய காரியமா? உங்கள் கேள்வியில் வெளிப்படாத உண்மை வேறு எப்படி வெளிப்பட்டு விடப் போகிறது?'' என்று உற்சாகப் படுத்தினுள் சொர்ணம்பாள்.

''சபாபதி செத்துப் போய்விட்டான்!'' சாப்பாடு முடிந்த பிறகு, வந்த களைப் புத் தீரச் சாய்ந்து கொள்ளப் போகும் சமயத்தில் அவர் கூறிய முதல் வார்த்தை இதுதான்.


''எந்தச் சபாபதி! உங்களுடைய தவசிப் பிள்ளை சபாபதியா? எப்போது?'' என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டார் பரமசிவம்.

முத்தையா அதற்கு நேரிடையாக விடை கூருமல், ''அவன் போய் ஒரு வாரமாகி விட்டது. ஆனல் நான்தான் சாகவில்லை!'' என்றுர்.

அந்த அதிர்ச்சியில் ஆறுதல் வார்த்தைகள் புலப்படாமல் திகைத்து நின்றுர் பரமசிவம்.

முத்தையா ஏளனம் கலந்த குரலில், ''என்னிடம் புகுந்திருந்த நம்பிக்கை—நல்ல எண்ணம் எல்லாம் செத்து அதே ஒரு வாரம் ஆகிவிட்டது. ஆனல் நான் தான் சாகவில்லை. அதாவது இந்த உடல் தான் சாகவில்லை!'' என்றுர்.

தம்மிடம் ஊழியம் செய்து வந்தவனுக்காக முத்தையா எத்தனை தூரம் துன்பம் அனுபவிக்கிறுர் என்றுதான் பரமசிவத்துக்குத் தோன்றியது. அந்தத் துக்கத்தை மறைப்பதற்காகத்தான் இவர் சென்னைக்குப் புறப்பட்டு வந்திருக்கிறுரோ என்றும் அவர் எண்ணினுர். அப்படியானல் இது நாளடைவில் மாறி விடும் என்ற நம்பிக்கையும் பாரிஸ்டருக்குத் தலை நீட்டியது.



சுத்தமான
வைரங்கள்
பாபாலால் அண்டு கோ
பொன் வெள்ளி நகை வியாபாரிகள்
ரட்டன் பஜார் சென்னை-3



ஜனவரி
17
திலகம்
இதழில் புதியதொடர்கதை ஆரம்பமாகிறது
வே. இலட்சுமணன் எழுதும்
பல்லவ சரித்திர சொல்லோவியம்
நீலவேணி
பிரதிகளுக்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்
தனிப்பிரதி விலை 20 காசு
திலகம் வாரப்பத்திரிகை த.பெ. எண். 642 சென்னை 4

தூங்கி எழுந்த பிறகு முத்தையா சிறிது தெம்புடன் இருப்பதாகத் தோன்றியது. சிற்றுண்டி உபசாரத்துக்கு அப்புறம், "நான் ஒரு முக்கியமான காரியத்தை உத்தேசித்துத்தான் இங்கே வந்திருக்கிறேன். ஆனால்...இது பிறருக்குத் தெரிவது உசிதமில்லை. நான் அதை விரும்பவும் இல்லை. என்னுடைய பங்களாவுக்குப் போகாமல் இங்கே வந்ததற்கே முதலில் அதுதான் காரணம்...." என்று சொல்லிக்கொண்டே வந்த முத்தையா, சித்தம் மாறியவரைப் போல் பாதியிலேயே நிறுத்தி விட்டார். முத்தையாவின் கண்கள் எங்கோ நிலைத்திருப்பதுபோலத்தான் காணப்பட்டன. "உயில் ஒன்று எழுதிவிட வேண்டும். அதுதான் நான் நேரே புறப்பட்டு வந்தேன்!" என்றார்.

பரமசிவம் ஏதோ சொல்ல வந்தார். ஆனால் அதைத் தடுத்து, "இருக்கட்டும். எல்லாம் அப்புறம் சொல்கிறேன். எனக்குத் தெரியும்!" என்றார் முத்தையா.

"திடீரென்று சபாபதி காலமானதுதான் இதற்கெல்லாம் காரணம் என்று நினைக்கிறேன். அந்த அதிர்ச்சிதான் அதைரியத்தைக் கொடுத்திருக்கிறது போலிருக்கிறது?" என்றார் பரமசிவம், உண்மையைக் கண்டு பிடித்து விட்டவரைப்போல்.

"அப்படித்தான் போங்களேன்!" என்றார் முத்தையா. பிறகு எதையோ நினைத்துக் கொண்டவர் போல, "ஆனால் எப்படியும் நான் தேன்கூட்டுக்குப் போய்த்தான் ஆக வேண்டும். அங்கே போகாமல் ஒன்றும் நடக்காது. இப்பொழுதே வண்டியை எடுக்கச் சொல்லுங்கள். நான் புறப்படுகிறேன்!" என்று எழுந்திருந்து விட்டார் முத்தையா.

அதற்குமேல் அவரை எப்படித் தடுக்க முடியும்? நீதிபதி இடத்தை விட்டு எழுந்த பிறகு வழக்கைப் பற்றிப் பேச முடியுமா? அந்த வழக்கத்தில் பழகிய பாரிஸ்டர் அவரை வற்புறுத்தாமல் விட்டு விட்டார்.

அத்தியாயம் 24

சாமர்த்தியம்!

வடக்குப் பகுதியிலுள்ள எஸ்டேட் மாளிகையில் கண்ணபிரானும் சுசீலாவும் சிலகாலம் தங்கியிருந்தார்கள். யாருமே சந்தேகம் கொள்ளாத விதத்தில்தான் அந்த நாட்கள் கழிந்தன. ஆயினும் நாகலிங்கத்தின் மனச்சாட்சி இதை இப்படியே விட்டு வைக்க விரும்பவில்லை. எதுவும் விபரீதமாகத் திரும்புவதற்கு முன்பாக அவர் இவர்களுடைய உறவுகளைப் பற்றி மூத்தையாவிடம் பக்குவமாகப் பேசி, இதற்கெல்லாம் நல்ல முறையில் ஒரு முடிவு தேட எண்ணினார்.

சுசீலா சம்பந்தப்பட்ட வரையில் அந்த நாட்கள் மிக மிக இனிமையாகவே தோன்றின. இதைவிட இன்பகரமான நாட்களை அவள் கண்டதேயில்லை. வான முகட்டில் போய் நிற்பது போன்ற கிளுகிளுப்பு அவளுக்கு உண்டாயிற்று. காலமெல்லாம் கண்ணபிரானும் தானும் கை கோத்துக்கொண்டு உலவுவது போலவே அவள் உணர்ந்தாள். வாழ்க்கை சலசல வென்று ஓடும் சிற்றருவியைப் போல் அழகும் தண்மையும் நிறைந்ததாகத் தோன்றியது. கண்ணபிரான் எத்தனை உயர்ந்தவன்! எத்தனை சிறந்தவன்! ஒவ்வொரு சிறு விஷயத்திலும் அவளுக்குத் துணையாகவும் உதவியாகவும் இருப்பது எத்தனை இன்பம் தரும் அநுபவம்!

நாகலிங்கத்திடமிருந்து வந்த கடிதத்தை அவள்தான் பிரித்தாள்; படித்துவிட்டு அதைக் கண்ணபிரானிடம் கொடுத்தாள். அதைப் படித்ததும் அவன் முகம் அப்படி ஏன் மாற வேண்டும்? தன்னை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும் என்பதற்காக அவன் வருந்துகிறானோ? புரியவில்லை அவளுக்கு. அந்தக் கடிதத்தின் உட்கருத்து என்னவென்று அவளுக்கு விளங்கவில்லை.

சபாபதியா பிள்ளை காலமான செய்தியைப் பற்றி நாகலிங்கம் எழுதியிருந்தார். ஆனால் பெரியப்பாவின் காரிய தரிசி இதை அவனுக்கு ஏன் தெரிவிக்கவில்லை? பார்க்கப்போனால் இது அற்ப விஷயம் தான். ஆனால் அவனுக்கு இது ஏதோ ஓர் அபாயத்தின் வித்தாகத்தான் தோன்றியது.

சுசீலா பயந்தது உண்மையாயிற்று. ஆற்றுப் படகிலும் தோட்டக்கரையிலும் உல்லாசமாகப் பொழுது போக்கியதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் கண்ணபிரான் அவளைச் சிங்கப்பூரில் கொண்டு போய்ச் சேர்த்தான். ஒருவரும் அவன் இப்படித் திடீரென்று வருவான் என்று எதிர்பார்க்கவேயில்லை. முருகேசன் குற்றவாளியைப் போல் மருண்டு நின்றான். சீனக்கார டிரைவர் 'காரேஜ்' பகுதியை விட்டு வெளியில் வரவில்லை. இதை உணர்ந்த கண்ணபிரானுக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. பீ - ஹைவ் காஸில் மர்ம மாளிகையாக இன்று அவனுக்குத் தோற்றம் அளித்தது.

"கூப்பிடு அந்த முருகேசனை !" என்று கர்ஜனை புரிந்தான் கண்ணபிரான். முருகேசன் வந்து நின்றதும், "இதற்கு என்ன அர்த்தம் ?" என்றான் கோபத்தோடு.

"எதற்கு ?" என்று உண்மையாகவே விழித்தான் முருகேசன்.

"எதற்கு என்றா கேட்கிறாய் ? சபாபதியா பிள்ளை செத்துப் போனானே-எத்தனை நாளாயிற்று ?"

"சரியாகப் பன்னிரண்டு நாள்ஆச்சு."

"பன்னிரண்டு நாள் ! இதை ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை?"

இது அவனுடைய அறியாமையாக இருந்திருந்தால் கண்ணபிரான் மகிழ்ச்சியோடு மன்னித்துவிடத் தயாராகத்தான் இருந்தான். ஆனால் இது அவனுக்கு அப்படிப் படவில்லை. அதனால்தான் கோபம் சீறிக்கொண்டு வந்தது.

"தந்தி கொடுக்கத்தான் எண்ணினேன். பெரியவர்...."

"உன்னிடம் வந்து வேண்டாம் என்று தடுத்தாரோ ?"

முருகு பெரியவரைப் பற்றிப் பேச விரும்பவில்லை. ஆனால் அவர் அடைந்த அதிர்ச்சி கவலைக்கு இடமாகி விட்டதை விவரிக்க முயன்றான்.

"பெரியப்பாவுக்கு இவ்வளவு ஆன போதுகூட நீ எனக்கு அதைத் தெரிவிக்காமல்தானே இருந்திருக்கிறாய் ?"

முருகேசன் அந்தக் குற்றத்தையும் தானே ஏற்றுக் கொண்டான்.

"பெரியப்பா எங்கே போவதாகச் சொன்னார் ? நீ எப்படி அவரை அந்த நிலையில் தனியாகப் போக விடலாம் ?"

"என்னிடம் அதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆனால் அவர் போவதை நான் எப்படித் தடுக்க முடியும் ?"

கண்ணபிரான் அவன் பேச்சு எவ்வளவு தூரம் உண்மை என்று ஆராய்வதுபோல் அவனைக் கூர்ந்து கவனித்தான். "எங்கே போனார் என்று உனக்குத் தெரியாதா ?"

"ஆறுமுகம் ஆணையாக அகூர் என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லை ! அவர் போகிற இடத்தை நான் தெரிந்து கொள்ளவும் இல்லை. உங்களுக்கு ஏதாவது எழுதி வைத்திருப்பாரோ என்று கூட எண்ணினேன்...."

கண்ணபிரானுக்கு இது முற்றிலும் விரும்பத்தகாத விசித்திரமாகத் தோன்றியது. முருகேசன் உண்மை பேசுவதாகவே அவனுக்குத் திடமாகப்பட்டது. ஒரு கணம் கண்களை மூடித் திறந்து, "சரி, அந்த டிரைவரை இங்கே அனுப்பி விட்டுப் போ !" என்றான் கண்ணபிரான்.

மந்திக் குரங்கைப் போலவே அந்தச் சிறுக்காரன் தன் சின்னக் கண்களை இமைத்துக்கொண்டு வந்து நின்றான்.

"பெரிய எஜமான் யாருடைய வண்டியிலே போனார் ? நீதானே வண்டியை ஓட்டிக் கொண்டு போனது?" முத்தையா விமான நிலையத்துக்குப் போனதைப் பற்றித்தான் அவன் அந்தச் சிறுக்காரனைக் கேட்டான். ஆனால் கிடைத்த பதில் அவனைத் திடுக்கிட வைத்தது.

"பில்லை சாகறப்போ எஜமானைப் பார்க்கணுமின்னார். ஓடிவந்து சொன்னேன். எஜமான் என்னைத்தான் வண்டியை எடுக்கச் சொன்னாங்க. அவங்க சொல்லித்தான் வண்டியை எடுத்தேன் !" என்று மூக்கால் பேசினான் சிறுக்காரன்.

"அப்புறம் என்ன நடந்தது?" என்று உறுமினான் கண்ணபிரான்.

சிறுக்காரன் அன்று இரவு நடந்தவற்றை அப்படியே சொல்லிவிட்டான். கிட்டத்தட்ட முக்கால்மணி நேரத்துக்கு மேல் பெரியவரும் சபாபதியும் தனியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்பது கண்ணபிரானுக்குப் பெரு வியப்பாகப் பட்டது. அதற்கு என்ன அவசியம் என்பது அவனுக்கு என்ன யோசித்தும் எட்டவில்லை அந்தச் சிறுக்காரனை எப்படியெல்லாம் கேட்க வேண்டுமோ அப்படிக் கேட்டும் அவர்கள் என்ன பேசினார்கள், என்ன நடந்தது என்ற விவரம் அவனுக்குக் கிடைக்கவில்லை; சாகிறபோது கூடச் சபாபதியா பிள்ளைக்கு எத்தனை சாமர்த்தியம் ?

"இதைப்பற்றி யெல்லாம் எனக்குக் கவலையில்லை. பெரியப்பா இந்த உடம்போடு எங்கே போயிருக்கிறார் என்பது தான் கவலை. அவரை விமான நிலையத்துக்கு ஏற்றிச் சென்றது நீதானே ?"

"ஆமாங்க எஜமான் !"

"சென்னைக்குப் போகிற விமானத்தில் தானே ஏறினார் ?"

"ஆமாங்க எஜமான் !"


"இதை ஏன் என்னிடம் வந்து சொல்லவில்லை ?"

"பெரிய எஜமான் வேண்டாம்னாங்க!"

"என்னிடம் கூடவா சொல்ல வேண்டாம் என்றார் ?"

"ஆமாங்க, எஜமான் !"

கண்ணபிரான் ஒரு கணம் திக்பிரமித்து நின்றான். சிறுக்காரன் நழுவிச் சென்ற அரைமணி நேரத்துக்குப் பிறகு டெலிபோனில் சுசீலாவை அழைத்து, "அவசர காரியமாக நான் அயல்நாடு போகிறேன். எப்போது திரும்பி வருவேன் என்று சொல்வதற்கில்லை. கவலைப்படாதே !" என்று கூறினான். அவன் சொல்வதை வாங்கிக் கொண்டு அவள் பதில் கூறுவதற்குள் ரிஸீவரை 'டக்' கென்று வைத்தான். சுசீலாவுக்கு அது கன்னத்தில் அறைவது போல் பட்டது. (தொடரும்)



பெரும்பூதூர் உடையவர்

வைஷ்ணவ மத ஆச்சாரியர்களில் தலை சிறந்தவராக விளங்குபவர் ஸ்ரீராமானுஜர். ஆதி சங்கரர் வேதங்கள், உபநிஷதங்கள் ஆகியவற்றுக்கெல்லாம் பாஷ்யங்கள் செய்து பரப் பிரம்மம் ஆம் இறைவனை அடைய ஞானமார்க்கத்தை நமக்குக் காட்டிச் சென்றார். ஞான மார்க்கத்தோடு பக்தி மார்க்கமும் சேர்ந்தால்தான், பிரம்மத்தை உணர்வது எளிது என்று உபதேசித்து, சங்கரரின் அத்வைத சித்தாந்தத்தைக் கொஞ்சம் மாற்றி விசிஷ்டாத்வைத சித்தாந்தமாக நமக்கு அருளியவர் ஸ்ரீராமானுஜர். இவரது வாழ்க்கை வரலாறு மிக்க சுவையுடையது.

சற்று ஏறக்குறைய தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டு வருஷங்களுக்கு முன் பரம பாகவதர்களான கேசவசோமயாஜி, காந்திமதி என்பவர்களின் பிள்ளையாக ராமானுஜர் அவதரிக்கிறார். இவர் அவதரித்த தலம் ஸ்ரீபெரும்பூதூர். இவருக்குத் தாய் தந்தையர் அன்று இட்ட பெயர் இளையாழ்வார். பாலப்பருவம் கழிந்ததும், காஞ்சியை அடுத்த திருப்புட்குழியில் உள்ள யாதவப் பிரகாசரது குருகுலத்தில் சேர்த்துவிடுகின்றனர் பெற்றோர். இவருக்கோ, யாதவப்பிரகாசர் சொல்லும் வேதாந்த விளக்கங்கள் எல்லாம் விபரீதமாய்ப் படுகின்றன. குருவையே திருத்த முனைகிறார் அந்த இளவயதிலேயே இவர். தம்மை மிஞ்சி விடுவான் பையன் என்று கண்ட குரு யாதவப் பிரகாசர், காசி யாத்திரை செய்வ தென்றும் அங்கு கங்கையில் பயலை மூழ்கடித்துவிடுவது என்றும் திட்டமிட்டுப் பயணம் துவக்குகிறார். ஆனால் இவர் தமிழ் நாட்டுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றனவே, பரந்தாமன் சும்மாயிருப்பானா? விந்தியமலைச் சாரலிலேயே இளைய பெருமாளைச் சந்திக்கிறான், தானும் தன் மனைவியும் வேடன் வேட்டுவச்சி உருவில் வந்து யாதவப் பிரகாசர் சிஷ்ய குழாத்திலிருந்து இளைய பெருமாளைக் கூட்டி வந்து, காஞ்சிக்குப் பக்கத்தில் உள்ள சோலையில் விட்டு விட்டு மறைந்து விடுகிறான். காஞ்சிக்கு வந்த இந்த இளைய பெருமாளுக்கு, அங்குள்ள பேரருளாளனுக்குச் சேவை செய்ய ஆவல் உண்டாகிறது. அப்படியே காஞ்சிக்கு இரண்டு மைல் தொலைவில் உள்ள சாலைக் கிணற்றிலிருந்து தினம் தண்ணீர் இறைத்து, திருமஞ்சன கைங்கர்யத்தைச் செய்து வருகிறார். இந்தச் சமயத்தில்தான் ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீ ஆளவந்தார், கச்சி வரதனது தரிசனத்துக்கு வந்தவர் இந்த இளைஞனைப் பார்க்கிறார். அவனது தேஜஸைக் கண்டு, தான் நீண்ட நாட்களாகத் தேடி வந்தது இவனல்லவா என்று தெரிந்து இவனைத் தன்னிடம் சேர்க்க அந்த அத்திகிரி வரதனிடமே வேண்டிக் கொள்கிறார். பெரிய நம்பியிடம் சொல்லி இளைஞனை ஸ்ரீரங்கம் கூட்டிவரச் சொல்கிறார். ஆனால் இளைஞன் ஸ்ரீரங்கம் போய்ச் சேருமுன்பே ஆளவந்தார் திருநாட்டுக்குளெழுந்தருளி விடுகிறார். அவரைத் திருப்பள்ளிப் படுத்தி வைத்திருக்கிறார்கள். (திருநாட்டுக்கு எழுந்தருள்வது என்றால் வைஷ்ணவ பரிபாஷையில் — இறந்துவிட்டார் என்றும் திருப்பள்ளி படுத்துதல் என்றால் கிடத்தி வைத்திருத்தல் என்றுமே பொருள்) அப்படி அவரது பூத உடல் இருக்கும் போது, அவரது வலது கையில் மூன்று விரல்கள் மட்டும் மடக்கியே இருக்கின்றன. ஆளவந்தார் மனத்தில் இருந்த மூன்று அபிலாஷைகளையும் தட்டின்றி நிறைவேற்றுவேன் என்று இளையாழ்வார் வாக்குக் கொடுத்த பின்பே மடங்கிய விரல்கள் நிமிர்கின்றன. இதன்பின் வைஷ்ணவ மதப்பிரசாரகராக இளையாழ்வார் முனைந்து வேலை செய்கிறார். வீட்டைத் துறக்கிறார்; மனைவியைத் துறக்கிறார்; சந்நியாசியாகிறார். ஸ்ரீராமானுஜர் என்ற திருநாமத்தோடு ஸ்ரீரங்கம், மேல் கோட்டை, திருநாராயணபுரம் முதலிய இடங்களில் தங்கியிருந்து, வைஷ்ணவமத ஸ்தாபகராகத் தன் புகழ் நிறுவுகிறார். கிட்டத்தட்ட நூற்று இருபது வயதுவரை வாழ்ந்த இந்த ஆச்சாரியாரையே இளையாழ்வார், ராமானுஜர், எம்பெருமானார், எதிராஜர், ஸ்ரீ பாஷ்யக்காரர், உடையவர் என்றெல்லாம் வைஷ்ணவ உலகம் இன்றும் போற்றுகிறது. இவரது புகழையே திருவரங்கத்து அமுதனார் இராமானுஜர் நூற்றந்தாதி என்று நூற்றெட்டுப் பாடல்களில் பாடி மகிழ்கிறார்.


நாட்டிய நீசச் சமயங்கள்
மாண்டன, நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது,
தென் குருகை வள்ளல்
வாட்டமில்லா வண்தமிழ்மறை
வாழ்ந்தது. மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து இராமானுஜன்
இயல்பு கண்டே.

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

என்ற பாட்டு, நூற்று எட்டுப் பாடல்களில் ஒரு பாட்டு. 'நல்லார் பரவும் இந்த இராமானுஜரது தெளிவுற்ற கீர்த்தி'யையே மேலும் மேலும் விவரிக்கிறார் திருவரங்கத்து அமுதனார். ராமானுஜருக்கு ராமாவதாரத்திலே அளவு கடந்த ஈடுபாடு. 'படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் கோயிலாகவே இராமனுஜரைப் பார்க்கிறோம், அவரது வாழ்க்கை முழுதும். இந்த இராமானுஜரது அவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூருக்கே செல்கிறோம் இன்று நாம்.

ஸ்ரீபெரும்புதூர் சென்னைக்குத் தென் மேற்கே பெங்களூர் செல்லும் வழியில் இருபத்து ஐந்து மைல் தொலைவில் உள்ள பெரிய ஊர். செங்கல்பட்டிலிருந்து சிங்கப்பெருமாள் கோயில் வந்து அங்கிருந்து வடக்கு நோக்கித் திரும்பினாலும் இவ்வூர் வந்து சேரலாம். இந்த ஊருக்கு ஆதியில் பெயர் பூதபுரி என்று இருந்திருக்கிறது. மயான உருத்திரன் சடை விரித்து ஆடிய ஆட்டம் கண்டு பூதகணங்கள் சிரித்திருக்கின்றன. அதனால் கோபமுற்ற ருத்திரன் பூதகணங்களைத் தன் சந்நிதியிலிருந்து விலக்கியிருக்கிறான். இதனால் கவலையுற்ற பூதகணங்கள், ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்தித்திருக்கிறார்கள். நாராயணனே அனந்தனை அழைத்து ஒரு சரஸை அமைக்கச் சொல்லி, பூதகணங்களை அந்த அனந்தச் சரஸில் [முழுகி எழச் சொல்லி, பூதகணங்களைத் திரும்பவும் ருத்திரனிடம் சேர்த்திருக்கிறார். இப்படிச் சமாதானம் பண்ணிவைத்த நாராயணன் பெற்ற 'நோபல் பரிசு'தான் இந்தக் கிராமம். பூதங்களே நிர்மாணித்ததனால் பூதபுரி என்று கிராமத்துக்குப் பெயர் நிலைத்திருக்கிறது. நாராயணனால், **ஆதிகேசவப் பெருமாள்** என்ற திருநாமத்தோடு அங்கேயே கோயில் கொண்டு விடுகிறார். பூதகிரி நாளடைவில் பூதூர் என்றும், உடையவர் பிறந்த மகிமை காரணமாகப் பெரும்பூதூர் ஸ்ரீபெரும்பூதூர் என்றெல்லாம் பிரசித்தி பெற்று விடுகிறது.

அம்பரீஷன் பௌத்திரனை ஹாரீதரனுக்கு நேர்ந்த ஒரு சாபம் இத்தலத்துக்கு அவன் வந்து **அனந்த சரஸில்** நீராடியதால் நீங்கியிருக்கிறது. அதனால் மகிழ்ச்சியுற்ற ஹாரீதரன், ஆதிகேசவப் பெருமானுக்குக் கோயில் எடுப்பித்து உத்சவாதிகளையெல்லாம் ஏற்பாடு பண்ணியிருக்கிறார். சென்னையிலிருந்து வரும் போது, தூரத்திலேயே கோபுர தரிசனம் செய்யலாம். ரோட்டைவிட்டு விலகிக் கோயில் வாசலுக்கு வந்து சேரலாம். கோபுர வாசலுக்கு நேராக உள்ள துவஜஸ்தம்பத்துக்குத் தெற்கே இருக்கும்குதிரைக்கால் மண்டபம்வழியாக மேலே ஏறிச் சென்றால் வட பக்கம் இருக்கும் உடையவர் சந்நிதியையும், வாசலுக்கு



உடையவர்—உற்சவர்

மேற்கே ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியையும் காணலாம். கூடவரும் அர்ச்சகர்கள் முதலில் நம்மை உடையவர் சந்நிதிக்கே அழைத்துச் செல்வார்கள். ஆம்! அருளாளனை உடையவர் இங்கே ஆதிகேசவனை விடப் புகழ் பெற்றவர் ஆயிற்றே. நாமும் அவரையே முதலில் தரிசித்து, அவர் அருள் பெற்று அதன் பின் ஆதிகேசவன் அருள் பெற விரையலாம். உடையவர் சந்நிதியில் மூலவர் தெற்கு நோக்கிய திருக்கோலத்தில் இருக்கிறார். அந்த மூலவருக்கு இளையாழ்வார் என்ற பிள்ளைத் திருநாமமே நிலைத்திருக்கிறது. இந்த மூலவருக்கு முன் செப்புச் சிலை வடிவில் இருப்பவரே உற்சவமூர்த்தி. கூப்பிய கையுடன் இருக்கும் இந்த எம்பெருமானாரைத் **தமர் உகந்த திருமேனி** என்பார்கள். ராமானுஜரது ஜீவிய காலத்திலேயே அவருடைய வடிவத்தை அழகாகச் சிற்ப வடிவங்களாகச் செய்து, அவ்வடிவங்களை அவரே ஆலிங்கனம் பண்ணச் செய்து, பிரதிஷ்டை செய்ததாக வரலாறு. இப்படிப் பிரதிஷ்டை செய்யப் பெற்றவைகளில் மூன்று பிரசித்தமானவை. இப்படி ஸ்ரீ ரங்கத்தில் பிரதிஷ்டை பண்ணியது **தானுகந்த திருமேனி** என்றும், மேல் கோட்டையில் பிரதிஷ்டை செய்ததைத் **தான் உகந்த திருமேனி** என்றும், இந்த ஸ்ரீபெரும்பூதூரில் பிரதிஷ்டை செய்யப்பட்டதே **தமர் உகந்த திருமேனி** என்றும் சொல்லப்படுகிறது. தானுகந்த திருமேனியையும் தாமுகந்த திருமேனியையும் விடத் தமர் உகந்த திருமேனியே அழகானது; பிரசித்தி உடையது. உடையவரின் உறவினரும் சிஷ்யர்களுமான முதலியாண்டானும், கந்தாடை ஆண்டானும் உவந்து பிரதிஷ்டை செய்த மூர்த்தியானதால், இவரைத் தமர் உகந்த திருமேனி என்கிறார்கள். உடையவரது திருவடியின்கீழ் சடகோபம் இருக்கும். இங்குள்ள சம்பிரதாயம் தெரியாமல் சடகோபம் சாதிக்க வேணும் என்று கேட்கக் கூடாது அர்ச்சகரை. அப்படிக் கேட்டால் அவர் மிகவும் கோபித்துக் கொள்வார். முதலியாண்டான் சாதிக்க வேணும் என்றே கேட்க வேண்டும். என்றுமே திருவடி தாங்க ஆசைப்பட்ட முதலியாண்டானுக்கு உடையவர் அளித்த கௌரவம் இது.

இந்த உடையவரை வணங்கிவிட்டு வெளியே வந்தால் துவஜஸ்தம்ப மண்டபம் வந்து சேருவோம். இங்கு நான்கு ஸ்தம்பங்களுக்கு மேற்பட்ட ஸ்தம்பங்கள் இருந்தாலும் அவைகளில் நான்கையே பூதங்கள் ஸ்தாபித்துக் கோவிலைக் கட்டியிருக்கின்றன. இங்கு தான் உற்சவ காலங்களில் திருமஞ்சனம் முதலிய ஆராதனங்கள் நடைபெறுகின்றன.

இனி, மேற்கே திரும்பி ஆதிகேசவர் சந்நிதிக்கு வரலாம். வாயிலிலேயே ஜயவிஜயர் என்னும் துவாரபாலகர்கள் கம்பீரமாக எழுந்து நிற்பார்கள். அவர்களிடம் அனுமதி பெறுமலேயே உள்ளே நுழையலாம். ஆதிகேசவப் பெருமாள் கிழக்கு நோக்கியவராய் நின்ற திருக்கோலத்தில் நமக்குச் சேவை சாதிப்பார். தூக்கிய இரண்டு கைகளில் சங்கும் சக்கரமும், மற்றொரு வலது ஹஸ்தம் அபயப்பிரதானம் அளிக்கும். மற்றொரு இடக்கையோ நீண்டு தாழ்ந்து தொடையில் இருத்தப்பட்டிருக்கும் ஆதிகேசவனைச் சென்று கண்டு வணங்குபவர்களுக்கு, ஸம்சாரமாகிய கடலின் ஆழம் தொடையளவுதான் என்று காட்டுவதாக ஐதிகம். வலது மார்பில் ஸ்ரீவத்ஸம். இத்துடன் ஸ்ரீதேவி பூதேவியார் வேறே. இந்த ஆதிகேசவருக்கு முன்னலே **கேசவா நந்தன வர்த்தனன்** என்னும் உத்சவர். இவரது திருஉரு மற்றப்படி ஆதிகேசவன் திருவுருவைப்போலவே இருந்தாலும் தாழ்ந்த இடக்கை மட்டும் ஆகூயவரதமாக இருக்கிறது. ஆம், மக்கள் எல்லோரையும் வாருங்கள் என்று அழைத்து அருளுகின்ற நிலை (இவருக்கு ஒரு பயம் போலும். பிரபலமான உடையவர் பக்கத்திலேயே இருப்பதால் அவரை வணங்கி, விண்ணப்பம் செய்ய வேண்டியவைகளைச் செய்து விட்டு, தம்மைக் கவனிக்காமலே சேவார்த்திகள் போய் விடுவார்களோ என்று. அப்படி அவசரமாக ஓடுபவர்களைக் கூடத் தன்பக்கம் அழைத்து அருள் செய்யும் அருளாளர் இவர்.)

இந்தக் கோயிலின் பெரிய பிரதக்ஷிணத்தில் தென்மேற்கு மூலையில் தாயார் சந்நிதி யிருக்கிறது. தாயாருடைய திருநாமம் **எதிராஜவல்லி**. உடையவர் அவதரித்த பின், பெருமாள் அவருடைய பெயரோடு தன் பெயரும் இணைந்திருக்க வேண்டுமென்று விரும்பி எதிராஜநாதன் என்ற பெயரை ஏற்றுக் கொண்டிருக்கிறார். எதிராஜநாதனது மனைவியாம் லக்ஷ்மியும் தன் பெயரை எதிராஜவல்லி என்றே மாற்றிக் கொண்டிருக்கிறாள். இத்தனை ஈடுபாடு எதிராஜனிடம் இந்தப் பெருமாளுக்கும் அந்தத் தாயாருக்கும். இவர் சர்வாலங்கார சுந்தரி. இன்னும் இக்கோயிலில் சக்கரவர்த்தித் திருமகனுக்கு, கருடனுக்கு எல்லாம் தனித் தனி சந்நிதி இருப்பதுபோல் நம்மாழ்வாருக்கு, ஆண்டாளுக்கு, திருக்கச்சி நம்பிகளுக்கெல்லாம் தனித்தனி சந்நிதி உண்டு. இவைகளில் பிரசித்தமானது ஆண்டாள் சந்நிதியே. ஆண்டாளிடத்து அவளது பாசுரங்களிடத்து உடையவருக்கு நல்ல ஈடுபாடு. ஆண்டாளுக்கு ஓர் ஆசை; தான் பாடிய நாச்சியார் திருமொழிப் பிரபந்தத்தை, திருமாலிருஞ் சோலையில் பெருமானுக்கு, நூறு குடா நிறைய அக்காரவடிசில் பண்ணி அத்துடன் சமர்ப்பிக்க வேண்டுமென்று. அந்த ஆசையை நிறைவேற்றி வைக்கிறார் உடையவர். அந்த ஆசை நிரம்பிய குதூகலத்தில், ஸ்ரீபெரும்பூதூர் மாமுனியாம் உடையவரை 'அண்ணு' என்றே அழைக்கிறாள் ஆண்டாள். இதனுலேயே இவருக்குக் **கோயிலண்ணன்**, **திருப்பாவை ஜீயர்** என்றெல்லாம் கூடப் பெயர் வழங்குகிறது. ஆண்டாளோ மங்களாசாஸனம் பண்ண வந்த அப் பிள்ளையும், 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுனுன் வாழியே' என்றே வழிபடுகிருள்.

இன்னும் இந்தக் கோயிலில் பார்க்க வேண்டியவை எவ்வளவோ உண்டு. அத்தனையும் பார்க்க நமக்கு நேரம் ஏது? அதிலும், ராமானுஜரை, அவரது தமர் உகந்த திருமேனி வடிவழகனைக் கண்டபின் கண்கள் மாத்திரம் என்ன, இதயமுமே நிறைந்துவிடுமே. மற்றவைகளைப் பார்க்க அவ்வடிவங்களை உள்ளத்திருத்த இடம் ஏது? ஆதலால், கோயிலைக் கடந்து வெளியே வருகிறபோது நாமும் அந்தப் பிள்ளைப் பெருமாள் ஐயங்காருடன் சேர்ந்து,


பிடிக்கும் பரசமயக்குல
வேழம் பிளிற, வெகுண்டு

இடிக்கும்குரல் சிங்க ஏறு
அனையான், எழுபாரும் உய்ய

படிக்கும் புகழ் எம்
இராமனுஜமுனி பல் குணமும்

வடிக்கும் கருத்தினற்கே
திருமாமணி மண்டபமே.

என்று பாடிக் கொண்டே திரும்பலாம்.



‘பாழடைந்த’ கால்வாய் புத்துயிர் பெற்றது

மக்களின் சுய முயற்சிக்கு ஓர் சான்று

ஜம்மு-காஷ்மீரில் ராமநறால் ஜில்லா, கர்ணு பிளாக்கில் 7½ மைல் நீளமுள்ள கால்வாயானது வெகு காலமாக உபயோகப்படுத்தப்படாமல் பாழடைந்து விட்டது.

அப் பிரதேசத்தில சுமார் 400 பேர் இக் கால்வாயை மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டனர். வண்டல் அகற்றப்பட்டது. கரைகள் உயரமாகவும் அகலமாகவும் ஆக்கப்பட்டு சமப்படுத்தப்பட்டன. நீரோட்டத்தைத் தடுக்கும் பாறைகள் தகர்க்கப்பட்டு தடைகள் நீக்கப்பட்டன. இப்படி பல கிராமங்களில் அதிக அளவு நிலங்களுக்கு சுலபமாக நீர்ப்பாசன வசதி அளிக்கக்கூடிய ஒரு கால்வாயை அவர்கள் தற்போது அடைந்துள்ளனர்.

சுயமுயற்சியும்தானே முன்
வந்து செய்யும் முயற்சியும்
அதிக வசதிகள் அளிப்
பதுடன் நாட்டின்
முன்னேற்றத்தையும்
துரிதப்படுத்துகின்றன.

திட்டத்துக்கு உதவுங்கள்
முன்னேற்றம் அடையுங்கள்

DA 59/333

உதிர்ந்த மலர்..

தி. சா. ராஜு

சனிக்கிழமை காலை மணி ஏழரை. சலவைத் தொழிலாளி சங்கரன் தியாகுவின் வீட்டில் அழுக்குத் துணிகளை வகை பிரித்து உதறிப் போட்டுக் கொண்டிருந்தான். தியாகுவின் மனைவி கல்யாணி கணக்கு எழுதிக் கொண்டிருந்தாள். "சட்டை நிஜார்ப் பைகளை நன்றாகப் பார்த்தபிறகு என்னிடம் போடுங்கள், அம்மா! சென்ற தடவையே ஏதோ முக்கியமான கடிதம் காணாமற் போய் விட்டதாகச் சொன்னீர்கள்" என்று சங்கரன் பணிவுடன் கூறினான். முந்தின நாள் மாலையில் தியாகு உடுத்துக் களைந்த இளநீல வர்ண முழுக்கால் சட்டையை உதறி, அதன் ஜேபியில் கையை விட்டுத் துழாவினாள் கல்யாணி. அதனுள்ளிருந்து ஒரு கசங்கிய மலர் கீழே விழுந்தது—உருவம் சிதைந்த ஜாதி மல்லிகை மலர். 'இது ஏது?' என்று கேட்டாள் கல்யாணி. வாயினால் அல்ல பார்வையினால். தியாகு அதைக் கவனித்தான். பதில் ஏதும் சொல்லாமல் பத்திரிகைக்குள் முகத்தை மூடிக் கொண்டான். குற்றம் புரிந்த மனப்பாங்கு அவனுடைய செய்கையில் இருந்ததைப் போல் அவளுக்குத் தோன்றியது.

பார்க்கப் போனால் இது மிகவும் சிறிய விஷயம். பட்டாபிராம் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தியாகு தினமும் மாலையில் சென்ட்ரல் நிலையத்தில் இறங்கி பிராட்வே வரையில் நடந்து வருவது வழக்கம். பூக்கடையில் ஒரு பூச்சரத்தை வாங்கிக் கொண்டு பிராட்வேயில் பஸ் ஏறுவான். அன்று வழக்கத்துக்கு மாறாக, திருவல்லிக்கேணியிலிருந்து வரும் நாலாம் எண்ணுள்ள பஸ் கிடைத்து விட்டது. அதனால் வழியில் பூ வாங்க வாய்ப்பே இல்லாமல் போயிற்று. ஆனால் அன்று மாலை அவன் வீடுசேர்ந்ததும் குழந்தை மாலா கேட்ட முதல் கேள்வி, 'பூ வாங்கி வரவில்லையா?' என்பதுதான். தாயைப் போல் மகளுக்கும் மலர்களின் மீது தனி ஆசை. தியாகு பதில் ஒன்றும் கூறாதது குழந்தைக்கும் தாய்க்கும் ஏமாற்றத்தை அளித்தது. "நல்ல நாளும் அதுவுமாய்ப் பூ வாங்காமல் வருவார்களா?" என்று சற்று ஆதுரத்துடனேயே மொழிந்தாள் கல்யாணி. குழந்தை மாலா சிணுங்கினாள். பிறகு அது விசும்பலாக மாறி அழுகையாகப் பரிணமித்தது.

தியாகு தன் மனைவி, குழந்தைகளிடத்தில் மிகவும் அதிகமான பற்றுடையவன்தான். அவர்களுடைய மகிழ்ச்சிக்காக எதையும் செய்வதில் ஆவல் கொண்டவன். என்றாலும் அப்போதைய மன நிலையில் குழந்தையின் செய்கையும் மனைவியின் சொற்களும் அவனுக்கு எரிச்சலை ஊட்டின. "சனி, சனி, தொலை, எப்போது பார்த்தாலும் அழுகை" என்று கடிந்து கொண்டான்.

மங்கலப் பொருள்களில் கல்யாணிக்கு விசேஷப் பிரியம் உண்டு. எளிதில் உணர்ச்சி வசப்பட்டு விடக் கூடியவள். வெள்ளிக் கிழமையும் அதுவுமாய்த் தன் கணவன் பூ வாங்காமல் வீட்டுக்கு வந்தது ஏதோ அசுபமான நிகழ்ச்சியாகத் தோன்றியது அவளுக்கு. உணர்ச்சிகள் மிஞ்சிய இடத்தில் தர்க்க வாதத்துக்கு இடமே இல்லையல்லவா? அவளும் தன் கணவனுடைய செய்கையை மன்னிக்க முடியாததொரு குற்றமாகக் கருதி முகத்தைத் தூக்கிக்கொண்டாள். ஆனால் இப்போது அவனுடைய நிஜார்ப் பையில் நேற்று மாலையே பறிக்கப்பட்ட தோற்றமுடைய ஜாதி மல்லிகைப் பூ எப்படி வந்தது? சலவைக்காரச் சங்கரன் அழுக்குத் துணி மூட்டையுடன் வெளியேறினான்.

கசங்கிய மலர் நடுக் கூடத்திலேயே கிடந்தது.

* * *


"அப்பா! வெந்நீர் தயார்!" குழந்தை இதை அறிவித்ததும் தியாகு பத்திரிகையை மேஜையின்மேல் போட்டுவிட்டுக் குளிக்கும் அறைக்குள் நுழைந்தான். கல்யாணி முந்தைய இரவிலிருந்து அவனிடம் பேசவில்லை. அசனல் அந்தக் தூது விடு படலம் நிகழ்ந்துகொண்டிருந்தது. என்றாலும் அவனுடைய தேவைகளில் எதையும் அவள் குறைக்கவில்லை. இளஞ்சூடான வெந்நீரை மேலே வார்த்துக் கொண்டபோது தியாகுவின் உடலும் மனமும் ஒருங்கே இதமடைந்தன. கணவனுடைய தேவைகளைக் கணக்கெடுத்து அறிந்து வைத்திருக்காள் கல்யாணி. வெந்நீரின் பதம், காப்பியில் அவனுக்குத் தேவையான சர்க்கரை உணவுக்குப் பின் அவனுக்கு வேண்டிய பாக்குத் தூள் இவையனைத்தின் அளவுகளும் அவளுக்கு வெகு நன்றாகத் தெரியும். இதன் மூலம் தனது கணவனின் நுண்ணுணர்வுகளை இழுக்கப் பிடிக்கும் வலிமையையும் அவள் பெற்றிருந்தாள்.

உணவு நல்ல சுவையுடன் அமைந்திருந்தது. என்றாலும் அதைத் தயாரித்த உள்ளத்தில் கனிவின் நைப்பு இல்லை என்பது அவனுக்கு விளங்கவே செய்தது. வாய் பேசாமல் சாப்பிட்டான். மடிப்புக் கலையாத சலவை உடைகளை அணிந்துகொண்டிருக்கும்போது, "அப்பா! சாயங்காலம் வரும்போது காப்பிப் பொடி வேணுமாம்!" என்று மாலா செய்தி விளக்கம் கொடுத்தான். "சரி, சரி!" என்று முணுமுணுத்தவாறு வெளியேறினான் தியாகு. அவனுடைய இடது கரத்தில் கைப்பை. அதற்குள் [illegible]டை வேளைக்கான சிற்றுண்டியும் தர்மாஸ் பிளாஸ்கில் காப்பியும்.

இதற்கு முன்பும் அவர்களிடையே சிறு பூசல்கள் நிகழ்ந்ததுண்டு. ஆனால் இன்றையது

சற்று ஆழமானது. அதிலும் இந்தப் பிணக்குக்குத் தானே காரணம் என்பதை எண்ணியபொழுது அவன் உள்ளத்தைக் குறுகுறுத்தது. தோல்வியை ஒப்புக்கொள்ளும் பெருந்தன்மையும் அவனிடமிருந்து தாற்காலிகமாக விலகியிருந்தது. சண்முக நிலையத்தில் பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

இருக்கையில் அமர்ந்த பிறகு முன்புறத்தில் முதலுதவிப் பெட்டியின் மேலே வரைந்திருந்த எண்ணைக் கவனித்தான். 'அட! நேற்று மாலை வீடு திரும்பிய அதே வண்டி.' அவன் உட்கார்ந்திருந்தது கூட அதே ஆசனம். அந்த இடத்திலேதான் அந்த ஜாதி மல்லிகைப் பூவை அவள் விட்டுச் சென்றிருந்தாள். அவனுக்காகத்தான் விட்டுச் சென்றிருந்தாள். இந்த நினைவுகள் அவன் உள்ளத்தில் ஒரு கதகதப்பையும், கூடவே ஏமாற்றத்தின் விளைவான வருத்தத்தையும் தந்தன.



முதல் நாள் மாலை சென்ட்ரலுக்கு அருகில் அவன் பஸ் ஏறியபொழுது அதில் ஒரே கூட்டம். சிறப்பாகப் பெண்களின் கூட்டம் அதிகமாக இருந்தது. அவர்கள் ஆண்களின் இருப்பிடங்களிலும் நிறைந்திருந்தனர். தோல் வாரைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த தியாகுவுக்கு பிராட்வேயில் சற்று நகர இடம் கிடைத்தது. நிறையப் பேர்கள் அங்கு இறங்கிச் சென்றார்கள். வலது பக்கத்து ஜன்னலுக்கு அடுத்த இடம் காலியாகவே அவன் அங்கே தாவினான். அப்போதுதான் அவள் எதிர்ப்பட்டாள். அவள் அவனைப் பார்க்கவில்லை என்றே தோன்றியது. ஆனால் அவன் அவளை நன்றாகக் கவனித்து விட்டான். அவள் கமலாவே தான். ஐயமே இல்லை. அவள் உட்கார்ந்திருந்த இடத்தில் அழகிய முழுஜாதி மல்லிகைப் பூ ஒன்று இருந்தது. தியாகுவின் உள்ளத்தில் ஒரு மின்னலின் கீறல். இனந் தெரியாத உவகை வெறியுடன் அதைக் கையில் எடுத்துக் கொண்டு அந்த இடத்தில் உட்கார்ந்தான். மறுபடியும் அவளைக் காண உள்ளம் தினவெடுத்தது. இறங்கு வழியை நோக்கினான். அப்போது கமலாவும் அவனை நேரிடையாகப் பார்த்தான். அவன் மலரைக் கையில் எடுத்துக் கொண்டதைக் கண்டதும், அவள் முகத்தில் மகிழ்ச்சியின் ரேகை படர்ந்திருந்தது என்பதை உணர்ந்துகொள்ள அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. கமலாவின் நெற்றியிலிருந்த அகலமான குங்குமப் பொட்டையும் கவனித்தான். கணநேரத்தில் பஸ் நகர்ந்து விட்டது.

பஸ் கூட்டத்தில் அவள் தியாகுவைக் கண்டிருக்க வேண்டும். அடையாளமும் புரிந்துகொண்டிருக்கிறாள். அது மட்டுமல்ல; வேண்டுமென்று தான் அவனுக்காக அந்த மலரை விட்டுச் சென்றிருக்கிறாள். அது அவன் நெஞ்சைத் தொட்டது. மலரின் நறுமணத்தைச் சுவைத்து விட்டுத் தனது கைக்குட்டையை உருவி அதற்குள் பூவை அடக்கம் செய்து கொண்டான். கமலாவை ஒரு கணம் நேரில் கண்ட நினைவுகளை மறுபடியும் மனத்திரையில் அசை போட்டான். சற்றே பூசினாற் போன்ற தளிர் உடல்; வாயில் புடவை; இளம் பச்சை ரவிக்கை; அதனின்று வெளியில் தெரிந்த வாளிப்பான கைகள். தலை நிறையக் கூந்தல். சதா சலித்துக் கொண்டே மினுக்கும் கருநீல விழிகள். தியாகுவுக்கு வெகு நன்றாக அறிமுகமான முகம். அவனுக்குப் பரிச்சயமில்லாதது அவளுடைய நெற்றியில் இருந்த அகலமான திலகம் ஒன்று தான். எத்தத் துணிச்சலான



இளைஞன் அவளுக்கு அதைத் தந்தானே? இந்த எண்ணம் வந்ததும் தனது கோழைத் தனத்தை எண்ணி அவனுடைய நெஞ்சு காய்ந்து போயிற்று.

* * *

அவர்களுடைய சந்திப்பே பிரயாணத்தில்தான் தொடங்கியது. கமலாவை அவன் முதன் முதல் ஏழு ஆண்டுகளுக்கு முன் கண்டான். அப்போது தியாகு கிண்டியில் பொறியியல் கல்லூரி மாணவன். தினமும் கமலாவைக் கோட்டை ஸ்டேஷனின் மாடிப்படியில் உள்ள இரும்புக் கிராதியண்டை பார்ப்பான். காலை ஒன்பது ஐம்பத்தேழுக்குப் புறப்படும் ரயிலில் அவனும் செல்லுவான். தியாகு கிண்டியில் இறங்கியபிறகு ஒரு நிமிஷம் நிலையத்திலேயே நிற்பான். பெண்கள் வண்டியில் அமர்ந்து தொடர்ந்து பயணம் செய்யும் கமலாவைப் பாராததுபோல் பார்த்து விட்டுக் கல்லூரியை நோக்கி நடப்பான்.

அன்று வழக்கம் போல மின்சார ரயில் பத்து பதினெட்டுக்குக் கோடம்பாக்கத்தை அடைந்தது. அங்கிருந்து நகரவே இல்லை. மின்சாரம் தடைப்பட்டதாகவும் தெரியவில்லை. வெளியே கூச்சல் கேட்டது. தியாகு தலையை வெளியில் நீட்டிப் பார்த்தான். நான்கு ரௌடிகள் கையில் கூருள் கத்தியுடன் வழிமறித்துக் கொண்டு நின்றிருந்தார்கள். ஸ்டேஷன் மாஸ்டரைக் காவல் காத்தான் ஒரு காலி. மற்ற மூவரும் பிரயாணிகளிடமிருந்து கிடைத்ததை யெல்லாம் பறித்தனர். பணப்பை, கடிகாரம், மூக்குக் கண்ணாடி, பேனா, அனைத்தும் பறி போயின. அவர்கள் பெண்கள் வண்டியை நெருங்கியதும் கூக்குரல் கிளம்பியது. ஓரிருவர் வளையல்களையும் சங்கிலிகளையும் கழற்றிப் போட்டனர். எல்லோர் முகத்திலும் பீதி.

பட்டப்பகலில் இந்தக் கொள்ளையைக்கண்டு தியாகுவின் உள்ளம் கொதித்தது. அதுமட்டுமல்ல, இத்தனை பேர்களில் உயிருக்குத் துணிந்தவர் ஒருவர்கூட இல்லை என்று உணர அவன் நெஞ்சு பொங்கியது. வண்டியின் மறுபுறமாகக் கீழே குதித்தான். வகையான சாதனம் எதுவும் கைக்கு அகப்படவில்லை. சற்றுத் தொலைவில் ஒரு தண்டவாளத் துண்டு கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு ரயிலின் பின்புறமாக ஓடி அந்தரௌடிகளில் ஒருவனைத் தன் பலம்கொண்ட மட்டும் ஓங்கி அடித்தான். அவனுடைய இடது கையிலும் பலமான கத்தி வெட்டு ஒன்று விழுந்தது. தியாகுவின் துணிச்சல் மற்றும் சிலருடைய ஆண்மையைத் தூண்டியது. சிலர் ஒரே கூட்டமாகக் குழுமிப் போக்கிரிகளின் மீது பாய்ந்தார்கள். கிடைத்தவைகளைச் சுருட்டிக் கொண்டு ஓடினார்கள் ரௌடிகள்.

கையில் பட்ட பலமான காயத்தின் விளைவாகப் பல நாட்கள் கல்லூரிக்கே போகவில்லை தியாகு. இரண்டு வாரங்களுக்குப் பின் கையில் கட்டுடன் கல்லூரிக்குப் புறப்பட்ட போதுஅந்த இரும்பு வாராவதியண்டை கமலா நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அன்று முதன்முறையாக அவனுடன் பேசினாள்: "கைப் புண் நன்றாக ஆறிவிட்டதா?" என்று அவள் கேட்டது அவனுக்கு இதமாக இருந்தது. அவளை ஏறிட்டு நோக்கினான் தியாகு. களங்கமில்லாத நட்பை அவள் கண்கள் தெரிவித்தன.



அவளுடைய பெயர் கமலா என்பதையும், பல்லாவரம் தொழிற்சாலை ஒன்றில் அவள் தட்டெழுத்துப் பணி புரிவதையும் அன்றுதான் தெரிந்து கொண்டான் தியாகு. அன்று கிண்டியில் கமலா இருந்த பெட்டி அவனைக் கடந்து சென்றபோது, கமலா தனது சக தோழியிடம் தியாகுவைச் சுட்டிக்காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுடைய பார்வையில் இருந்த கனிவு தியாகுவை இதுவரையில் அவன் கண்டறியாத உலகுக்குக் கொண்டு போயிற்று. அது அவனுக்குப் பிடித்ததொரு உறவு.

இரு மாதங்களுக்குப் பிறகு எதிர்பாராத விதமாக அவளை மாம்பலத்தில் சந்தித்தான். அந்த ரயில் நிலையத்தில் அவ்வளவு கூட்டத்தின் இடையிலும் அவனை அடையாளம் கண்டு கொண்டு கமலா தனது புன்சிரிப்பினால் முகமன் கூறினாள். அன்று அவளுடைய முகத்தில் அழகு சிரித்தது. மாம்பல நிலையம் முழுதுமே மல்லிகையால் மணத்தது. சின்னஞ்சிறு குழந்தையிலிருந்து பேரிளம் பெண்கள்வரையில் அனைவரும் மல்லிகைச்சரம் அணிந்திருந்தனர். நிலையத்தில் பூ மிதி பட்டது. தியாகுவும் கமலாவும் சேர்ந்தாற் போல் படி ஏறிச் சென்றார்கள்.

"ஸார்! ஜாதிமல்லி, அணாவுக்கு மூன்று முழம்!" என்று ஒரு பையன் அவனை முட்டினான். தியாகு ஓரக்கண்ணால் கமலாவைக் கவனித்தான். அவள் கூந்தலில் மலர் அணிந்து கொண்டிருக்கவில்லை. பேசாமல் இரண்டணாவை நீட்டி இலையில் கட்டியிருந்த மலர்ச்சரத்தை வாங்கிக் கொண்டான். கமலா அதைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. ரயிலில் கூட்டம் நெரிந்தது. கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு ஜனங்கள் தொங்கினார்கள். எங்கும் இலேசான இருள் பரவத் தொடங்கியது. பெண்கள் வண்டியில் அவ்வளவு கூட்டம் இல்லை. ஆனால் கமலா

ஏனோ அதில் ஏற முயற்சி செய்யவில்லை. இரண்டு ரயில்களைத் தவறவிட்ட பிறகு அவன் கமலாவுடன் முதல் வகுப்புப் பெட்டியொன்றை அணுகினான். "உங்களுக்குத் தடை இல்லையென்றால் இதிலேயே போய்விடுவோமே? அதிகப்படியாகும் கட்டணத்தைச் செலுத்தி விட்டால் போகிறது" என்றான்.

கமலா தயங்கியவாறு உடன்பட்டாள். அந்தப் பெட்டியில் கூட்டமே இல்லை. ஒதுக்குப் புறமான ஆசனத்தில் சென்று எதிரெதிராக அமர்ந்தார்கள். தியாகு விசிறியின் விசையைத் தட்டிவிட்டான். ரயில் பிசாசைப் போல் ஓடிக் கொண்டிருந்தது. ஒளியும் இருளும் மாறி மாறிக் கமலாவின் மேல் படர்ந்து சென்றன; அழகாக இருந்தது. அந்தப் பிரயாணம் வெகு நேரம் நீடிக்காதா என்று தியாகு ஏங்கினான். தியாகு மெள்ளத் தன் கையிலிருந்த மலர்ச்சரத்தை அவளிடம் தரவிருந்தான். கமலாவின் முகம் சுருங்கி வாட்டமடைந்தது. தன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான் தியாகு. அவன் மானஸ்தன். "தவறாக இருந்தால் மன்னிக்க வேண்டும்!" அவனுடைய குரல் தழுதழுத்தது.

"அப்படி ஒன்றுமில்லை" கமலா சற்றுத் தயங்கினாள்; "அந்தப் பாக்கியம் நான் செய்யவில்லை." அவளுடைய விழிகள் நீரில் மிதந்தன. அதை வெளிக்காட்ட விருப்பமின்றி அவள் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். கமலா மறுபடியும் அவன் பக்கம் திரும்பியபோது, அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான் தியாகு. அவளுடைய நெற்றியில் இருந்தது சாந்துப் பொட்டு அல்ல. யாராலும் அழிக்க முடியாதபடி இளவயதிலேயே அவளுடைய நெற்றியின் நடுவில் பச்சை குத்தப்பட்டிருந்தது. சிவந்த முகத்துக்கு அந்தக் கரும் பச்சைப் பொட்டு அழகை அளித்தது. தன் நெஞ்சினுள்ளே ஏதோ ஒரு நாளம் விம்மியுடைந்து பெருக்கெடுப்பது போலத் தோன்றியது தியாகுவுக்கு.

அன்று அவன் ரயிலில் விட்டுச் சென்ற மலர்ச் சரம் எவராலும் சூடப்படாமல் கடற்கரை நிலையத்தை அடைந்தது.

மறுபடியும் அவன் கமலாவைச் சந்திக்கபொழுது இயல்பாகவே அவனுடைய பாவனை மாறி விட்டது. அவன் தனது நிலையையும் சமூகத்தையும் அறிந்தவன். தன்னுடைய எல்லையையும் எதிர்நீச்சலுக்குத் துணிவில்லாததையும் உணர்ந்தவன். அவளை மறக்க முயன்றான்; மறந்தும் விட்டான். ஆனால் எப்போதாவது மல்லிகையைக் காணும்போது கமலாவின் உருவமும் அவளுடைய மலர்விழிகளும் அவன் நெஞ்சில் நிழல் ஆடாமல் போகாது. அந்த நிழலில் துயர இழை பாவோடிய இன்பம் இருந்தது. ஆனால் யாரோ இப்போது அவளுக்கு மறு வாழ்வு அளித்திருக்கிறார்கள். எவனுக்கோ இருந்த துணிச்சல் தனக்கு இல்லையே என்று அவனுக்குத் தன் மேலேயே எரிச்சல் வந்தது.

அன்று மாலை தொழிற்சாலையிலிருந்து திரும்பிய தியாகு கடைத் தெருவுக்கு வந்து மறக்காமல் பூவும் பழங்களும் வாங்கிக் கொண்டான். மாலாவுக்கும் தாலு வர்ணத்தில் பட்டு நாடா. ஏதோ நினைவாகத் தன் வீட்டை அடைந்ததும், அங்கு முன் கூடத்தில் உட்கார்ந்திருந்தவனைக் கண்டு திடுக்கிட்டான். குழந்தை மாலாவுடன் அவன் விளையாடிக் கொண்டிருந்தான். 'ராகவன்தானா அது? அவன்தான் போர்ப் படையில் சேர்ந்து மரணமடைந்து விட்டானே. சென்ற ஆண்டு கூட அவனுடைய தந்தை அதைத் தன்னிடம் கூறி வருந்திக்கொண்டிருந்தாரே!'

"வா, வா, தியாகு, என்னைக் கண்டு வியப்படைய வேண்டியவர்களின் பட்டியலில் நீயும் ஒருவன்!" ராகவன் தியாகுவை அன்புடன் தழுவிக்கொண்டான். உள்ளே பெண்களின் பேச்சுக் குரல் கேட்டது. அவற்றில் இரண்டுமே பழகிய குரல்கள்.

ராகவன் பேசத் தொடங்கினான்: "நான் 'ஸரி' போர் முனையில் காணாமற் போனதென்னவோ உண்மை. அதனால் நான் மரணமடைந்து விட்டதாகவே எல்லோரும் நம்பி விட்டார்கள். எல்லைப்புறத்தைக் கடந்து எதிரிகள் இடையில் நான் பட்ட துயரங்கள் தான் அதிகம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் திரும்பிவந்த பிறகுதான் என் உறவினர்கள் அனுபவித்த சோகத்தில் ஒரு சிறு பகுதிகூட என்னுடைய துன்பம் இல்லை என்பதை உணர்ந்தேன். உதாரணமாக, என் மனைவி கமலாவையே எடுத்துக் கொள்ளுவோமே! என்னை மறுபடியும் கண்டபோது அவளுக்கு உண்டான அதிர்ச்சியினால் ஒரு மாத காலம் அவள் பேசும் சக்தியையே இழந்து விட்டாள்! எவ்வளவு ஆழ்ந்த துயரம் அவளுடைய மூளையைத் தாக்கியிருக்க வேண்டும்? நாளை மறுநாள் நாங்கள் ராஞ்சிக்குப் போகிறோம். அதற்கு முன்பு திருவொற்றியூரில் பட்டினத்தாரின் சமாதியைத் தரிசித்து வந்தேன். எனக்குத்தான் இதில் எல்லாம் பற்றுதல் உண்டென்பது உனக்குத் தெரியுமே! திருவொற்றியூர் தியாகராஜரைக் கண்ட பிறகு தண்டையார்ப்பேட்டைத் தியாகுவும் இங்கேயே இருப்பதாகக் கூறினார்கள். உடனே உன்னையும் காண வந்தோம்."

நிறைய மலர்களைக் கமலாவின் கூந்தலில் சூட்டினாள் கல்யாணி. நெற்றி நிறையத் திலகம் இட்டு மகிழ்ந்தாள். தியாகுவின் கைக்குழந்தை ரமணனை எடுத்துக் கொஞ்சினாள் கமலா: 'அப்பாவைப்போல் தைரியசாலியாக இருக்க வேண்டும், ரமணா! என்ன?' என்று கூறித் தியாகுவை அவள் ஏறிட்டுப் பார்த்தாள். அவனுடைய உள்ளம் பூரித்தது.

தேங்காய், வெற்றிலை, மஞ்சள் பழங்களுடன் கமலாவை வழி யனுப்பினாள் கல்யாணி. கமலா அழகாகக் கையைக் குவித்து விடைபெற்றுக் கொண்டாள்.

கணவன் முன்செல்லக் கமலா பின் தொடர்ந்தாள். உடம்போடு ஒட்டிய அவளுடைய சேலையின்மீது நெளிந்து ஆடிய கரும் கூந்தலிலிருந்து ஒரு முழ மல்லிகைப் பூ வெளிக் கூடத்தில் உதிர்ந்தது.

தியாகுவும்கல்யாணியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிணக்குத் தீர்ந்த அந்த இனிய கணம் அவர்கள் இருவருக்குமே மிகவும் பிடித்திருந்தது. உதிர்ந்த முழ மல்லிகைப் பூ வழி நடையிலேயே கிடந்தது.

அத்தியாயம் 7

"விஷமல்ல அமுதம்"

"ஏன்னம்மா சொன்னுன்?" என்று அடுக்களைக்கு வந்த மகளிடம் சச்சிதானந்தம் கேட்டார்.

வீணு தன்னிலையில் இல்லை; எனவே, "ஒரு விதவையின்..." என்ற இரு சொற்களும் அவள் வாயிலிருந்து குதித்து விட்டன. ஆனுல் மறு கணம் அவள் தன்னிலை அடைந்துவிட்டாள். சுந்தரம் கூறியதைத் தன் தந்தையிடம் சொன்னுல் விபரீதம் இன்னும் பெருகிவரும் என்பது சட்டென்று அவளுக்கு நினைவு வந்தது.

அன்று காலையிலிருந்தே சச்சிதானந்தம் முற்றிலும் மாறி விட்டார். புஷ்பவனம், மரகதம், தைலம்மாள் ஆகியோர் அங்கே வந்து கூறிய ஒவ்வொரு சொல்லும் விஷம் தோய்ந்த அம்பாக அவர் உள்ளத்தைத் தாக்கி விட்டது. ஆம்! நேற்றிரவு நடந்த அந்த உயிராபத்து அவரை ஓரளவு மனந் தளரச் செய்திருந்ததென்றுல், இன்று அவர்களு



கண்கள் உறங்காவோ


டைய பேச்சு அந்த மனத் தளர்ச்சிக்கு முழு வளர்ச்சி அளித்தது.

நேற்று அந்த விபத்தை எதிர்கொள்ளும் வரையில் எங்கேயாவது, எப்படியாவது, தன் மகளும் சுந்தரமும் ஒன்ருக வாழ்ந்து வந்தால் போதும் என்று அவர் கருதியிருந்தார். ஊரில் அவர்களின் புரட்சியைப் பற்றிக் கேவலமாகவும் கோபமாகவும் பேசப்பட்டு வந்தாலும், சில நாட்கள் இப்படிப்பட்ட கொந்தளிப்பு இருக்கத்தான் இருக்கும்; பிறகு அது தானுகவே ஆறிப் போய் விடும் என்ற தைரியம் கொண்டிருந்தார். தாணுவதியின் பயமுறுத்தலைக்கூட இதன் காரணமாகத்தான் அவர் அதிகமாகச் சட்டை செய்யாதிருந்தார். ஏனென்றுல் ஊர்க்காரர்கள் பேசிய ஏளனப் பேச்சுக்களும் காட்டி வந்த கோபமும், அவருடைய தலைமறைவில்தான் இருந்தன. அவரைக் கண்டால் எல்லோரும் சுமுகமாகத்தான் வார்த்தையாடினர். அவருடைய மகள் கிராமத்துக்கு இழிவை ஏற்படுத்தும் செயல் ஒன்றைச் செய்திருப்பதற்காக வருந்திக் கொண்டிருப்பதுபோலவே அவர்கள் காட்டிக் கொள்ளவில்லை. ஆதலால்தான் அவர்களுடைய குமுறல் தாற்காலிகமானது, அரசாங்கத்துக்கும் சட்டத்துக்கும் பயந்தது; இப்படி மறைமுகமாகக் குமுறுவதற்கு அதிகமாக இவர்கள் ஏதும் செய்ய மாட்டார்கள்; தாணுவதி இவர்களைப் பக்க பலமாகக் கொண்டு சுந்தரத்துக்கோ, வீணுவுக்கோ எவ்விதத் தீங்கும் செய்ய முற்பட மாட்டான்; செந்தலைக்காரர்களைக் கண்டால் காத தூரம் ஓடும் அவன், இந்த விஷயம் சட்ட வரம்புக்கு உட்பட்டது என்பதையும் இதில் யாராவது அநாவசியமாகத் தலையிட்டால் போலீஸ் நடவடிக்கை எடுத்து விடுவதாக வீணு புஷ்பவனத்திடம் பயமுறுத்தியிருந்ததையும் அறிந்திருந்ததால், அவர்களுக்குத் தீது செய்யும் காரியங்களில் தலையிட மாட்டான் என்று அவர் திண்ணமாக நம்பியிருந்தார்.

ஆனுல் நேற்றையச் சம்பவம் அந்த நினைவுகளைத் தவிடு பொடியாக்கி விட்டது. நேற்று சுந்தரத்தைத் தீர்த்துக்கட்ட முயன்றவர்கள் யாருடைய கையாட்களோ. அது அவருக்குத் தெரியாது; ஆயினும், எப்பொழுது தமது உறுதிக்கும் நம்பிக்கைகளுக்கும் மாருகக் காரியங்கள் நடக்க ஆரம்பித்தனவோ, அப்பொழுதே அவர் மனம் அந்த உறுதியை இழக்கத் தொடங்கி விட்டது.

வீணு இவ்வூருக்கு வந்த போது அவளுக்கு மறுமணம் செய்வித்து இன்பமாக வாழச் செய்ய வேண்டும் என்று அவர் கருதியிருக்க வில்லை. ஆயினும் ஒருகால் மகாராஜா மோஹன்சிங்கும், ராணி ஊர்மிளா தேவியும் அவளை டாக்டருக்குப் படிக்க வைத்த பிறகு அங்கேயே தொழில் நடத்தச் செய்து, மறுமணத்

தையும் செய்து வைத்திருந்தார்களானால் அவர் திருப்தியே அடைந்திருப்பார். ஏனென்றால் இங்கே வந்தால் அவள் தொழில்தான் நடத்த முடியுமேயன்றி, மறுமண ஆசை மனத்தில் இருந்தால் அதை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பது அவருக்குத் தெரியும். ஆதலால் மன்னரும் அரசியும் வீணையின் படிப்பு முடிந்ததும், அவளை இங்கே



தொழில் நடத்த அனுப்பி விட்டபோது, இனி அவளுக்கு இத்தொழில்தான் சதம் என்றே சச்சிதானந்தம் எண்ணினார். அதற்கேற்றவாறு, புரட்சி நினைவுகளில் தன் மனம் கவிந்து விடக் கூடாதென்று வீணை ஒரு நாள் காலஞ் சென்ற தன் கணவனின் படத்தை, தன் நிலையை என்றும் உணர்த்திக் கொண்டிருப்பதற்காக வாங்கி வைத்துக் கொண்ட போது, இவள் ஊரோடு ஒத்து வாழ உறுதி பூண்டு விட்டாள்; நகர வாழ்வோ, படிப்போ, இவளைப் பண்பாட்டிலிருந்து மாறச் செய்துவிடவில்லை என்று அவர் களிப்படைந்தார்.


என்னதான் மகள் இன்புற்று வாழ வேண்டும்; சமூகம் அவளுக்கு மறுத்து விட்ட வாழ்வைத் திரும்பப் பெற்றுவிட வேண்டும் என்று ஒரு தந்தை விரும்பினாலும், அந்த மகளே அவற்றை விரும்ப வில்லையென்றால், அவர் என்ன செய்ய முடியும்? ஆதலால் மகள் விரும்பாத ஒன்றை, எளிதில் நிறைவேற்ற முடியாத ஒரு கிராமாந்திரத்தில், கட்டாயப்படுத்திப் பெறச் செய்ய முடியாத நிலையில் சச்சிதானந்தம் இருந்தார்.


ஆனால் அந்நிலை விரைவில் மாறிற்று: வீணையின் உள்ளத்தில் புரட்சி நினைவுகள்


படரலாயின. சுந்தரம் அவளோடு இணையக்கூடும் என்று அவருக்குத் தோன்றியது. அந்நிலையில் முற்போக்குக் கருத்துக்களுடைய ஒரு தந்தை சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு எதைச் செய்யக்கூடுமோ, அதை அவர் செய்தார். மறைமுகமாக மகளின் செயலை ஆதரித்தார்; அதற்குப் பக்கபலம் தேடினார். மெல்ல, மெல்ல, பேச்சுவாக்கில் இதில் சம்பந்தப்பட வேண்டியிருந்த புஷ்பவனத்தின் உள்ளத்தில் விதவைகளிடம் கருணை பிறக்கச் செய்தார். ஆயினும், கிட்டி முட்டி வந்ததும் புஷ்பவனம் அந்த முன்னேற்றக் கொள்கைகளைச் சொல்லளவில் ஆதரிப்பவரேயன்றிச் செயலளவில் ஆதரிக்கத் துணிவற்றவர் என்பது அவருக்கு விளங்கியது. அப்பொழுது அவருக்கு, ஒன்று வெளிப்படையாக மகளுக்குப் பக்கபலமாக நிற்கவேண்டும்; அல்லது அவளை இந்த முயற்சியிலிருந்து பின்வாங்கச் செய்ய வேண்டும் என்ற இக்கட்டான நிலை ஏற்பட்டது. அதை அவர் துணிந்து மகளின் முடிவுக்கே விட்டு விட்டார். வீணா 'சுந்தரத்தை இணை சேர்த்துக்கொண்டபட திரும்வேன்' என்று புஷ்பவனத்திடம் திறந்து சொல்லி, தங்கள் செயலில் அவர் குறுக்கிட்டால் சட்டத்தின் உதவியை நாடப் போவதாகப் பயமுறுத்தியபோது அவருக்கு மகிழ்ச்சியே உண்டாயிற்று. சட்டம் இவர்கள் வால்களை ஒட்ட நறுக்கிவிடுமாதலால் யாருமே இனி அவர்கள் விஷயத்தில் தலையிட மாட்டார்கள் என்று அவர் இறுமாந்தார். ஆனால் இப்பொழுதோ அவர்கள் அந்தச் சட்டத்தை மட்டந்தட்ட மறைமுகமாக முயற்சி செய்ய ஆரம்பித்து விட்டனர். அது வெறும் வாய் வார்த்தையாக, ஏசலாக, கேலிப் பேச்சாக, அல்லது பகிஷ்கரிப்பாக இருந்திருந்தால் சச்சிதானந்தம் கவலை அடைந்திருக்க மாட்டார். ஆனால் அது ஆளையே தீர்த்துக் கட்டும் அளவுக்கல்லவா வளர்ந்திருக்கிறது! நேற்று சுந்தரத்தைத் தாக்கியவர்கள் அவனை மட்டும் ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்திருந்தார்கள் என்று எப்படி நம்புவது? வீணாவும் அவனும் இரவு முன்னேரத்தில் ஸ்டேஷன் ஹோட்டலுக்குச் சாப்பிட வருகிறார்கள்; அந்தச் சமயத்தில் அவர்கள் இருவரையுமே தீர்த்துக் கட்டி விடலாமென்ற நோக்கத்தோடு தான் அவர்கள் வந்திருக்க வேண்டும். ஏதோ, தெய்வச் செயல் சுந்தரமும் உயிர் தப்பினான்; என் மகளும் நேற்று அவனுடன் வராமல் தப்பி விட்டாள். இது இத்துடன் முடிந்துவிடும்; இனி இவர்களுக்கு யாராலும் எவ்வித அபாயமும் ஏற்படாது என்று இருந்தால் பரவாயில்லை. ஆனால் அதை எப்படி நம்புவது?

இப்படிச் சிந்தித்தவாறு படுத்திருந்த போது ஒருவர்பின் ஒருவராகப் புஷ்பவனம், மரகதம், தைலம்மாள் ஆகியோர் வந்து அவருடைய பீதியை அதிகப் படுத்தினர். அவர்கள் மூவரும் பேசிய பேச்சில் ஒன்று சச்சிதானந்தத்தின் கவனத்தைக் கவர்ந்தது. நேற்றுவரை வீணாவையும் சேர்த்துக் குறை கூறிக் கொண்டிருந்த அவர்கள், இன்றையப் பேச்சில் அவளைப் பற்றி ஒரு சொல்கூடக் கூறவில்லை. "சுந்தரம்! நீ செய்யற காரியம் கடவுளுக்கே பொறுக்கலையடா!" என்று கதறினாள் மரகதத்தம்மாள். "பெற்றவர்களுக்கு அவன் செய்த துரோகத்துக்குப் படவேண்டிய தண்டனைகள்!" என்றார் புஷ்பவனம். அதேபோல் தைலம்மாள்கூட, "அவன் செய்த பாவத்துக்குச் செந்திவேல் முருகன் அவனுக்குப் பலன் கொடுத்தான்!" என்றாள். இப்படி அவர்கள் ஒருவாக்காக ஒன்றையே வலியுறுத்தியதால், 'தன் மகள் மறுவாழ்வு முயற்சியில் ஈடுபடத் துணிந்திருப்பது அத்தனை பெரிய தவறில்லை; இறைவனின் கண்களில் அது ஒரு மகத்தான பாவமில்லை. ஆனால் சுந்தரம் பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக வீணாவை மணக்கத் துணிந்திருப்பதுதான் பெரிய துரோகம்; பெரிய பாவம்; இறைவனுக்கே அது பொறுக்கவில்லை. ஆதலால்தான் அவனுக்கும் அவனைக் காப்பாற்றப் போன தமக்கும் தண்டனைகள் கிடைத்திருக்கின்றன' என்று அவருக்குத் தோன்றலாயிற்று. ஆதலால் யாரை இணைத்து வைக்க அவர் மறைமுகமாக உதவி வந்தாரோ, அவர்களை இப்பொழுது அவரே பிரித்துத்தான் ஆக வேண்டும். பிரித்தால்தான் அவர்கள் உயிருடன் இருக்க முடியும்.

தைலம்மாளை அங்கேயிருந்து விரட்டி விட்டுச் சச்சிதானந்தம் நெடு நேரம் இதற்கு என்ன செய்யலாமென்று சிந்தித்தார். சட்டென்று அவருக்கு ஒரு வழி புலப்பட்டது. சுந்தரத்திடமே நல்லதனமாகச் சொல்லிப் பார்ப்போம். தேவையானால் சிறிது பயமுறுத்தி வேண்டுமானால் பார்ப்போம். "உன் உயிர் உனக்கு வெல்லமில்லாமல் இருக்கலாம்; ஆனால் வீணாவின் உயிர் எனக்கு வெல்லம், அப்பா! எல்லாம் நல்லபடியாக நடந்திருந்தால் உங்கள் இணைப்புக்கு நான் துணை நின்றிருப்பேன்; ஆனால் அது இப்பொழுது உங்கள் இருவரின் கழுத்துக்கும் கயிற்றைக் கொண்டு வந்திருக்கிறது. உனக்கு வீணா உயிர் வாழவேண்டுமென்ற விருப்பமில்லையா?"




RUTTONSHA
Fluorescent Lamp
STARTERS
RI
Made to INTERNATIONAL Standards



என்று மாட்டினால் வழிக்கு வந்துவிடுவான் என்று அவர் நினைத்தார். உடனே இதையெல்லாம் சுந்தரத்திடம் சொல்லவும் சொன்னார். கெஞ்சினார்; பயமுறுத்தினார்; என்னவெல்லாமோ செய்து பார்த்தார். ம்ஹூம்! சுந்தரம் கொஞ்சமும் அசையவே இல்லை. "வீணா என்னை உதறி விட்டுப் போவதாக இருந்தால், போகட்டும். ஆனால் நான் அவளை உதறவே மாட்டேன்" என்று அவன் பிடிவாதமாகக் கூறி விட்டான்.

காலை நோயாளிகளைப் பார்த்து அனுப்பி விட்டு வீணா தந்தையும் சுந்தரமும் படுத்திருந்த பின்கட்டுக்கு வந்ததும் சச்சிதானந்தம் அவளிடம், "இங்கே ஒரே தொல்லையாகப் போச்சு, வீணா! ஒருத்தர்பின்னடி ஒருத்தராக யாரானும் வந்து ஏதானும் பேசி என் மனசைத் தொல்லைப்படுத்திக்கிட்டே இருக்கிறாங்க. என்னைத் தனியா எங்கேயாச்சும் படுக்க வைச்சுடேன்" என்றார்.

"சரி, அப்படியானால் உங்களுக்கு அடுக்களையில் ஒரு கட்டிலைப் போடச் சொல்கிறேன். அங்கே நிம்மதியாக இருக்கும்" என்று கூறி வீணா அவ்வாறே தந்தையை அடுக்களைக்கு மாற்றினாள். அங்கே போய்ப் படுத்ததும் சச்சிதானந்தம், "வீணா! மாணிக்கத்தை நம்ம வீட்டுக்கு அனுப்பி மாடசாமியை அழைத்து வரச் சொல்லு! அவனைப் பனையங்குளத்துக்கு அனுப்பி அளந்து போட்டிருக்கும் குத்தகை நெல்லை, வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வர ஏற்பாடு பண்ணவேண்டும்" என்றார்.

அவன் வருவதற்குள்ளாகக் காசிப்பூர் மன்னருக்கு ஒரு கடிதம் எழுதிவைத்தார். இடை இடையே வீணாவின் நலத்தையும், சச்சிதானந்தத்தின் நலத்தையும் மன்னர் தம்பதிகள் எழுதி விசாரிப்பதுண்டு. சில சமயம் வீணா அந்தக் கடிதங்களுக்கு மறுமொழி எழுதுவாள். சில சமயம் சச்சிதானந்தமே எழுதி விடுவார். ஆனால் அவர்கள் இருவரும் இங்கு நிலவி வரும் இந்தப் போராட்டம் பற்றி இதுவரை ஒரு வரிகூட எழுதியதில்லை.

இன்று, வீணாவைச் சூழ்ந்திருக்கும் பேராபத்தைத் தடுக்க அவளை அங்கிருந்து கிளப்பவேண்டும் என்றஎண்ணம் எழுந்ததும் சட்டென்று மகாராஜா மோஹன் சிங்கின் நினைவுதான் வந்தது. அவருக்கும் அரசிக்கும் வீணாவினிடம் உள்ள அன்பு என்றுமே வற்றாது. அவள் நல்வாழ்வுக்கு வகை செய்ய அவர்கள் எக்காலத்திலும் பின்வாங்க மாட்டார்கள் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆதலால் இப்பொழுது வீணாவின் உயிருக்கே உலை வைக்கக் கூடிய பிரச்னை ஒன்று எழுந்திருப்பதை அவர்களுக்கு விவரமாக எழுதிவிட்டு, "இந்த ஆபத்திலிருந்து என் (தவறு; உங்கள்) மகளைக் காப்பது இனி உங்கள் கையில்தான் இருக்கிறது. நேரில் புறப்பட்டு வந்தோ, அல்லது கடிதத்தின் மூலமோ அவளது பிடிவாதத்தை மாற்றி இங்கிருந்து காசிப்பூருக்கு அழைத்துச் சென்று விடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடிதத்தை முடிந்து உறையிலிட்டு முகவரியை எழுதிக் கொண்டிருக்கையில் மாடசாமி, "கூப்பிட்டீங்களாமே!" என்று கேட்டுக்கொண்டு உள்ளே வந்தான். அவனிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்து யாரிடமும் காட்டாமல் தபால் பெட்டியில் போடச் சொன்னார். அப்புறம்தான் சச்சிதானந்தத்துக்கு ஓரளவு நிம்மதி ஏற்பட்டது. அப்போதைக்கு இவ்விஷயமாகத் தமது பணி தீர்ந்து விட்டதாகவே அவர் கருதியிருந்தார். ஆனால் அது தீர்ந்து விடவில்லை என்பதை அறிவித்துக் கொண்டு இரவு மாலா அவரிடம் வந்து சேர்ந்தான்.

வீணா தன்னை உள்ளே போக அனுமதித்ததும், மாலா வேகமாகச் சுந்தரம் படுத்திருந்த இடத்தை நோக்கித்தான்

வந்தான். ஆனால் தாழ்வாரத்தின் வாயிலிலே அவளைப் பார்த்துவிட்ட சுந்தரம் சட்டென்று கண்களை மூடிக் கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தான். 'ஐயோ! இந்தச் சமயத்தில் இந்தச் சனியன் இங்கே வந்து தொலைத்திருக்கிறதே. ஏதேனும் ஏக்கச்சக்கமாகப் பேசி எங்கள் பழைய உறவை விறவுக்கு வெளிப்படுத்தி விடுவாளோ!' என்று அவன் உள்ளூறக் கலங்கினான். அதை ஏற்கெனவே வெளிப்படுத்தியதால்தான் விறு அவளை உள்ளே செல்ல விட்டாள் என்பதை அவன் எங்ஙனம் அறிவான்?

மாலா சுந்தரத்தின் கட்டிலருகே இருந்த தூண் ஒன்றின் பின்னால் வந்து நின்று கொண்டு அவன் தலையில் போடப் பட்டிருந்த பலமான கட்டைப் பார்த்து விட்டுத் தேம்பித் தேம்பி அழுதாள். தன் அழுகைக் குரல் அவனைக் கண் விழிக்கச்செய்யும்; தான் காண வந்திருப்பதை அவன் பார்ப்பான்; அதிலிருந்து தான் இன்னுங்கூட அவனை மறந்து விடவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுவான் என்றெல்லாம் எண்ணினாள் அந்தப் பேதைப் பெண். ஆனால் நெடு நேரம் அழுதுகொண்டே இருந்தும் அவன் கண்விழித்துத் தன்னைப் பார்க்காதது அவளுக்கு ஏமாற்றத்தை அளித்தது. நெடுநேரத்துக்குப் பிறகு அவள் துணிந்துஅவன் கட்டிலை நெருங்கி, மெதுவாக அவன் உடல்மீது கை வைத்து, சன்னமான குரலில், "அத்தான்!" என்று விளித்தாள். கல்லையும் கரைக்கும்படியாக இருந்தது அந்த அழைப்பு. ஆனால் சுந்தரம் என்ன செய்தான், தெரியுமா! அப்போதுதான் கண் விழிப்பவன் போல் விழித்து, மாலாவைக் கண நேரம் சொல்லொண்ணு வெறுப்புடன் பார்த்துவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டு விட்டான்.

அதற்குமேல் மாலாவுக்கும் அங்கே நிற்கப் பிடிக்கவில்லை. 'விர்'ரென்றுவிட்டு ரேழி வரையில் வந்துவிட்டாள். பிறகு அவளுக்குச் சட்டென்று தன் மாமாவின் நினைவு வந்தது. 'அவர் அடுக்களையில் படுத்திருப்பதாகவல்லவா சொன்னாள், அக்காள்? வந்ததுதான் வந்தோம். அவரையும் பார்த்துவிட்டுப் போவோம்' என்று அவள் அடுக்களைக்குச் சென்றாள்.

மாலாவைக் கண்டதும் சச்சிதானந்தத்துக்குத் தம்மை அறியாமலே ஒருவித நக்குற்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அவர் தம் அருகில் வந்த மாலாவின் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு, "கண்ணே, மாலா!" என்று கதறினார். அவளும் அவர் மார்பின்மீது முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பித்

தேம்பி அழுதாள். அந்த அழுகை சச்சிதானந்தத்தின் குற்றமுள்ள நெஞ்சைக் குத்திக் கிழித்தது. அவரால் தம்மை அடக்கிக்கொள்ள முடியவில்லை. "பெற்ற மகளுக்கு ஒப்பாக வளர்த்த உனக்குத் துரோகம் நினைச்சேன், அம்மா! சுந்தரத்தை உங்கிட்டேயிருந்து பறிச்சு வீணுவுக்குக் கொடுத்துடப் பார்த்தேன். செந்திவேலன் என்னைக் கடுமையாகத் தண்டிச்சுட்டான், அம்மா!" என்று அவர் குழந்தைபோல் தேம்பினர். மாலா அவரைத் தேற்றினுள். "எப்போ அத்தான் எனக்கு இல்லேன்னு ஆச்சோ, அப்போ அவர் அக்காளுக்குக் கிடைச்சதில் எனக்கு மனச் சந்தோஷந்தான், மாமா! நீங்கள் எதற்காக வேண்டாததையெல்லாம் நினைத்து மனத்தை வருத்திக் கொள்ளுகிறீர்கள்?" என்றுள் அவள்.

"இல்லே; இனி சுந்தரம் வீணுவுக்கு இல்லே; உனக்குத்தான். நிச்சயமாக உனக்கேதான், மாலா!" என்று ஆவேசம் கொண்டவரைப் போல் கூறினுர் சச்சிதானந்தம்.

"அது வீண் பிரமை, !" என்று நம்பிக்கையின்றிக் கூறினுள் மாலா. "அவர்கள் அன்பு உரம் பெற்றுவிட்டது. இனி யாராலும் அவர்களைப் பிரிக்க முடியாது. பிரித்தாலும் அத்தான் என்னைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்."

"ஏன் மாலா?"

"ஏனென்றல் நான்தான் அவரை அக்காளிடம் நாட்டங்கொள்ளத் தூண்டியவள்." மாலா கண்ணீரினிடையே சற்று முன் வீணுவிடம் கூறிய அனைத்தையும் மாமாவிடமும் சொன்னுள்.

அதைக் கேட்டபோது, சச்சிதானந்தத்தின் குற்றமுள்ள நெஞ்சு இன்னும் குன்றிப் போயிற்று. தம் மகளுக்கு நல்லது செய்ய முயன்று, அதற்காகத் தான் காதலித்த ஒருவனையே அவளுக்குத் தத்தம் செய்துவிடத் துணிந்திருக்கும் இந்தச் சின்னஞ்சிறு குழந்தைக்கு இருக்கும் நேர்மை உணர்ச்சிகூடத் தமக்கு இல்லாமல் போய்விட்டதே என்று அவர் வெட்கினுர். அவர் அவளைத் தேற்றி, எப்படியும் சுந்தரம் அவளையே மணக்க ஏற்பாடு செய்வதாக வாக்களித்து அனுப்பிவிட்டு உடனே சுந்தரம் படுத்திருந்த தாழ்வாரத்துக்கு வந்தார். வந்து அவன் மனத்தைக் கரைக்க முயன்று கொண்டிருந்த போதுதான் வீணு அங்கே வந்தாள். அவளிடமும் மாலா எல்லாவற்றையும் கூறிவிட்டாள்; அவளும் மனம் மாறிவிட்டாள் என்பதை உணர்ந்தபோது சச்சிதானந்தம் சற்றே

ஆறுதல் பெற்ருர். இனி அவள் எப்படி யும் சுந்தரத்தின் மனத்தை மாற்றி விடுவாள் என்ற நம்பிக்கையுடன் தமது படுக்கைக்குத் திரும்பி வந்தார். ஆத லால்தான் இப்பொழுது மகள் சுந்தரத் திடம் பேசிவிட்டுத் திரும்பியதும், அவன் என்ன முடிவு சொன்னுன் என்பதை ஆவலுடன் விசாரித்தார்.

வீணு வாய் தவறிச் சுந்தரம் இறுதி யாகக் கூறியதைச் சொல்ல ஆரம்பித்த போதிலும், உடனே தன்னிலே பெற்று சட்டென்று பேச்சை மாற்றிக் கொண் டாள். "இல்லையப்பா! அவரை அவ்வளவு சடுதியில் மனம் மாறச் செய்துவிட முடியாது; அதற்குச் சில நாட்கள் ஆகும். ஆயினும் நீங்கள் கவலைப் படா தீர்கள். நிச்சயமாக அவரை நம் மாலா வையே மணந்துகொள்ளச் செய்துவிடு கிறேன்" என்று கூறிவிட்டு, டிபன் செட்டை எடுத்து வைத்துக்கொண்டு, 'ஏதோ சாப்பிட்டோம்' என்று பெயர் பண்ணிஞள். பிறகு தந்தையின் போர் வையை இழுத்து நன்ருக மூடிவிட்டு, "தூங்குங்கள், அப்பா; கவலைப்படாமல் தூங்குங்கள். நீங்கள் சற்றுமுன் சொன் னதுபோல் உங்கள் மகள் ஒருபோதும் துரோகி யாகமாட்டாள். அந்த நிம்மதி யுடன் நன்ருகத் தூங்குங்கள்" என்று கூறி விட்டு வெளியே வந்தாள்.


அவளது ஆபீஸ் அறையில் பெட்ரோ மாக்ஸ் விளக்கு இன்னும் எரிந்துகொண் டிருந்தது. வீட்டு வெளிவாசல் கதவை மூடித் தாழிட்டுவிட்டு வந்து மேசை விளக்கு ஒன்றை ஏற்றி வைத்துக் கொண்டு, அவள் முதலில் பெட்ரோ மாக்ஸ் விளக்கை அணைத்தாள். பிறகு மேசையின்இழுப்புஅறையிலிருந்துகாகித மும் பேனுவும எடுத்துக்கொண்டு கடிதம் எழுத ஆரம்பித்தாள். கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாயிற்று, அவள் அக்கடிதத்தை எழுதி முடிக்க. அப்படி ஒன்றும் அது நீண்ட கடிதமாகவும் இருக்கவில்லை. சுமார் பதினைந்து வரிகளே அதில் எழுதப்பட் டிருந்தன. ஆனுல் எத்தகைய பதினைந்து வரிகள் அவை!

கடிதத்தை எழுதி முடித்ததும் வீணு மீண்டும் ஒருதடவை படித்துப் பார்த் தாள். அது திருப்தியாக அமைந்திருந் ததை அவள் முகத்தில் நிலவிய நிறைவின் சின்னம் காட்டியது. வீணு அதை மடித்துக் கையில் எடுத்துக்கொண்டு சுந்தரம் படுத்திருந்த தாழ்வாரத்துக்கு வந்தாள். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவன் கட்டிலின் அருகே உத்தரத்திலிருந்து தொங்கிய கம்பி ஒன்றில் ஹரிக்கேன் விளக்கு பிரகாசமாக எரிந்துகொண் டிருந்தது. அவள் அதன் திரியைத் தாழ்த்தி ஒளியைச் சிறிதாக்கிஞள். கட்டிலை ஒட்டி 'டீபாய்' ஒன்றில் சுந்தரத்துக்குக் குடிப்ப தற்காக ஒரு மண் கூசாவில் தண்ணீர் வைக்கப்பட் டிருந்தது. பக்கத்தில் கண்ணுடி தம்ளர் ஒன்றும் இருந்தது. வீணு, தான் கொண்டு வந்த கடிதத்தை அந்தக் கண்ணுடித் தம்ளருக்கு அடியில் வைத்து விட்டுச் சிறிதுநேரம் உறங்கிக் கொண்டிருந்த சுந்தரத்தின் முகத்தை அந்த மங்கிய விளக்கொளியில் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின் ருள். அந்தச் சிறிது நேரத்துக்குள் அவள் உள்ளத்தில் மேலே மேலே எழும்பிக் கொண்டிருந்த எண்ண அலைகளை யாரால் அளவிட முடியும்? நெடுமூச்சு ஒன்றைச் சிந்திவிட்டு மெதுவாக அங்கிருந்து அடுக் களைக்கு வந்தாள் வீணு.

அடுக்களையில் சச்சிதானந்தமும் நல்ல தூக்கத்தில்தான் இருந்தார். அவர் அறையிலும் ஹரிக்கேன் விளக்கு ஒன்று பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. வீணு அதையும் சிறிதாக்கி விட்டுத் தந் தையின் கட்டிலை நெருங்கிஞள். ஏனே தெரியாது, அவளை அறியாமலே கண்கள் சட்டென்று பெருக்கெடுத்தன. வீணு சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத் துக் கொண்டாள். ஆயினும் துடைக்கத் துடைக்க அது பெருக்கெடுத்தது. அதை நிறுத்துவது கடினம் என்று அவளுக்கே தோன்றியது போலும்! அவள் சட் டென்று தந்தையின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அடுக்களையிலிருந்து வெளியேறி ஆபீஸ் அறைக்குத் திரும்பி வந்தாள். ஓர் அரை மணி நேரம் அவள் மேசைமீது தலையைச் சாய்த்தவாறு படுத்திருந்தாள். பிறகு திடீரென்று வெறி கொண்டவள் போல் எழுந்தாள். மேசையின் இழுப் பறையிலிருந்த டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு ஒரே பாய்ச்சலாக முன்னறை யிலிருந்த மருந்து அலமாரிக்குச் சென் ருள்; அதைத் திறந்தாள். அதன் மேல் தட்டில் வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்த மருந்து சீசாக்களிடையே யிருந்து, கண்ணுடி மூடியிடப்பட்டிருந்த ஆரஞ்சு நிறச் சீசா ஒன்றை எடுத்தாள். அதன்மீது ஒட்டப்பட்டிருந்த லேபிளைப் பாட்டரி விளக்கின் ஒளியில் படித்தாள். அதில், "ஸைனைட்-கொடிய விஷம்" என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்த வீணுவின் அதரங்களில் ஓர் ஏள னச் சிரிப்பு மிதந்தது. "இது என்வரை யில் விஷமல்ல; அமுதம்" என்று அவள் வாய் முணுமுணுத்தது. (தொடரும்)


ப்ரூக் பாண்ட் தேயிலை
BROOKE BOND
"KORA" DUST
TEA
FINEST TEA
பெரும்பாலானோர்
பிரியமாய்ப்
பருகுவது


ஸிம்ஸன் கட்டும் பாடிகள்




ஏன் விசேஷமாக விரும்பப்படுகின்றன ?

ஏனெனில் . . .

* ★ எவ்வித உலோகத்திலும் போக்குவரத்துக்கான பாடிகளை அமைப்பதில் **ஸிம்ஸன்** விசேஷ திறமை படைத்தவர்கள்.
* ★ ஒவ்வொருவரின் தேவைகளுக்கு ஏற்றபடி ரஸ்தா போக்குவரத்துக்கான பாடிகள் நிர்மாணிப்பதில் **ஸிம்ஸன்** முதன்மையானவர்கள்; தற்போதும் முன்னணியில் நிற்கிறார்கள்.
* ★ வண்டிகள் கட்டுவதில், கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலான முதிர்ந்த அனுபவத்தின் பின்னணியிலே, **ஸிம்ஸன்** வேலைப்பாடு அமைந்துள்ளது.
* ★ **ஸிம்ஸன்**ஸ்தாபனத்தின் இயந்திரங்களும் அதன் உபகரணங்களும் எப்பொழுதுமே நவீன சாதனங்களுடன் கூடியவை.
* ★ பாடிகள் அமைப்பு, வேலைப்பாடு இவைகளின் அபிவிருத்தியைப்பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியின் பலனாக, **ஸிம்ஸ**னால் நிர்மாணிக்கப்படும் பாடிகள் தோற்றத்திலும், சேவையின் திறமையிலும், நீடித்த உழைப்பிலும் முன்னணியில் இருக்கின்றன.







'ஷாலிமார்'

விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க எண்ணிக் காஷ்மீரத்துக்குச் சென்ற நான் இப்படி ஒரு சிக்கலில் அகப்பட்டுக் கொள்வேன் என்று கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை. ஸ்ரீநகரிலிருந்து குல் மார்க்குக்குச் சென்று திரும்பும் போதுதான் அந்தப் பயங்கரச் சம்பவம் நிகழ்ந்தது.

குல்மார்க்கை அடைய நான் ஏறிக் கொண்டிருந்த மெர்ஸிடெஸ்—பென்ஸ் பஸ் மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்தது. எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்த சுபாஷை (பெயரைப் பின்னால் தெரிந்து கொண்டேன்) அப்போதுதான் முதன் முதலாகப் பார்த்தேன். பிரபல சினிமா நடிகர் சுரன்திலாவைத் தெரியுமல்லவா? சுபாஷ் பார்ப்பதற்கு ஏறக் குறைய அவரைப் போலவேதான் இருந்தான். பால் வடியும் வட்ட வடிவமான முகம்; எடுப்பான அரும்பு மீசை; கதுப்புக் கன்னங்கள்; அகன்ற மார்பு; திரண்ட தோள்கள்; ஒட்டிய வயிறு. ஒரு முறை பார்த்து விட்டால் மனத்தை விட்டு மறையாத அழகு உருவம். தூக்கிவாரி விட்டிருந்த கேசம் பஸ் செல்லும் வேகத்தில் வீசிய காற்றினால் கலைந்து நெற்றியில் புரண்டது.


வெள்ளை வெளேரென்ற கால்சராயும், சாம்பல் நிறத்தில் ஒரு முழுக் கைச் சட்டையும் அணிந்திருந்தான். கழுத்தில் கண்ணைப் பறிக்கும் மஞ்சள் நிறத்தில் ஒரு பட்டுக் கைக் குட்டையை அலட்சியமாகச் சுற்றியிருந்தான். நீல நிறத்தில் ஒரு ஸாக்ஸும் பளபளக்கும் பூட்ஸ்களும் அணிந்திருந்தான். அவன் மடி மீது தூக்கத்தில் ஸ்மரணையற்று விழுந்து கிடந்தது ஒரு கரம்: அதன் விரல் ஒன்றை அலங்கரித்த மோதிரம் தற்செயலாக என் கவனத்தைக் கவர்ந்தது. ஒரு பெண்ணின் சின்னஞ் சிறிய உருவம் மோதிரத்திலிருந்து என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

டாங்மார்க்கில் வந்து பஸ் 'டாண்'ணென்று நின்றுவிட்டது. அதற்கு மேல் கரடு முரடான மலைப் பாதையில் ஏறிச் சென்று குல்மார்க்கை அடைய ஏராளமான குதிரைக் குட்டிகள் இருந்தன. சுபாஷைத் தட்டி எழுப்பினேன். ஏதோ சபித்துக் கொண்டே எழுந்தான் அவன். வாயைத் திறந்ததும் 'குப்' பென்ற துர்நாற்றம் மூக்கைத் துளைத்தது. அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டு வந்ததன் காரணம் இப்போது புரிந்து விட்டது எனக்கு. பேசாமல் பஸ்ஸிலிருந்து இறங்கிப் போய் விட்டேன்.

ஒரு கோடாவாலாவைப் பிடித்து அவன் குதிரைக் குட்டியின் மீது தாவி ஏறினேன். அவ்வளவுதான்; அடுத்த கணம் மறுபக்கத்தில் தரையில் புளி மூட்டை போல் விழுந்து கிடந்தேன். குபீரென்ற சிரிப்பொலி கேட்டது. பின் பக்கத்தில் புழுதியைத் தட்டிக் கொண்டே எழுந்து பார்த்தேன். ரொம்பப் பழக்கமுள்ளவனைப் போல் ஒரு குதிரை மீது அநாயாசமாக ஏறி உட்கார்ந்து கொண்டிருந்த சுபாஷ் என்னைப் பார்த்து 'இடி இடி' யென்று சிரித்தான்.

முகத்தில் அசடு வழிய மறுபடியும் குதிரை மீது ஏறினேன். இந்த முறை கோடாவாலா என்னையும் குதிரையையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மெல்ல ஏற்றி விட்டான்.

அடக்க மாட்டாது வுஞகச் சிரித்துக் கொண்டே தன் குதிரையை ஒரு தட்டுத் தட்டினன் சுபாஷ். சில விநாடிகளில் அவனை



கி. ராஜேந்திரன்



யும் பார்க்க முடியவில்லை; அவன் சிரிப்பொலியையும் கேட்க முடியவில்லை.

கோடாவாலா என் குதிரையின் லகானைத் தானே பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல மலை மீது ஏற்றிச் சென்ருன். வழியில் பாதையோரமாகத் தென்பட்ட அதளபாதாளமான பள்ளத்தாக்குகள் என் வயிற்றைக் கலக்கின. எந்த விளுடியில் குதிரை மிரண்டு அதற்குள் பாய்ந்து விடுமோ என்று எனக்குக் குலைநடுக்கம் ஏற்பட்டது.

''நம்மை விடக் குதிரைக்கு மூளை இருக்கிறது ஸாப்! பள்ளத்தாக்கில் போய் விழுந்து விடுமா என்ன?'' என்று கேட்டு எனக்குத் தைரிய மூட்டினுன் கோடாவாலா.

குல்மார்க்கை அடைவதற்குள்ளாகவே உடம்பெல்லாம் வலி கண்டு விட்டது. அதற்கும் மேலே கிலன்மார்குக்குச் சென்ருல் பனிக்கட்டியைப் பார்க்கலாம் என்று ஆசை காட்டினுன் கோடாவாலா. கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொண்டு மறுபடியும் கிளம்பினேன். திடுதிப்பென்று அப்போது சுபாஷ் தன் குதிரையுடன் தோன்றினுன். ''இன்னும் மேலே, கிலன்மார்குக்குப் போகிறீர்களா என்ன?'' என்று கேட்டான்.

''ஆமாம்!'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்னேன். அவனிடம் பேசவே எனக்குப் பிடிக்கவில்லை.

''நீங்கள் வரவில்லையா ஸாப்?'' என்று சுபாஷைப் பார்த்துக் கேட்டான் கோடாவாலா. ''ரொம்பக் குஷியாக இருக்கும்.''

''இல்லை; எனக்கு இங்கேயே கொஞ்சம் வேலை இருக்கிறது.'' என்ருன் சுபாஷ்.

என்ன வேலை என்பது எனக்குத் தெரியும். அவன் தோளிலிருந்து தொங்கிய 'பிளாஸ்'கில் என்ன இருந்தது என்பதும் தெரியும்.

குதிரை நகர ஆரம்பித்தது.

2

10,500 அடி உயரத்தில் வெள்ளிப் பனி மலைகளில் வேண்டிய மட்டும் உலவிய உற்சாகத்தில் அலுப்புத் தெரியாமல் கீழே இறங்கி வந்தேன். குல்மார்க்கை அடைந்ததும், சுபாஷின் நினைவு வந்தது. இதற்குள் அவன் கீழே, டாங்மார்குக்கே போய்ச் சேர்ந்திருப்பான் என்று எண்ணிக் கொண்டு தொடர்ந்து கீழே இறங்கிச் சென்றேன். பாதி தூரம் கடந்திருப்பேனே என்னவோ. ஒரு பெரிய கூட்டம் பாதையை அடைத்து நின்று கொண்டு கசமுசவென்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

'என்ன விஷயம்?'' என்று கோடாவாலாவைக் கேட்டேன். அவன் விசாரித்துக் கொண்டு வந்தான். யாரோ மலைச் சரிவில் விழுந்துவிட்டார்களாம். போலீஸார் பள்ளத்தாக்கில் மெல்ல இறங்கிச் சடலத்தை மேலே தூக்கிக்கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்களாம்.

குதிரையிலிருந்து இறங்கிப் பாதையின் விளிம்புக்குச் சென்றேன். உள்ளூர்வாசிகளின் உதவியுடன் போலீஸ்காரர்கள் சுமார் பத்துப் பன்னிரண்டு பேர்கள் இறந்தவனின் உடலை மேலே தூக்கிவர முயன்று கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தினரிடையே சற்று இடைவெளி ஏற்பட்டபோது இறந்து போனவனை என்னுல் ஒரு கணம் பார்க்க முடிந்தது.

எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் கீழே விழுந்துவிடாமல் இருக்க ஒரு மரக்கிளையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன்.

பாதையில், சுபாஷைக் கிடத்தினுர்கள். அவனைப் பற்றி யாருக்காவது ஏதாவது தெரியுமா என்று சுற்றிலும் கூட இருந்தவர்களைக் கேட்டார்கள்.

''எனக்குத் தெரியுமே! பஸ்ஸில் எனக்குப் பக்கத்தில்தான் உட்கார்ந்து கொண்டு வந்தான். 'தண்ணி' போடும் பழக்கம் உண்டு போலிருக்கிறது. அரை மயக்கத்தில் குதிரையைப் பாதை ஓரமாகப் பள்ளத்தாக்குக்கு அருகில் ஓட்டிக் கொண்டு சென்றிருப்பான். அது மிரண்டுபோய் அவனைத் தூக்கி அடித்து விட்டுத் தான் தப்பித்துக்கொண்டது. குதிரை அறிவுள்ள பிராணியல்லவா? அவன் கீழே விழுந்து உயிரை விட நினைத்தாலும் அது பள்ளத்தாக்கில் விழச் சம்மதிக்குமா?'' மலைமீது ஏறும்போது கோடாவாலா என்னிடம் கூறியதில் கொஞ்சம் கைச் சரக்கும் சேர்த்துச் சொன்னேன் நான்.

என்னுடைய அதிகப்பிரசங்கித்தனம் போலீஸாருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் துப்பறிந்து முடிவு செய்ய வேண்டிய விஷயங்களையெல்லாம் நானே கூறிக்கொண்டு போனதால் தானே என்னவோ மேலும் கீழுமாக என்னைப் பார்த்து விழித்தார்கள்.

'நீங்கள் யார்?'' என்று ஒரு போலீஸ் அதிகாரி கேட்டார்.

சுபாஷ் ஏறி வந்த குதிரை ஏதோ மாபெரும் குற்றத்தைச் செய்துவிட்ட நினைப்புடன் சோகமே உருவாக ஆடாமல் அசையாமல் அருகே நின்று கொண்டிருந்தது. அதை மெல்லத் தட்டிக் கொடுத்தபடியே ஒரு 'ஹீரோ' பார்வையை அவர்கள் மீது வீசினேன்.

''நான் ஒரு எழுத்தாளன்'' என்றேன்.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து உதட்டைப் பிதுக்கினுர்கள். தோள்களைக் குலுக்கியபடியே கையை விரித்தார்கள். ''எதற்கும் நீங்கள் எங்களுடன் வருவது நல்லது'' என்ருர் ஒரு போலீஸ் அதிகாரி.

''பேஷாக வருகிறேன். என்னுல் இயன்ற அளவு போலீஸாருக்கு உதவ நான் எப்போதுமே தயார்!''

சுபாஷின் சட்டைப்பைக்குள் கையைவிட்டு அவன் பர்ஸை எடுத்தார்கள். 'ஒபிராய்' ஹோட்டலுக்குப் பணம் கட்டிய ரசீதும் அவன் அறையின் சாவியும் அதில் இருந்தன.

''ஒபிராய் ஹோட்டலில் 7ம் நம்பர் அறையில் தங்கியிருக்கிருன். அங்கு போய்ப் பார்த்தால் அவனைப் பற்றிய விவரங்களெல்லாம்

தெரியும்.'' — என்னுடைய திறமையைக் கண்டு எனக்கே வியப்புண்டாயிற்று!

அப்போதுதான் சுபாஷின் கையைப் பார்த்தேன் நான். ''மோதிரம்! மோதிரம் எங்கே?'' என்று அலறினேன்.

''மோதிரமா? என்ன மோதிரம்?''

''அவன் கையில் அணிந்திருந்த மோதிரத்தைத்தான் சொல்கிறேன். ஒரு அழகிய இளம் பெண்ணின் படம்கூட அதில் பொறிக்கப்பட்டிருந்ததே!''

''கீழே இவன் விழுந்தபோது அது கழன்று எங்கேயாவது உருண்டு ஓடிப் போயிருக்கும். அதை யார் தேடுவது?''

''மோதிரம் எப்படித் தானாகவே கழன்று போகும்? இருக்கவே இருக்காது.''

''மோதிரத்தின் அளவு விரலுக்குப் பெரிதாக இருந்திருக்கும்.''

''இல்லவே இல்லை. நான் அருகில் இருந்து பார்த்தேனே பிடிப்பாகத்தான் இருந்தது.''

அனாவசியமாகப் புது பிரச்னையைக் கிளப்புவதாக நினைத்தார்களோ என்னவோ. அனைவருமாகச் சேர்ந்துகொண்டு என்னை முறைத்துப் பார்த்தார்கள். நான் அடங்கிப் போய் விட்டேன், அப்போதைக்கு.

சில போலீஸாரிடம் சுபாஷை ஒப்படைத்து விட்டு, வேறு சிலர் என்னையும் இழுத்துக் கொண்டு சுபாஷ் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றார்கள். அவன் அறையில் முதலில் என் கண்களுக்குத் தென்பட்டது அந்தப் பெண்ணின் படம்தான். அழகிய தங்க 'பிரேம்' போட்டு மேஜை மீது வைத்திருந்தான்.

''அதோ பாருங்கள் அவன் காதலியை! இதே படம்தான் மோதிரத்திலும் பொறிக்கப்பட்டிருந்தது.''

'இவனை ஏன் அழைத்துக் கொண்டு வந்தோம்' என்று அவர்கள் வருந்தியது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. நானும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அவர்களுக்காகவே தெரியவில்லையானால் நான் சொல்லித் தானே தெரிய வேண்டும்?


மேஜை மீதிருந்த ஒரு கடிதம் இதற்குள் என் கவனத்தைக் கவர்ந்தது. ''உங்கள் விருப்பப்படியே அவசியம் 'ஷாலிமா'ரில் உங்களைச் சந்திக்கிறேன் — சித்திரா''

''இதோ பாருங்கள். அவன் காதலி எழுதிய கடிதம். இருவரும் காஷ்மீரத்தில் 'ஷாலிமார்' தோட்டத்தில் சந்திப்பதாகத் திட்டமிட்டு வந்திருக்கிறார்கள். 'ஷாலிமார்' என்றாலே காதலின் இருப்பிடம் என்றுதானே பொருள்? வந்த இடத்தில் இப்படி ஒரு பரிதாபகரமான விபத்து. ஐயோ பாவம்!''

கடிதத்தின் மேல் இருந்த விலாசத்தையும் ஓரக் கண்களால் பார்த்துக் கொண்டேன். நெ. 17, சித்தரஞ்சன் ரோடு, கல்கத்தா—13.

மேஜை மீது ஒரு 'இன்ஜெக்ஷன்' ஊசியும் இருந்தது. ''அவன் ஏதோ வியாதியால் அவதிப்பட்டிருக்கிறான். அடிக்கடி இன்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள நேர்வதால் டாக்டரிடம் போகாமல் தானாகவே ஊசி போட்டுக் கொள்ளப் பழகியிருக்கிறான். அநேகமாக 'டயபெடி'ஸாக இருக்கும். 'இன்ஸுலின்' இருக்கிறதா, பாருங்கள்'' என்றேன்.

போலீஸ் அதிகாரியின் முகத்தில் முதன் முறையாகப் புன்னகை அரும்பியது. ''ஐயா,



எழுத்தாளரே! இந்தத் தடவை நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள்: அவன் நீரிழிவுக்காக இன்ஸுலின் போட்டுக் கொள்பவனில்லை. போதை அளிக்க மார்பியா போட்டுக் கொள்பவன்'' என்று கூறியபடியே 'மார்பியா' அடங்கிய பெட்டியை எனக்குக் காண்பித்தார். இந்தக் கொடிய பழக்கம் சிலருக்கு உண்டு என்று கேள்விப்பட்டிருந்தேன். இருந்தாலும் சுபாஷைக் குறித்து இப்படி அறிந்ததும் எனக்கு மனச் சங்கடமாகவும் அருவருப்பாகவும் இருந்தது. குடிப் பழக்கம் போதாதென்று இது வேறேயா? அந்தப் பெண்ணின் படத்தை இன்னொரு முறை பார்த்தேன். இப்படிப் பட்ட அழகிக்கு இவ்வளவு கொடிய பழக்கங்களைக் கொண்ட காதலனா? அவளுக்காக என் மனம் அழுதது.

நான் வாயடைத்துப் போய் நிற்கும் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு என்னைப் போலீஸார் அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

3

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் காஷ்மீரில் சுமார் இரண்டு வாரங்கள் தங்கி இருந்தேன். பார்க்க வேண்டிய காட்சிகளை யெல்லாம் பார்த்து முடித்தேன். 'ஷிகாரா'வில் சோம்பேறித்தனமாகப் படுத்துக் கொண்டு ஏரிகளை யெல்லாம் சுற்றி வந்தேன். பகல்காமில் ஒரு பகலைக் கழித்தேன். சங்கராச்சாரியார் மலை மீது ஏறி வணங்கித் திரும்புவதற்குள் கால்கள் இரண்டும் 'கோவிந்தா'வாகி விட்டன. ஆப்பிள்களையும் செர்ரிகளையும் வயிறு முட்டத் தின்று வயிற்றுவலியாலும் சங்கடப்பட்டேன். போட்டுலுவுலில் தங்கப் போய் மூக்கைப் பிடித்துக் கொண்டு அவசரம் அவசரமாக வெளியேறினேன். அங்குள்ள பல தோட்டங்களிலும் அழகைத் தேடி அலைந்தேன். இன்னும் பல ஏமாற்றங்களுக்கு உள்ளான பிறகு காஷ்மீரம் எனக்கு அலுத்து விட்டது.

அப்போதுதான் மறுபடியும் சுபாஷின் நினைவும் வந்தது. கூடவே அவன் அறையில் கண்ட புகைப்படமும் என் கண் எதிரே நின்றது. குறுகுறுப்பான இரண்டு கண்கள் குறும்புத்தனமாகச் சிரித்தன. சுருட்டையான கூந்தலின் ஒரு பகுதி கட்டுக்கடங்காமல் காதருகே நெளிந்தது. நெற்றியின் மையத்தில் நயாபைசா அளவுக்கு ஒரு பொட்டு. விளையாட்டுக் கோபத்தில் உதடுகள் குவிந்திருந்தாலும் உள்ளத்துக் குதூகலத்தை விழிக் கோணத்தின் குறுநகையில் காண முடிந்தது. அதே படம்தான் சுபாஷ் அணிந்திருந்த மோதிரத்திலும் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் மோதிரம் எங்கே? அது எப்படி மாயமாய் மறைந்து போயிற்று? ஷாலிமாரில் சந்திப்பதாகச் சித்திரா அவனுக்கு வாக்களித்திருந்தாளே; அது என்னவாயிற்று? சந்தித்துப் பேசினார்களா இல்லையா? காதலன் இறந்த பிறகு அவள் நிலை என்ன?

எத்தனை எத்தனையோ கேள்விகள் உள்ளத்தில் எழுந்து துளைத்தெடுத்தன. எழுத்தாளனாகிய என்னால் விடைகளைத் தெரிந்து கொள்ளாமல் சும்மா இருக்க முடியுமா? அந்தக் கடிதத்தில் இருந்த விலாசத்தை மறந்து விடவில்லை நான். மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பினேன் கல்கத்தாவுக்கு.

சித்திராவைப் பேச வைப்பது சுலபமாக இல்லை. ஆனால் எழுத்தாளனிடம் யார்தான் தப்பித்துக் கொள்ள முடியும்? கேள்விமேல் கேள்வி கேட்டு அவள் வாயைக் கிளறினேன்.

கோடை விடுமுறையின் போது ஒரு சமயம் கல்லூரி மாணவிகள் பம்பாய்க்கு உல்லாசப் பிரயாணம் சென்றார்கள். பம்பாயில் ஒரு விசைப் படகில் ஏறிக் கொண்டு கடலைக் கடந்து சற்றுத் தூரத்தில் இருந்த எலிபெண்டா குகைக்குச் சென்றார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து இன்னொரு படகும் வந்தது. அதில் பம்பாயைச் சேர்ந்த சில மாணவர்கள் இருந்தார்கள். எலிபெண்டா தீவுகளில் 'பிக்னிக்' சாப்பிடப் போய்க் கொண்டிருந்தார்கள். தங்களுக்கு முன்னால் போகும் படகில் மாணவிகளின் கூட்டம் இருப்பதைப் பார்த்ததும், அவர்களுக்குக் 'குஷி' பிறந்து விட்டது. ஒரே ஆர்ப்பாட்டமும் அமர்க்களமுமாக இருந்தது.

தீவிலே மாணவிகள் குகைச் சிற்பங்களைப் பார்த்து ரசித்தார்கள். மாணவர்கள் மாணவிகளைப் பார்த்து அனுபவித்தார்கள். அதிலும் ஒரு மாணவன் தன்னையே முறைத்து முறைத்துப் பார்ப்பதும் தன்னைச் சுட்டிக்காட்டியும் நண்பர்களிடம் பேசுவதைக் கண்ட சித்திராவுக்கு ஒரே கோபமாக இருந்தது. இருந்தாலும் அடிக்கடி அவள் கண்கள் அவன் பக்கம் திரும்பத் தவற வில்லை. அவன் இன்னமும் தன்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு நிம்மதியடைந்தாள்!

இதனால் இன்னும் கொஞ்சம் துணிவு பெற்று விட்டான் சுபாஷ். தாங்கள் உண்பதற்காகக் கொண்டு வந்திருந்த பலகாரங்களில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு போய் அவளிடம் நீட்டினான். ''பம்பாய்க் கல்லூரி மாணவர்களின் சார்பிலே கல்கத்தாவிலிருந்து வந்திருக்கும் கல்லூரி மாணவிகளை வரவேற்கிறேன்'' என்று ஒரு போடு போட்டு, தட்டு நிறைய லட்டுகளை அவள் கரங்களில் திணித்தான். அவனுடைய துணிச்சலைக் கண்டு மற்ற மாணவிகள் பிரமித்து நிற்க, கூட வந்திருந்த 'புரொபஸர்' அம்மாள் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்க, சித்திரா புன்னகையுடன் நன்றி தெரிவித்து அதைப் பெற்றுக் கொண்டாள். மாணவிகள் கண் சிமிட்டி அவளைக் கேலி செய்தனர். பேச்சுவாக்கில் அவள் பெயரையும் கல்லூரியையும் வகுப்பையும் கூடத் தெரிந்து கொண்டான் சுபாஷ். இதற்குள் சுபாஷுடன் வந்த மற்ற மாணவர்களும் அங்கு கூடி விடவே 'புரொபஸர்' அம்மாள் பயந்து போய் மாணவிகளை விரட்டிக் கொண்டு போய்ச் சேர்ந்தாள்.

தன் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டுபண்ணி யிருக்கிறது அந்தச் சம்பவம் என்பதைச் சித்திரா அப்போது உணரவில்லை. சிவந்த முகத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்து இமைகளின் படபடப்பில் விடை பெற்றுச் சென்ற சித்திராவைச் சுபாஷினால் மறக்க முடியவில்லை. கல்கத்தாவுக்குத் திரும்

பிய சில நாட்களில் கல்லூரி விலாசத்துக்கு ஒரு கடிதம் வந்தது சித்திராவுக்கு. தயங்கித் தயங்கிப் பதில் எழுதினுள் சித்திரா.

அதன் பின்னர் எத்தனையோ கடிதங்கள் பரிமாறிக் கொண்டார்கள். மற்ற மாணவி களிடமிருந்து இதை மறைக்க முடியுமா? அவர்களிடையே 'கசமுச' வென்று பேச்சு எழுந்து 'பிரின்ஸிபா'லுக்கும் விஷயம் எட்டி விட்டது. சித்திராவின் பெற்றேர்களைக் கூப்பிட்டு அந்த அம்மாள் எச்சரித்தாள். "அதனுல் என்ன படிப்பு? முடிந்ததும் கல்யாணத்தை நடத்தி வைத்து விட்டால் போகிறது" என்று தயங்காமல் சித்திராவின் தந்தை சொன்னதும் பிரின்ஸிபாலுக்கு ரொம்பவும் ஏமாற்றமாகப் போயிற்று.

இப்படிக் குதூகலமாகச் சென்று கொண் டிருக்கும் காதலுக்குக் குறுக்கே வந்து நின்ருன் மக்கன்ஜி. சித்திராவின் தகப்பனர் அவனி டம் ஏராளமாகக் கடன்பட்டிருந்தார். மக்கன்ஜி பணத்தைத் திரும்பக் கேட்கவில்லை. சித்திராவைத்தான் கேட்டான். அவனு டைய கோரிக்கையை மீறிச் சித்திராவின் கல்யாணப் பேச்சு ஆரம்பமாவதைக் கண்ட தும் சீறினன். கடன்பட்டவர் கெஞ்சினுர். ஆனுல் கொடுத்தவர் மனம் கரையவில்லை.

சித்திரா எழுதிய அடுத்த கடிதம் அவ ளுடைய கண்ணீர்த் துளிகளால் நனைந்து சுபா ஷுக்குப் போய்ச் சேர்ந்தது. நிலைமைச் சமாளிக்க வழி என்ன என்று யோசித்தான் சுபாஷ். அவ்வளவு பெரியதொகை எப்படித் திரட்ட முடியும்? எங்கே காண முடியும்?

குதிரைப் பந்தயத்துக்குப் போனன் சுபாஷ். பணத்தைக் காணவும் முடிந்தது: அதிர்ஷ்டம் இருந்து அவனிடம் சேரவும் செய்தது. சேர்ந்ததை யெல்லாம் ஒன்று திரட்டி ஒன்ப தாவது எண்ணில் கட்டினன். ஒன்றுக்குப் பத்தாகத் திரும்பி வந்தது. மறுபடியும் மறு படியும் திரட்டித் திரட்டிக் கட்டினன். இரண்டு இரண்டு வந்து குவிந்தது.

"மக்கன்ஜிக்குக் கொடுக்கப் பணம் சேர்த்து விட்டேன். உடனே வரவும்" என்று தந்தி கொடுத்தான் சித்திராவின் அப்பாவுக்கு. அவர் வந்தார். ஆனுல் அதற்குள் பணமெல் லாம் பாழாகி விட்டது. சூதாட்டத்தில் தான் ஜெயித்து விட்டதாக நினைத்தான் சுபாஷ். உண்மையில் சூதாட்டம் அவனை ஜெயித்து விட்டது. சேர்ந்த பணத்தையெல் லாம் அதிலேயே தொலைத்து விட்டுச் சித்திரா வின் அப்பா வந்தபோது கையை விரித்தான்.

அப்புறமும் சும்மா இருக்க முடியவில்லை. கடன் வாங்கிக் கட்டினன். பரிகள் ஓடின. பணமும் பறி போயிற்று. ஏமாற்றம் நெஞ் சைப் பிளந்தது! கைகள் பரபரத்தன. ரத்தம் கொதித்தது. மூளையே கலங்ியது. செய்வதறி யாது தவித்தான். குதிரைப் பந்தயத்துக்கு அவன் போக வேண்டும்; போயே ஆக வேண்டும்.

திருடினன் சுபாஷ். தன்னுடைய சொந்த வீட்டிலிருந்தே தன்னைப் பெற்று வளர்த்த தாயாரிடமிருந்தே திருடினன். பணமாகத் திருடினன்: நகையாகத் திருடினன். குதி ரைகள் ஓடின; பணமும் ஓடிப் போயிற்று.

கவலையை நீக்க, ஏமாற்றத்தை மறைக்க, சூதாட்ட வெறியை மறக்கக் குடித்தான். அதற்கேற்ற நண்பர்களும் சேர்ந்து கொண் டார்கள்; குடியைக் கெடுத்தார்கள். கெட்ட பழக்கங்கள் ஒவ்வொன்றுகச் சேரச் சேர மன வேதனைகள் குறைவது போலத் தோன்றின. உடல் வேதனைகள் தலைகாட்டத் தொடங் கின. மார்பு வலி என்றதும், டாக்டர் வந்து பார்த்தார். ஆஸ்பத்திரியில் பரிசோதனை நடந்தது. புற்றுநோய் என்று தீர்மானித் தார்கள். அதிக நாட்கள் உயிரோடு இருக்க மாட்டான் என்பதை டாக்டர்கள் சொல் லாமல் சொன்னுர்கள்.

சுபாஷுக்குச் சிரிப்பாக இருந்தது. "நான் செத்துப் போய் ரொம்ப நாட்கள் ஆகி விட்டனவே, தெரியாதா உங்களுக்கு" என்று கேட்டான். குதிரைப் பந்தய மைதானத்தில் நுழைந்த அன்றே மனிதனக அவன் வாழ்ந்த வாழ்க்கை முடிவு பெற்று விட்டதாக அவன் எண்ணம்.

கல்கத்தா திரும்பிய சித்திராவின் தந்தை சுபாஷை மறந்து விடுமாறு அவளிடம் கூறினர். "நீ அவனுக்கு அடிமையாக இருக்கலாம். அவன் குதிரைகளுக்கு அடிமையாகியிருக் கிறன்" என்று வாதாடினர். "எனக்கு உயிருள்ள வரையில் நீ அவனை மணக்க முடியாது" என்றார் தீர்மானமாக.

சித்திராவின் கல்யாணப் பத்திரிகையைப் பார்த்த பிறகு சுபாஷின் நோய் அதிகமா யிற்று. சாகவிருக்கும் மகனுக்காகப் பரிதாபப் பட்டார் தந்தை. சாகக் கிடக்கும் அவன், அந்த நினைவை மறக்கவும் கொஞ்சம் கொஞ்ச மாக உயிரைக் குடித்துக் கொண்டிருந்த கொடிய நோயின் வலியை மறைக்கவும், அவரே 'மார்பியா' ஊசிகளும் சாராயப் புட்டி களும் வாங்கித் தர வேண்டியதாயிற்று.

சுபாஷுக்கு ஒரே ஒரு ஆசை. சாகுமுன் சித்திராவைப் பார்த்து விட்டுத்தான் சாக வேண்டும் என்று துடித்தான். எங்கே சந்திப் பது? அவளைக் கல்யாணம் செய்து கொண்டு காஷ்மீருக்கு 'ஹனிமூன்' போவதென்று தீர்மானித்திருந்தது அவனுக்கு நினைவு வந்தது. தன் பிறந்த நாளையாவது அவளுடன் அங்கு கழிக்க விரும்பினுன் அவன். சாகக் கிடக்கும் தனது ஒரே வேண்டுகோளை, கடைசி விருப்பத்தைக் கண்டிப்பாக நிறைவேற்றி வைக்குமாறு சித்திராவை ஒரு கடிதத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அவளும் அவன் விருப்பப்படியே ஸ்ரீநகரில், ஷாலிமார் தோட்டத்தில் அவனைச் சந்திப்பதாகப் பதில் எழுதினுள்.

"அந்தக் கடிதத்தை நான் சுபாஷ் தங்கி யிருந்த ஓட்டல் அறையில் பார்த்தேன்" என்றேன் நான். "சுபாஷின் கடைசி விருப்பம் நிறைவேறியதல்லவா? அவனை ஷாலிமாரில் சந்தித்தீர்களல்லவா?"

"ஆமாம்; சந்தித்தேன்!"

"அதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லி விடுங்கள். கதை முற்றுப் பெற்றுவிடும்."

சித்திரா சில நிமிஷங்கள் யோசித்தாள்.

"ஷாலிமாரில் ரொம்ப நேரம் அவருக் காகக் காத்திருந்தேன். இலேசில் வருகிற வழியாக இல்லை. காக்க வைத்ததற்காக நான் கோபப்படவில்லை. 'எனக்கு இதுவும்

வேண்டும்; இன்னமும் வேண்டும்' என்று நான் நினைத்துக் கொண்டேன். இருள் கவியப் போகும் சமயத்தில் ஏமாற்றமும் களைப்பும் ஒன்று சேரத் தோட்டத்தில் புல் வெளியில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தேன்.

அப்போதுதான் சற்றுத் தூரத்தில் அவர் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஏதோ காற்றில் அசைந்தாடி அவர் மெல்ல மிதந்து வருவது போல் எனக்குத் தோன்றியது. ''சித்திரா! என்னை மன்னிப்பாயா?'' என்று அவர் கேட்டது எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலக் கேட்டது. ''நீங்களல்லவா என்னை மன்னிக்க வேண்டும்? இந்த அபாக்கியவதியால்தானே இந்தக் கதியை நீங்கள் அடைந்து விட்டீர்கள்?'' என்றேன். என்னை அறியாமல் கண்ணீர் பெருகிற்று.

''நான் எப்படியாவது தொலைந்து போகிறேன் சித்திரா! உன்னைப் பற்றிச் சொல். சௌக்கியமாக இருக்கிறாயா? உன் கணவர் உன்னிடம் அன்பாக நடந்து கொள்கிறாரா?''

சௌக்கியத்துக்கும் அன்புக்கும் குறைவில்லை என்றதும் அவர் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார். சினார் மரங்களிடையே காற்று புகுந்து செல்லும்போது ஓர் ஓசை கேட்குமே அப்படி ஒலித்தது அவர் மூச்சு.

''துர்நடத்தையும் வியாதியும் பீடித்திருக்கும் என்னை நீ கல்யாணம் செய்து கொள்ளாதது எவ்வளவு நல்லதாகப் போயிற்று. சில நாட்களுக்குள் நீ விதவையாகி இருப்பாய்.'' அவர் வலது கரம் நீண்டு மடிமீது துவண்டு கிடந்த என் வலக் கரத்தைப் பற்றியது. மலர்கள் அசைந்தாடி விரல்களில் உராய்வது போன்றதொரு உணர்ச்சி. என் உடல் சிலிர்த்தது. ''உன் சௌக்கியத்தைத் தெரிந்து கொண்ட நான் இனி நிம்மதியாகச் சாவேன், சித்திரா! என்னைப் பற்றி நீ கொஞ்சம்கூடக் கவலைப்படக் கூடாது. தெரிந்ததா?''

''இல்லை, கவலைப்படவில்லை'' என்று அவருக்கு உறுதியளித்தேன் நான்.

அருகில் இருந்த ஒரு மரத்தை நோக்கி நடந்தார் அவர். அதன் பின்னால் மறைந்து திடுதிப்பென்று போய் விட்டார். 'போய் வருகிறேன்' என்றுகூடச் சொல்லவில்லை.''

சித்திரா நிறுத்தினாள்.

நான் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி விட்டேன். வாசல் வரை சென்றவனுக்குத் திடீரென்று அந்த மோதிரத்தைப் பற்றிய நினைவு வந்தது. ''சித்திரா! உன் உருவம் பொறித்திருந்த மோதிரத்தைச் சுபாஷ் அணிந்திருந்தானா?'' என்று கேட்டேன்.

''ஆமாம், மறந்தே விட்டேன்! எங்களுக்குள் கடிதப் போக்குவரத்து நடந்தபோது என் புகைப்படம் ஒன்றைப் பம்பாயில் இருந்த அவருக்கு அனுப்பியிருந்தேன். அதே உருவத்தை மோதிரத்தில் பொறித்து அவர் அணிந்து கொண்டிருந்தார். அன்று ஷாலிமாரில் 'இனிமேல் இதை நான் அணிந்து கொள்வது தவறு' என்று கூறி என்னிடம் அதைக் கழற்றிக் கொடுத்து விட்டார். நானும் அதை அணிந்து கொள்ள விரும்பவில்லை. சற்று இருங்கள்...''

சித்திரா வீட்டுக்குள் சென்று சில விநாடிகளில் திரும்பி வந்தாள். ''இதோ பாருங்கள்'' அவள் கையில் இருந்த மோதிரப் பெட்டி திறந்து கொண்டது. சுபாஷின் விரலில் முன்பொரு நாள் பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது நான் கண்ட அதே மோதிரம்!

நான் இப்படியும் அப்படியுமாகத் தலையை அசைத்தேன். ''எனக்குப் புரியவில்லை; புரியவே இல்லை'' என்று முணுமுணுத்தேன்.

மோதிரத்தைச் சித்திராவிடம் அவன் கொடுத்திருந்தால் பஸ்ஸில் சென்றபோது அவன் கைவிரலில் அதை நான் எப்படிப் பார்த்திருக்க முடியும்? அவன் கையில் நான் பார்த்த மோதிரம் அவன் உயிர் துறந்ததும் எப்படி மாயமாய் மறைந்து போயிருக்க முடியும்? பின்னர் அதே மோதிரம் சித்திராவிடம் எப்படி வந்திருக்க முடியும்?

நான் முணுமுணுத்தது சித்திராவின் காதில் விழுந்திருக்க வேண்டும். அவள் நெற்றி சுருங்க, ''என்ன புரியவில்லை?'' என்றாள்.

அதற்குப் பதில் கூறாமல், ''சித்திரா! இன்னும் ஒரே ஒரு சந்தேகம். ஷாலிமாரில் நீ சுபாஷை என்றைக்குச் சந்தித்தாய்?'' என்று கேட்டேன்.

''மே 14ந் தேதி!'' — பளிச்சென்று பதில் சொன்னாள் சித்திரா. ''அன்று சுபாஷின் பிறந்த நாள். தன் பிறந்த நாளை என்னுடன் ஷாலிமாரில் கழிப்பதை ஆவலுடன் எதிர்பார்ப்பதாக அவர் எழுதிய கடிதத்தில் கூடக் குறிப்பிட்டிருந்தாரே!''

எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. ஜாகையை அடைந்து என் டயரியைப் பிரித்துப் பார்த்தேன். சந்தேகத்துக்கே இடமில்லை. சுபாஷ் இறந்து போனது நிச்சயமாக மே மாதம் 13ந் தேதிதான்!

அப்படியானால் மே 14-ந்தேதியன்று அவள் சுபாஷை எப்படி ஷாலிமாரில் சந்தித்திருக்க முடியும்? அவள் கூறி வந்ததை மறுபடியும் நினைத்துப் பார்த்தேன். ''காற்றிலே மிதந்து வருவதைப் போல் வந்தார்...எங்கோ கிணற்றிலிருந்து பேசுவது போல் அவர் குரல் கேட்டது...மலர்கள் அசைந்தாடி விரல்களில் உராய்வது போன்றிருந்தது அவர் ஸ்பரிசம்... மரத்துக்குப் பின்னால் மறைந்து 'திடுதிப்' பென்று போய் விட்டார்...''

சித்திராவின் வீட்டுக்குத் திரும்பிச் சென்று, மே 13ந்தேதியே சுபாஷ் இறந்து விட்டான் என்றும் உண்மையில் அவள் ஷாலிமாரில் சுபாஷைக் காணவேயில்லை; அவ்வளவும் அவளுடைய மனப் பிரமைதான், கற்பனைதான் என்றும் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் யோசித்தேன். உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். 'சுபாஷின் கடைசி விருப்பத்தைப் பூர்த்தி செய்த திருப்தியாவது அவனுக்கு இப்போது இருக்கும். அதையும் கெடுத்து விட வேண்டாம்!'

என்ன கேட்கிறீர்கள்? 'வெறும் மனப் பிரமைதான், கற்பனைதான் என்றால் சுபாஷ் அணிந்திருந்த மோதிரம் அவள் கைக்கு எப்படி வந்து சேர்ந்தது?' என்றா?

ஆவி வடிவங்களில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? அப்படியானால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. உங்களுக்கு விஷயம் புரிந்து விட்டது!

எனக்கு நம்பிக்கையில்லை; இன்னமும் புரியவுமில்லை!


இருமலின்
மூலகாரணத்தை
அகற்றுங்கள்
SIROLIN
"ROCHE"
ஸிரோலின்
சாப்பிடுங்கள்
குடும்பத்தினர்
யாவருக்கும்
ஏற்ற
ஔஷதம்
ஸிரோலின் இருமலை நிறுத்து
வதோடு இருமலுக்குக் காரண
மான தீங்கிழைக்கும் கிருமி
களைக் கொல்லவும் செய்கிறது.
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

ஊரடங்கும் வேளை. ஆனால், அந்த ஓர் உள்ளம் மட்டிலும் உறக்கம் பிடிக்காமல் படுக்கையில் சாய்ந்தபடியே சூன்ய வெளியை வெறித்து நோக்கியவாறு கிடந்தது. புகைச் சல் இருமலின் உபாதை தாளாமல் உயிர் போய் உயிர் வந்து கொண்டிருந்தது. படுக்கை கொள்ளாமல் எழுந்து அமர்ந்தார். அவர் பிறகு மெதுவாக எழுந்து, கல்யாண மண்ட பத்தையும் உள்நடையையும் கடந்து சென்று பெரிய அலமாரியை அடைந்தார். அதில் புகைப்படம் ஒன்று காட்சியளித்தது. இமை வலிக்க, விழிகள் நோக அவர் அதையே வைத்த கண் வாங்காமல் நோக்கினார். தலையை உயர்த்தியபோது விலையுயர்ந்த அழகிய பொருள்கள் சில வரிசையாகக் கொலு வீற்றிருந்ததைக் கண்டார் நாச்சியப்பன்.

அப்பொழுது நாள்காட்டியின் ஏடுகள் படபடவென்று காற்றில் பறந்தன.

'தீபாவளி கழிந்து ரொம்ப நாளாகிடுச்சே? இன்னமும் பரிசு எதுவுமே வரலியே?'

நாச்சியப்பன் முதலில் தம்முள் பேசிக் கொண்டார் பிறகு, வாய்விட்டுச் சத்தம் போட்டுச் சொன்னார்; அடுத்தபடியாக, தலைப் பித்தம் கொண்டவர் மாதிரி கத்தினார்.

''முதலாளி!'' என்று சொல்லிய வண்ணம் சமையற்காரன் காசி அங்கு தோன்றினான். நாச்சியப்பனின் இதயக் குரல் மாடிப்படி கடந்து, அவனைக் கையுடன் அழைத்து வந்து விட்டது போலும்!

விளையாட்டுக்குப் பர்மியர் நாடு பகடை ஆகி விட்டது.

ஒருநாள், விளக்குகள் பொருத்தப்பட்ட வேளை, அபாயச் சங்கு எதுவும் ஒலிக்காத தைக் கண்டு, சொந்த ஊர்க்காரரைக் கண்டு பேசிவரப் புறப்பட்டார் நாச்சியப்பன். இருட்டடிப்பானதால், அவரிடம் இருந்த கை விளக்கு கை கொடுத்தது. உதட்டுச் சுருட்டு உடம்புக்குச் சற்றே தெம்பு அளித்தது. ஆனால் அடுத்திருந்த 'பூடாலான்' - ஸ்டேஷன் ரோட்டில் அவர் மறுகி மடங்கிய தருணத் திலே, திடுதிப்பென்று வானம் மின்னிப் பளிச்சிட்டது. அண்டம் அதிர்ந்த வண்ணம் வெடிகுண்டுகள் சிந்திச் சிதறின. மிஞ்சான் நகரமே நாலிமைப்பில் உயிருக்கு மன்றாடும் போது, பாவம் அந்த மனிதர் நாச்சியப்பன் உயிர் ஒடுங்கி, உள்ளம் குலைந்து நின்றதில் வியப்பேதும் இல்லைதானே! இமை மூடி இமை திறக்கும் போதுக்குக்கூட இடைவெளி அமையவில்லை; குண்டு வீச்சு வலுத்தது. கைவிளக்கைப் பயன்படுத்தினார்; அவர் பார்வையில் கூப்பிடு தூரத்தில் இருந்த ஒரு வீடு தென்பட்டது. தேக்குமர வீடு அது. விழுந்தடித்து ஓடினார் அவர்: மரண பயம் அவரின் பிடரியை நெட்டித் தள்ளியது. ஓடிய வேகத்தில் அவர் கதவை உதைத்துக் கொண்டு உள்ளே சாடி விழுந்தார். விழுந்த அவர் எழுந்து நின்றார்; உடல் நடுக்கம் எப்படி ஓய்வு பெறும்? வழிந்த நீரை வழித்துவிடத் தோன்றாமல், பதுமையென நின்று பயம் கப்பிய முகத்துடன் தேம்பிய அந்தப் பெண் ணைப் பார்வையிட்டார் நாச்சியப்பன்.

''இந்த அடைக்கலம் கிடைக்கவில்லையென் றால், நானும் இவ்வளவு நாழிகைக்குள் மண் ணோடு மண்ணாகிப் போயிருப்பேன்!'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார் நாச்சியப்பன்.



மாஸோஹின்

''ஆச்சி வீட்டிலேருந்து பெரிய செட்டியார் வந்திருக்காக!'' என்றான் அவன்.

'' காலையிலேபார்த்துக்கிடலாம்னுசொல்லு. நான் தூங்கப் போறேன் '' என்றவர், அவன் ஊற்றிக் கொடுத்த மருந்தை வயிற்றினுள் கொட்டினார்; கதவுகளைத் தாழிட்டார்; பட்டு மெத்தையில் சாய்ந்தார்; கையிலிருந்த படத் தில் சிரித்த அந்தப் பெண் பாவையைப் பார்த்து முணுமுணுத்தார்: ''மாஸோஹின்!''

ஜப்பானியர்கள் தர்மத்தை அழிக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த அந்த அவல வேளையிலே, அவர்களது அரசியல் சதுரங்க

''எங்கள் கண்கண்ட தெய் வம் புத்தர் நல்லதைத்தான் செய்வார்: ஆனால் அதற்குக் கூட இப்போதுசோதனை ஆரம்ப மாகி விட்டிருக்கிறது. அதர்மம் எவ்வளவு காலம் நீடிக்க முடி யும்?'' என்றாள் அந்தப் பெண்.

பர்மிய மொழியொலி தேய்ந் ததும், நாச்சியப்பன் அங்கு மிங்கும் கூர்ந்து நோக்கினார். அகல் விளக்கின் எதிரில் புத்தர் பிரானின் உருவம் இருந்தது. அவர் கைதொழுதார்; உயிருக்



குப் பாதுகாப்பு தந்ததற்கு நன்றி கூறினார். அப்போது, "அப்பச்சிக்கு ரொம்பவும் முடியாமல் இருந்து வருகிறது. உனக்குக் கல்யாணம் செய்து பார்க்கத் துடிக்கிறாக அப்பச்சி. கானாடுகாத்தான் மு. சுப. வீட்டுப் பெண் சிகப்பி ஆச்சியைப் பார்த்திருக்காக. தகுந்த சம்பந்தம். அங்கேயுந்தான் நிலவரம் சரியில்லையே! ஆனபடியினாலே, உடனே புறப்பட்டு வரவேண்டியது!" என்று வந்திருந்த ஊர்க் கடிதம் நினைவில் மிதந்தது. நாச்சியப்பன் கைகூப்பி விடைபெறும் சமயம், அந்த அழகி அவனுக்கு 'லெப்யே' கொடுத்தாள். அவள் அளித்த தேநீரின் இனிப்பும் முன்பின் முகம் பார்த்திராத அவளது அன்பும் அவருக்கு ருசி தந்தன. பொங்கி மடத்துத் தெருவில் இருக்கும் தம்முடைய சொந்தத் தேக்குமரக் கடை விலாசத்தைச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் அவர். நிலைப்படியைத் தாண்டும்பொழுது அவளுடைய பெயர் என்னவென்று அவர் துணிவுடன் வினவியதற்குக் கிடைத்த பதில் என்ன தெரியுமா?


"மாலோஹின்!"

'ஸ்லவுண்டே' என்பது பர்மாவைப் பொறுத்தவரை மிகவும் புனிதம் மண்டிய ஒரு நிகழ்ச்சி. காவியுடைதரித்தபௌத்த முனிவர்களான பொங்கிகளுக்குப் 'பிட்சை'யிடும் சம்பவத்தைத்தான் அவர்கள் அப்படிச் சொல்வார்கள்.

அப்படிப்பட்டதொரு நாளிலே, நாச்சியப்பன் 'பன்னு'வைப் போட்டுக்கொண்டு மாலோஹினைத் தேடிச் சென்றார். பெகு, தாராவடி, மாண்டலே, டோங்வா, மோல்மீன், இரங்கூன், ப்ரோம் பின்மனா ஆகிய பகுதிகளில் ஜப்பானியர்கள் ஆடிய கோரத் திருவிளையாடல்களைப் பற்றிச் சொன்ன பத்திரிகைச் செய்திகள் அவரது நெஞ்சின் அடிவாரத்தில் எதிரொலி பரப்பின. 'மூச்சு விடாமல் மரக்கடையை நம்ப பெரியாத்தா மகன் கிட்ட ஒப்படைச்சிப்பிட்டு, செட்டிநாட்டுக்குப் போயிற வேண்டியதுதான். நிலைமை சீர்ப்பட்டதும், ரங்கூன் முகல் வீதிக்குப்போய் 'ஆறுறை'யிலே சொக்கலிங்க அண்ணனைக் கண்டு தண்டி காரியத்தை முடிச்சுப்பிட்டாத்தான் சிலாக்கியமாயிருக்கும்' என்று எண்ணப் பூக்கள் மனமெனும் நாரில் கனவு மாலை தொடுத்தன. அதே கணம், பர்மாவிடமிருந்து ஏற்படப் போகும் பிரிவை நினைத்ததும், அவருக்கு நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது. போர்ப் பின்னணியில் உழன்று மரக்கடைத் தோட்டத்தில் மனம் தவித்துக் கொண்டிருக்கையில் தாம் பட்ட பாட்டை நினைத்தார்; நோக்குமிடம் எங்கணும் தோன்றித் தோன்றி மறைந்த அந்த எழில் உருவைப் பற்றிச் சிந்தித்தார். அறு நாட்களை மனப் புழுக்கத்தில் செற விட்டு ஏழாம் நாள் பொழுது பட்



பூவை எஸ். ஆறுமுகம்



''எனக்கு ஒருவர் நூறு ரூபாய் தர ணும். அதற்குப் பதிலாக இந்தச் சைக்கிளைக் கொடுத்துட்டார்!''
''உம்! மீதி 99 ரூபாய்க்கு அவர் என்ன பதில் சொல்லுகிறார்!''

டதும் நாச்சியப்பன் புறப்பட்டார். அப்போது, மாலோஹின் பொங்கிக்குப் பிச்சை ஈந்து உள்ளே நுழைந்தாள்.

'' மாலோஹின் !''

அழைப்பைக் கேட்ட கையுடன். கைகூப்பி வணங்கினாள் பர்மிய அழகி.

நாச்சியப்பனின் இளம் உள்ளம் ஆனந்தக் கடலாடியது. நெற்றியில் இடப்பட்டிருந்த சந்தனப்பொட்டில் ஊர்ந்தாடியது சுருள் கேசம். அதை விலக்கியவாறு, பதிலுக்கு வணங்கினார். கொடுத்த பழங்களை உரித்தார்; 'கவனரசி' பொங்கலைச் சுவைத்தார்; தேநீரை அருந்தினார். ''ஸிலே!'' என்று கூறி, சுருட்டைக் கொடுத்தாள் அவள். புகைச் சங்கிலி விண் முட்டி எழுந்தது. 'மெய்ம்மா ஜங்லி'யைச் சீர்ப்படுத்திக் கொண்டு முக்காலியில் வந்து அமர்ந்தாள் மாலோஹின். அவளை ஆழ்ந்த அமைதி கொண்டு நோக்கினார் நாச்சியப்பன். வண்ணமலர்ப் பூங்காவில் வாசமிகு நறுமணமலர்களை நோக்கி இன்பமடைவதைப் போன்ற 'தூய உணர்வு' அவருள் பிறந்தது. அவள் நகை முகம் ஏந்தி வினாக்கள் விடுத்தாள்; அவர் பதிலிறுத்தார். பர்மிய மொழிக்கு அவர் மனம் நன்றி கூறியது.

'மாலோஹின் ஓர் அனாதை! அவளுடைய பெற்றோர்கள் பதினைந்து தினங்களுக்கு முன் ஜப்பான் குண்டுகளுக்குப் பலியாயினர்! பஜாரில் விளையாட்டுச் சாமான்கள் செய்து வயிற்றைக் கழுவி வருகிறாள்!'

ஆறாத் துயரத்தின் மேல்தளத்தில் பொங்கி வழிந்த அந்தப் பரிசுத்தமான அன்பு நாச்சியப்பனுக்குத் தெய்வமெனத் தோன்றியதில் சிறிதும் வியப்பில்லை.

'நான் ஒரு 'கல்லா'—இந்தியன்; என்றாலும் இந்த எழிற்பாவைக்குத்தான் என்பேரில் எத்துணை ஈடுபாடு!'

இந்த ஓர் உட்குறிப்பை மேலும் நன்முறையில் நிதர்சனமாக நிரூபிப்பது போல, அவர்களது அறவழிச் சந்திப்புக்கள் நடந்தன.

அன்று 'திஞ்சான் பண்டிகை!'—அதாவது, தண்ணீர்த் திருவிழா. சித்திரைத் தொடக்கத்தில் நடந்தது அவ்விழா. பர்மாவில் வாழும் பர்மியர்களால் கொண்டாடப்படுகின்ற இப்புனித நந்நாளிலே, மற்றவர்களுக்கும் பங்கு கிடைக்கும். இருளடைந்த அன்றைய அரசியல் சூழலில், அது ஒளிகாட்டும் புண்ணிய விழாவல்லவா? வர்ணத் தண்ணீர் இறைத்து விளையாடும் கோலத்தைக் கண்ட நாச்சியப்பனுக்குத் தம் இனத்தவரிடையே திருமண வினையின்போது நிகழும் 'மஞ்சள் நீராடல்' நினைவில் எழுந்தது.

''மாலோஹின்!''

நாச்சியப்பன் அன்புக் குரல் எடுத்து அழைத்தார். நீர் கசிந்த உடைகளுடன் நாணம் பூத்த பூவையென உள்ளே ஓடி, ஒரு விநாடிப் பொழுதைத் தன் உடை மாற்றத்துக்கு உடைமையாக்கிக் கொண்டு மீண்டாள். அது சமயமே அவருக்கும் உயிர் மீண்டது.

மாலோஹின் சிரித்த வண்ணம் தின்பண்டத் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள். பிறகு, 'தண்ணீர்த் திருவிழாப் பரிசாக' அழகு பொதிந்த பர்மாக் குடையொன்றையும் நாச்சியப்பனிடம் நீட்டினாள். அப்போது அவள் நயனங்களினால் தெரிந்த அந்தத் தெளிந்த பண்பையும் நிறைந்த அன்பையும் அவரால் எப்படி மறக்கக் கூடும்? வளப்பம் படைத்த ஐராவதி நதியை, வளம் கொண்ட பர்மா நாட்டின் பசுமை வயல்களை எழில் காக்கும் 'அராகான்யோமா' மலைத்தொடரை ஓரிடத்தில் சந்திக்கச் செய்து பார்த்தது போல, நாச்சியப்பன் ஆனந்தக் கூத்தாடினார். அப்போது, ஜப்பானியச் செலாவணியில் இருந்த மதிப்பு மிகுதியாகக் கொண்ட நாணயங்களையும் 'நோட்டு'க்களையும் பட்டுப் பையில் போட்டுக் கட்டி, தம்முடைய அன்புப் பரிசிலாக அவளிடம் சமர்ப்பித்தார் அவர்.

மாலோஹின் அடைந்த பெரு மகிழ்வுக்கு வரம்பே கிடையாது. ''நான் உங்கள் விசேஷ தினமான தீபாவளியன்று உங்களுக்கு ஒவ்வொரு வருஷமும் கட்டாயம் பரிசளிப்பேன்!'' என்று மொழிந்தாள் அவள். அவளது சிவப்பு முகம் மேலும் சிவந்தது. கொண்டை முடிந்து வலை சுற்றி, சீப்பு வைத்திருந்த கரிய தலை முடியின் மேற்பரப்பில் அவளது தங்க விரல்கள் தெரிந்தன. அவளை அவர் பார்த்தபோது, ஏனோ அவள் நாணம் மிகக் காட்டி, தலை குனிந்துகொண்டாள்!

நாச்சியப்பனுக்கு உலகம் ஒரு விளையாட்டுப் பொம்மையாக இருந்தது; ஆனால், உலகமோ அவரைத் தாலாட்டுப் பொம்மையாக்கப் பார்த்தது. இதற்குக் காரணம், 'விதி'யின் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையென்றால் தமிழரான நாச்சியப்பனின் நெஞ்சத்திலே பர்மியப் பெண் மாலோஹின் இடம் பெற முடிந்திருக்குமா? 'மணந்தால் மாலோஹினைத்தான் நான் மணப்பேன்!' என்ற முடிவு உருவானது; உருவாக்கினார்


தளதளக்கும் ஈனோ
★ ஜீரண உறுப்புக்களை சுத்தம் செய்கிறது
★ சுறுசுறுப்பு அளிக்கிறது
★ வயிற்றுக் கோளாறுகளை சரிப்படுத்துகிறது
உல்லாசமூட்டும் புத்துணர்ச்சியை அளிக்கிறது
ENO
SPARKLING ANTACID
'FRUIT SALT'
ஈனோ
'ப்ரூட் ஸால்ட்'
அருந்துங்கள்
'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்
லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்


ஆனந்தம் தரும்
சாக்கலேட்
நாவல்டீகள்
பலவிதமான தித்திப்புத்
தின்பண்டங்களில் ஒன்று
தயாரிப்பாளர்கள்
மார்ட்டன்ஸ்
ஸி. & எ. மார்ட்டன் (இந்தியா) லிட்.


அழகிற்கு
ஆரோக்யத்திற்கு
வஸந்த்
சந்தன
சோப்
Vasant
Sandal
Soap
தி வஸந்த் சோப் ஒர்க்ஸ் லிட்.,
மதராஸ் & வஸந்த்நகர்.


தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்
பெப்ஸ் வில்லைகளை
உட்கொண்டால், உங்கள் இருமல்
உடனேயே அகலும்
பெப்ஸ் வில்லை ஒன்றைச் சுவைத்து ஆவி போன்ற அதன் சத்து குணமளிக்க வேலை செய்வதை உணருங்கள். வலியைக் குறைக்கவும், தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமாகிய கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது. பெப்ஸ் உடனடி நிவாரணம் அளித்து விரைவில் குணமடையச் செய்கிறது.
பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.
PEPS
for
COUGHS
COLDS
FPY-54-TAM
ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்
சோல் ஏஜண்டுகள் தாதா அண்டு கம்பெனி
86 னைனியப்ப நாயக் தெரு சென்னை - 2

அவர். பர்மா நாட்டில் பிழைக்க வந்த தம் நண்பர்களில் இரண்டொருவர் பர்மியப் பெண்களைத் திருமணம் புரிந்திருந்ததையும் அவர் அறிவார். ஆகவே, அவர்களை நாடினார். தேவகோட்டை குழ. பழ. பெரியண்ணன் செட்டியார் அவருக்கு உற்றவர், உதவினார். மாலோஹினுக்கும் நாச்சியப்பனுக்கும் இடையே தூது சென்றார். அவள் ஒப்பினாள். அவர் உவகை எய்தினார்.

மாலோஹினுக்கும் நாச்சியப்பனுக்கும் 'மிங்களாஸம்' — கல்யாணம் நடப்பதென்று முடிவாயிற்று. அன்று இரவு வீட்டில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார் நாச்சியப்பன். பட்டு 'லுங்கி' வகைகள் கண்ணாடி பீரோவில் அழகு காட்டின. மாலோஹின் அணிந்து கொள்ள வைர அட்டிகை காத்திருந்தது. 'சுவா ஆயே பயா'வுக்குச் சென்று வணங்கிப் பிரார்த்தித்துத் திரும்புங்கால் எடுத்துக் கொண்ட புகைப்படம் சிரித்தது. மாலோஹின் எட்டு வகையான கோணங்களில் எழில் சேர்த்தாள்!


நடுநிசி. பொங்கி மடத்திலிருந்து மணியோசை மிதந்து வந்தது. அப்பொழுது, ஏதோ அரவம் கேட்கவே, நாச்சியப்பன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார். மறு விநாடி, அவரது கழுத்தில் தொங்கிய 'மைனர் சங்கிலி'யை முரட்டுக் கரம் பற்றியதைக் கண்டு பதைபதைத்தார்: இன்னொரு கையில் 'இரங்கூன் பட்டாக்கத்தி' மின்னியது.

நாச்சியப்பன் தலையை நிமிர்த்தினார்: "ஆ!... கோபாங்குவே!..." என்று தடுமாறினார். வட்டிக்குப் பணம் 'தண்டி'ச் செல்லும் பல பர்மியர்களிடையே கோபாங்குவே ஒருவன்: ஆனால் அவன் இத்தகைய பயங்கரக் கோலம் புனைந்து வருவானேன்?

"இப்பொழுதுதான் எனக்குச் சேதி எட்டியது. இப்பொழுதே நீ மாலோஹினை மறந்து விடவேண்டும். அவள் எனக்கு உரிமையானவள்! நீ நாளை விடிவதற்குள் பர்மாவிலிருந்தே ஓடிப்போய்விட வேண்டும். இல்லையேல், என் கத்தி உன்னுடைய உயிரைக் குடித்துவிடும்!" என்று உறுமினான் கோபாங்குவே. தலையில் முடிந்து வரிந்திருந்த துண்டின் நிறம் கூடவா ரத்தச் சிவப்பு காட்ட வேண்டும்?

நாச்சியப்பனுக்கு எல்லாம் கனவாகவே தோன்றியது. ஆனால் அவரது கனவான மாலோஹினை மட்டும் அவர் மறக்கத் துணியவில்லை. பர்மியப் போக்கிரியின் கத்திக்கு முன் தம் தலையை நீட்டி, "ம்! நீ என்னைக் கொன்று விடு!" என்று கூறினார். அந்தக் கணம், தேவகோட்டை பெரியண்ணன் செட்டியார் மட்டும் தெய்வாதீனமாகத் தோன்றியிரா விட்டால், அப்போதே நாச்சியப்பனின் ரத்தம் கோபாங்குவேக்குப் பலியாகிப் போயிருக்கும்!

பர்மாவில் இடவுங்காளிலிருந்து தேவகோட்டை பெரியண்ணன் செட்டியார்



சிரிக்காதே!

குழந்தை பதில்!

வீட்டில் விசேஷத்துக்காக ஹல்வா செய்து தாயார் வைத்திருந்தாள். சிறு குழந்தைகள் தின்பதற்குக் கேட்டபோது தாயார் 'கடவுளுக்கு நைவேத்தியம் செய்த பிறகுதான் தின்னலாம்!' என்று சொல்லி மூடிவைத்து விட்டாள். குழந்தைகள் தாயாருக்குத் தெரியாமல் ஹல்வா முழுவதையும் தின்று தீர்த்து விட்டன. இதையறிந்த தாயார் குழந்தைகளைக் கடிந்தாள்.

"சரி! நைவேத்தியம் செய்யும்போது கடவுளே அவற்றைத் தின்று விட்டால் நீ அவரைச் சும்மா விடுவாயா? நாங்கள் மாட்டிக் கொண்ட மாதிரி அவரும் தினறிப் போக மாட்டாரா? அதுதான் அவர் நேரில் வந்து சாப்பிட்டு விட்டுப் போவதில்லை!" என்றார்கள் குழந்தைகள்.

காரணம் புரிந்தது!

"ஏண்டா அழறே?"

"அப்பா நாற்காலி மேலே நின்னு படம் மாட்டினார்....ஆ....ஊ..."

"அதுக்கு நீ ஏண்டா அழறே?"

"மாட்டிக்கிட்டு இருக்கிறபோது நாற்காலியோடு கீழே விழுந்தார்...."

"பாவம்! இன்னொரு குழந்தையா இருந்தா அதை வேடிக்கையா நினைச்சுச் சிரிச்சுடும்...!"

"நானும்தான் சிரிச்சேன்!"

"அப்புறம்?"

"அப்பா என்னை அடிச்சுட்டார்..... ஆ....ஆ!"

அசடு!

ஒரு ரயில்வே ஸ்டேஷனில் நிறை பார்க்கும் யந்திரத்தில் ஒருவர் அணாவைப் போட்டார். உடனே ஒரு சின்னக் கார்டில், "உங்கள் பெயர் ராமன். உங்கள் நிறை 140!" என்று வந்தது. 'அட! இது என்ன அதிசயம்! மறுபடியும் ஏறி நின்று போட்டுப் பார்க்கிறேன்' என்று மற்றும் ஒரு அணாவைப் போட்டார். மறுபடியும் ஒரு கார்டு வெளி வந்தது. 'உங்கள் பெயர் ராமன். நிறை 140' என்று வந்தது. பக்கத்தில் நின்றவர் அதைப் பார்த்துத் தாமும் ஒரு அணாவைப் போட்டார். 'உங்கள் பெயர் ஆறுமுகம். உங்கள் நிறை 112" என்று வந்தது. இதைப் பார்த்த ராமன் மறுபடியும் ஒரு அணாவைப் போட்டார். கார்டும் வந்தது. "அட, அசடே! உம் ரயில் போய் விட்டது. நீர் வீடு திரும்ப வேண்டியதுதான்!' என்று கார்டில் கண்டிருந்தது.

ஊருக்கு வந்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. நாச்சியப்பனுக்கு அளவு கடந்த சந்தோஷம் ஏற்பட்டது. 'இத்தனை வருஷமாக தீபாவளிப் பரிசுகளைத் தவறாமல் எனக்கு அனுப்பிவந்த மாலோஹின் இம்முறை மட்டும் வராததற்குப் பெரியண்ணன் செட்டியாருக்கு ஏதாவது காரணம் தெரிந்திருக்கும். உடனேயே அவரை இங்கு வரவழைத்துவிட வேண்டும்!' என்று எண்ணிக் கொண்டார் நாச்சியப்பன்.

ஆண்டுகள் சிலவற்றினை உண்டு ஏப்பம் விட்ட காலத்துக்கு, நாச்சியப்பனிடமிருந்து மாலோஹினைப் பிரிக்க முடிந்ததே தவிர, அவள் நினைவை அவரிடமிருந்து விலக்கிவிட முடியவில்லை. கோபாங்குவேயின் உருவில் விதி ஆடியதுதான் கதை:

கோபாங்குவேயின் குறி இருமுனை கொண்டு இலங்கியது. ஒரு முனையில் மாலோஹினின் அழகு ஊஞ்சலாடியது; மறு நுனியில் நாச்சியப்பனின் உயிர் ஊசலாடியது. நாச்சியப்பன் அன்றிரவே அங்கிருந்து வெளியேறாது போனால் அவரதுஉயிருக்குக் கோபாங்குவே உலைவைத்து விடுவான் என்பதைப் பெரியண்ணன் திர்க்கமாக அறிந்தார். அன்றிரவே நாச்சியப்பன் புறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினார். தம் பொறுப்பில் மூன்று நாள் தவணை கோரிக் கோபாங்குவேயிடம் யாசித்தார். அறுபதாயிரம் பெறுமானமுள்ள மரக்கடை, நிலுவைக் கணக்கில் பாக்கி நின்ற நாற்பதாயிரம், மரம் அறுவையில் தேங்கிய ஐம்பதாயிரம் ஆகிய 'இனங்'களுக்கு நாச்சியப்பன் வகை செய்ய வேண்டுமல்லவா? இனி நாச்சியப்பன் மாலோஹின் வழிக்கு வரமாட்டார் என்பதற்கும் தாமே பிணையாகி நின்றார். ஆனால், எல்லாம் முடிந்து, ஊருக்குப் புறப்படும் வேளையில் ''ஒருமுறை மட்டும் மாலோஹினை பார்த்து விட்டுப் போய் விடுகிறேன்! ஏற்பாடு செய்யுங்கள்!'' என்று விம்மினார் நாச்சியப்பன். வள்ளிமணாளனின் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டு, அவரது கடைசி ஆசை வேண்டுகோளை நிறைவேற்றினார்.

''நான் உங்களை என்றுமே மறக்க மாட்டேன். உங்களுக்கு என்னுடைய தீபாவளிப் பரிசுகள் என் ஆயுள் உள்ளவரையில் வந்து கொண்டேயிருக்கும்!'' என்று விம்மினாள் மாலோஹின். இந்தச் சொற்களை அவர் எங்ஙனம் மறப்பார்? இவையல்லவா அவரை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன!

நாச்சியப்பனிடமிருந்து இளமை விடை பெற்றது. சமையற்காரன் காசியைத் தவிர ஊரும் உலகமும் நாச்சியப்பனைப் 'பைத்தியக்காரன்!' என்றே முடிவு கட்டின. அவருடைய மனக் கோயிலில் தெய்வமாக வீற்றிருந்தாள் மாலோஹின் ஆகவே அவர் திருமணத்தைப் புறக்கணித்தார். நான்கு தலைமுறைக்குக் காணக்கூடிய சொத்துக்களை என்ன செய்யப் போகிறார் என்று ஊர் வாய் முணுமுணுத்ததை அவர் அறியார். ஆனால் அதற்கும் ஓர் ஏற்பாடு செய்தார். 'என் சொத்தில் பாதியைத் தர்மத்துக்கும் மிகுதியை மாலோஹினுக்கும் பிரித்துக்கொடுக்கப் பெரியண்ணன் செட்டியாரிடம் ஏற்பாடு செய்ய வேண்டும்!' டாக்டர் வந்து போனார்; ஊசியின் வலி கை நரம்புகளில் நெறி கட்டச் செய்தது. பர்மியர்களின் கோயில், நெற்கதிர் வயல்கள் கொண்ட சின்னங்கள் அடங்கிய தபாற்தலைகள் சில நாச்சியப்பனின் முன் பறந்து வந்தன. ''இந்தத் தடவை மாலோஹின் ஏன் பரிசு அனுப்பவில்லை? ஒருவேளை......ஒருவேளை அவள்......? கொப்புடை நாயகித் தாயே! மாலோஹினை எங்கிருந்தாலும் காப்பாற்றுவாயல்லவா?'' என்று வேண்டினார் நாச்சியப்பன்.

★

தேவகோட்டை பெரியண்ணன் செட்டியாரைக் கண்ட சமையற்காரன் காசிக்கு வாயெல்லாம் பல்லானது! இளங் கதிரொளியில் இருவரும் நின்றனர்!

''நாவன்னா எப்படி இருக்காக?'' என்று கேட்டார் பெரியண்ணன். அவருடைய கையிலிருந்த பூப்போட்ட 'பர்மாப் பை'யில் விலையுயர்ந்த துணிகளும், கைக் கடிகாரமும் முடங்கின.

''பர்மாவிலேயிருந்து எப்பவும் வருகிற மாதிரி இந்த வருஷம் தீபாவளிப் பரிசு எதுவும் வரலே. மனசொடிஞ்சு படுத்த படுக்கையாகிப் பிட்டாங்க!'' என்றான் சமையற்காரன் காசி.

''காசி! நாச்சியப்பனது நிலவரம் முழுவதையும் அறிந்த உனக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய மாபெரும் ரகசியம் இது. மாலோஹின் பர்மியப் பெண்களிலே ஓர் அதிசயமான பெண். தன்னை அடையக் கங்கணம் கட்டிய கோபாங்குவேயை மணம் புரிந்து கொள்ள மாலோஹின் ஒப்பவில்லை. காரணம், அவள் மனத்தில் நாச்சியப்பனே இருந்தார். ஆகவே, நாச்சியப்பனின் இன்ப நினைவுடனேயே அவள் இராவதிக்குப் பலியானாள். அடுத்த நாள் அவள் எனக்கு அனுப்பி வைத்த கடிதத்தில், நாச்சியப்பனுக்குத் தன்பேரில் வருஷா வருஷம் தீபாவளிப் பரிசு அனுப்பி வைக்குமாறு வேண்டியிருந்தாள். பர்மியப் பெண் ஒருத்தி தமிழன் நினைவில் மாண்டதும், தமிழன் ஒருவன் பர்மியப் பெண் ஒருத்தியின் நினைவில் பிரம்மசாரியாகக் காலங் கழிப்பதும் உண்மையிலேயே ஒரு விந்தைதான்! ஆமாம், விட்ட குறை-தொட்ட குறையின் விளைவுதான் இது! காசி, இம்முறை மட்டிலும் என் கடமையில் சிறிது தாமதம் ஏற்பட்டது. எனக்கு உடல் நலமில்லை; அத்துடன் என் பயணம் வேறு. நாச்சியப்பனின் உயிர் உடலில் ஒட்டியிருக்கும் வரை மாலோஹின் வேண்டுகோளை நான் கட்டாயம் நிறைவேற்றுவேன். இந்த ஓர் ஆறுதலாவது நாச்சியப்பனுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கட்டும்!... இதோ பார், இந்தப் பையிலுள்ள பொருள்கள் என்ன தெரியுமா? எல்லாம் உன் முதலாளி நாச்சியப்பனுக்கு மாலோஹின் அனுப்பிய தீபாவளிப் பரிசு!'' அவர் விழிகளைத் துடைத்துக் கொண்டார்.

அதே தருணம், ''ஐயோ மாலோஹின்!... ஐயோ மாலோஹின்......!'' என்று அலறியபடி நாச்சியப்பன் சாய்ந்தார்!

சமையற்காரனும் பெரியண்ணன் செட்டியாரும் திசை திரும்பினார்கள்.

நாச்சியப்பனின் 'வெறுங் கூட்டை'ச் சுற்றிலும் அவருக்குரிய தீபாவளிப் பரிசுப் பொருள்கள் சிதறிக் கிடந்தன!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10
Managing Editor, T. Sadasivam.


பளபளப்பான
நீண்ட கரும்
கூந்தலழகுக்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
இப்பொழுது அழகான இப் புதுமாதிரி சீசாவில்
ரோஜா அல்லது மல்லிகை
மணத்துடன் கிடைக்கிறது.
ERASMIC PERFUMED COCONUT HAIR OIL
ECHO. 4A—50 TM
லண்டனிலுள்ள இராஸ்மிக் கோ. லிட்., சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon